**ஸ்ரீ குருப்யோ நம:**

## முன்னுரை


வேதாந்தத்தின் பிரபலமான ஐந்து சித்தி கிரந்தங்களான நைஷ்கர்ம சித்தி , சுவராஜ்ய சித்தி , பிரம்ம சித்தி, இஷ்ட சித்தி மற்றும் அத்வைத சித்தி ஆகியவைகளில் மிகவும் பிரசித்தி பெற்றதான **ஸ்ரீ சுரேஷ்வராச்சாரியாரின் நைஷ்கர்ம்ய சித்தி**, அவருக்கு கர்ம காண்டத்தில் முன்னர் இருந்த பற்றினால் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பாஷ்யத்திற்கு அவர் எழுத இருந்த வார்த்திகத்தில் அதன் ஆதிக்கம் இருக்கலாம் என்ற மற்றவர்களின் சந்தேகத்தினை நீக்கும் பொருட்டு குருவின் ஆணைக்கேற்ப ஞானத்தில் கர்மத்தின் அவசியமற்ற தன்மையை நிரூபிக்க எழுதப்பட்டது சமஸ்கிருதம் அறியாதவர்களும் அதனை கற்றறியும் பொருட்டு **சித்திலஹரி** எனும் இந்த விளக்கவுரையானது எழுதப்பட்டது.

.

இந்த கிரந்தம் வெளிவர உதவிய எல்லோருக்கும் இறைவனின் பரிபூர்ண ஆசிகள் உண்டாகட்டும். ஆஸ்த்திக அன்பர்கள் இதனை முறையாக படிக்க முயற்ச்சிக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

**ரிஷிகேஷ்** **ஆசிரியர்**
**தியாக தினம்**
15-03-2006

# <u>ஸ்ரீ குருப்யோ நம:</u>



**'திராவிடாசாரியார்'** என்று அறியப்படும் **ஸ்ரீ இராமகிருஷ்ணன் ஸ்வாமிஜி** அவர்கள் 1972 ம் ஆண்டு தமிழ்நாட்டில் திண்டுக்கலில் அவதரித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜீ வளர்ந்தது, படித்தது கணிப்பொறி நிறுவனத்தினை நடத்தியதும் சென்னையில் என்று இருந்த நிலையில் ஆன்மீக நாட்டத்தால் 1997 ம் ஆண்டு மார்ச் மாதம் இமாலயத்திற்க்கு வந்தார். அதன்பின்னர் வேறு எங்கும் செல்லாது முழு மூச்சாக யோகீஷ்வரரான **ஸ்ரீ சாந்தி தர்மானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் சமஸ்கிருத வியாகரணம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வ மீமாம்ஸை, காஷ்மீர சைவ சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தின் பிருகத் பிரஸ்தான த்ரயத்தையும் (சித்சுகி , அத்வைதசித்தி, கண்டனகண்டகாத்யம் ) , அன்னாரது சிஷ்யர் விரக்த சிரோமணி **ஸ்ரீ சர்வேஷானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் பிரஸ்தான த்ரயத்தையும் (பகவத் கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம்) கசடற கற்றார். ஸ்ரீ ஸ்வாமிஜீ பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவரும் ஆவார். கற்று தருவதில் எந்த நாட்டமும் இல்லாத ஸ்ரீ ஸ்வாமிஜீ குருவின் ஆணைக்கிணங்கி சாஸ்திரங்களை, தமிழ் நாட்டிலும் கூட முறையாக இல்லாத நிலையில், ரிஷிகேசத்தில் கிரமமாக தமிழில் போதிக்கின்றார். அதுமட்டுமல்லாது , எளிய தமிழில் எல்லா சாஸ்திரத்திற்க்கும் உண்டான அடிப்படையான நூலினை தெளிவாக விளக்கியருளியிருக்கிறார். குருந்தட்டிலும் படிப்பிக்கும் முறையில் பதிவாக்கி வெளியிட்டுள்ளார்.

# ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ ஸ்வாமிஜீ தமிழில் இயற்றிய நூல்கள் -

1. **வியாகரணம்** (இலக்கணம்) - ஸ்ரீ வரதராஜரின் லகுசித்தாந்த கௌமுதி லகுலஹரி விளக்கவுரையுடன்

2. **சாங்கியம்** - ஸ்ரீ ஈஷ்வர கிருஷ்ணரின் காரிகைகளும் கௌடபாத பாஷ்யமும், சாங்கிய லஹரி விளக்கவுரையுடன்

3. **யோகம்** - ஸ்ரீ பதஞ்சலி முனிவரின் சூத்திரங்களும் வியாச பாஷ்யமும் யோக லஹரி விளக்கவுரையுடன்

4. **தர்க்கம்** - ஸ்ரீ அன்னம்பட்டரின் தருக்க சங்கிரகமும் ஸ்ரீ சந்திரஜ சிங்கரின் பதகிருத்யமும், தர்க்க லஹரி விளக்கவுரையுடன்

5. **பூர்வமீமாம்ஸை** - ஸ்ரீ லௌகாக்ஷி பாஸ்கரரின் அர்த்த சங்கிரகம் அர்த்த லஹரி விளக்கவுரையுடன்

6. **சிவ பஞ்சாக்ஷரி பாஷ்யம்** - ஸ்ரீ சுரேஷ்வராச்சாரியாரின் பாஷ்யம்

7. **வேதாந்தம்**

- ஸ்ரீ சுரேஷ்வராசாரியாரின் நைஷ்கர்ம்யசித்தி சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ கங்காதரேந்திர சரஸ்வதிகளின் சுவாராஜ்யசித்தி த்விதீய சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ தர்மராஜ அத்வரீந்திரரின் வேதாந்த பரிபாஷை வேதாந்த லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாதனா பஞ்சகம் சாதனோபதேஷ லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாந்தோகிய உபநிஷத் பாஷ்யம் முதல் அத்யாயம்

.

ஸ்ரீ குருப்யோ நம:

பதிப்பு - 2006

கிடைக்குமிடம்

**ஷாஸ்திர நேத்திராலயா**
நெ 1. ஆத்ம விஞ்ஞான பவன்
பாபா காளி கம்பளி
ராம் நகர்
பசுலோக் போஸ்ட்
ரிஷிகேஷ், இமயமலை

**Shasthra Nethralaya**
No 1. Atma Vigyana Bhavan
Baba Kali Kambli
Ram Nagar
Pasulok Post
Rishikesh, Himalayas

ஸ்ரீ குருப்யோ நம:

( ஆச்சாரியவான் புருஷோ வேத –
குருவை உடையவர் ஞானத்தை அடைகின்றார் )

# நைஷ்கர்ம்யசித்தி

**ஶ்ரீ அருணாசலாய நமோ நம: ஸாபீதகுசாம்பாய |**
**யஸ்ய க்ருபாலேஷ: ப்ராப்தாய பூயோபூயோ ப்ரணமாம்யஹம் ||**

**ஶ்ரீ அருணாசலனுக்கு** வணக்கம். உண்ணாமுலையுடன் கூடியவருக்கு வணக்கம். எவருடைய கிருபை சிறிது கிட்டவே மீண்டும், மீண்டும் நான் நன்றாக வணங்குகிறேன்.

**ஶ்ரீமத் ஷங்கரம் ஷாங்கரம் ச யதத்வைத ரஸம் பிபந்தம் |**
**தத் நிதராம் பாந்தயே ஹ்ருதிம் கரோமி பூஜித விசாரம் ||**

**ஶ்ரீ சங்கரரும்** அவருடைய சீடர்களும், எந்த அத்வைத ரசத்தை பருகினார்களோ, அது நிரந்தரமாக என் ஹ்ருதயத்தில் விளங்கவே நான் இந்த மேன்மையான விசாரத்தை தொடங்குகிறேன்.

**நத்வா ஶ்ரீ ஷாந்தி தர்மானந்த சர்வேஷாநந்த யதீஷ்வரௌ |**
**வ்யாக்யேயம் நைஷ்கர்ம்யசித்யாயாம் க்ரியதே மனன பூர்வகம் ||**

சந்நியாஸிகளில் சிறந்தவர்களான **ஶ்ரீ சாந்தி தர்மானந்தா** அவர்களையும், **ஶ்ரீ சர்வேஷானந்தா** அவர்களையும் வணங்கி **நைஷ்கர்மியஸித்திக்கு** இந்த உரையை மனனத்துடன் கூடியதாக என்னால் செய்யப்படுகிறது.

## அத்யாயாம் - 1

நான்முகன் முதல் சிறிய ஜீவன் (பூச்சி) வரை எல்லா உயிரினங்களுக்கும் எல்லா வகையான துன்பத்திலிருந்தும் விடுதலையாகும் விருப்பம் தன்னிச்சையாகவே இருப்பதினால், அதன் பொருட்டு தன்னிச்சையாகவே முயற்சியும் இருக்கவே செய்கிறது. துன்பங்களுக்கு

காரணம் இந்த உடம்பானபடியால் , உடம்பும் முந்தய பிறவிகளின் புண்ய, பாப வினைகளினால் ஆனபடியால் முடிவு தெரியவில்லை. புண்ய பாபங்களுக்கும், வேதத்தில் சொல்லப்பட்டதும், நிந்திக்கப்பட்டதுமான கர்மங்கள் மூலமாக இருப்பதினால் விடுதலை சுலபமானதாக இல்லை. கர்மங்களுக்கும் விருப்பு, வெறுப்பு காரணமானதால், விருப்பு வெறுப்பும் , நல்லது, தீயது என்ற எண்ணத்தினால், அந்த எண்ணத்திற்கும், விசாரமின்மையால் உண்டான இந்த துவைதமான பொருட்கள் காரணமானதால், துவைதத்திற்கும் சிப்பியில் வெள்ளியை தவறாக பார்ப்பது போல எல்லோருக்கும் தானே ஒளிர்கின்ற அந்த இரண்டற்றதான ஆத்மாவை பார்காதது மாத்திரமே காரணமாக இருப்பதால் விலக்க முடியததாக இருக்கிறது. அதனால், எல்லா துன்பங்களுக்கும் மூலகாரணமாக இருப்பது ஆத்மாவை அறிது கொள்ளாதது தான். சந்தோஷமும், போவது-வருவதில்லாத நம்முடைய ஆத்மாவின் இயல்பாக இருப்பதினால் அதை உணராததே மூலமாக இருக்கிறது. அதனால், அதன் (மூடலின்) விலக்கலே எல்லா தேடலும் தீரும் இடமாக இருக்கிறது. அஞ்ஞான விலக்கலே நாம் உண்மையான ஆத்ம ஞானத்தை அடைவதற்கு ஒரே காரணமாக இருப்பதினால் அதுவே கைக்கொள்ள வேண்டியதாகிறது. முழுவதுமாக எல்லா தீர்வுகளுக்கும் காரணமாக இருக்கும் ஆத்ம ஆஞ்ஞானம் வேதாந்த சாஸ்த்திரத்தை விடுத்து வேறு பிரத்தியக்ஷம் (நேரிடையான) முதலான ப்ரமாணங்களின் (ஞானம் அடைய சரியான கருவி) விஷயமாக இல்லாததால் (ஆகாததால்), வேதாந்த சாஸத்திர வாக்கியத்தினால் மட்டுமே சரியான ஞானம் கிட்டும். அதனால், வேதாந்தத்தின் முழுமையான சாரத்தின் கூட்டான இந்த பிரகரண கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது.

இங்கு கூறப்படும் விஷயம் எல்லோராலும் கற்கவும், கற்பிக்கபட வேண்டி விருப்பம் கொண்டும், இந்த கிரந்தத்தின் விஷயத்தை சுருக்கி கூறவும், இந்த முதலி சுலோகத்தை சொல்கிறோம்.

ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் நிலம் ஆகியவை மாலையில் பாம்பை போல எதிலிருந்து வந்ததோ, அந்த அஞ்ஞானத்தை அழிப்பவரான, புத்திக்கு சாக்ஷியாக விளங்கும் ஹரிக்கு வணக்கமுரித்தாகுக. -1

தன்னுடைய பரம்பரையினாலும் - பிரமாணத்துடன் கூடியதை

காட்டவும் விசேஷமான குணங்களை கூறுவதின் வழியாக குரு நமஸகார செயல்ரூபமான சுலோகம்.

எவரில் பெறுமையை அடையாமல் பெறுமையை கூறும் ( முதன்மை குறிக்கும்) **தமம்** முதலான விருத்திகள் இருக்கிறதோ, அந்த **அவித்யா** (அறியாமை) முடிச்சுகளை விலக்கும் மேன்மையான குருவுக்கு வணக்கங்கள். - 2

எந்த காரணத்தினால் நமஸ்காரம் செய்யப்பட்டதோ அதை கூறுகிறோம்.

வேதாந்தத்தினுள்ளே புதைந்திருக்கும் சம்ஸாரத்தை அழிக்ககூடிய ஆத்ம ஞானத்தை மற்றவர்களால் கூறப்பட்டிருப்பினும் குருவின் உத்தரவின் பேரில் கூறுகிறோம். -3

எந்த விஷயத்தை முதற்கொண்டு இந்த பிரகரணம் என்றால், அதை கூறுகிறோம்.

எதை அறிவதனால் இது என்று கூறப்படும் அனைத்தும் அறியப்படுகிறதோ, எதை அறியவில்லை என்றால் எதுவும் அறிவில்லையோ, ஒவ்வொருவரிலும் இருக்கும் அந்த சாக்ஷியின் (ஆத்மா) சுவரூபம் ஸ்பஷ்டமாக (தெளிவாக) கூறப்படுகிறது. -4

உரைக்கப்பட்ட பிரகரணத்தில் மேலும் விருப்பத்தை கூட்டவே. கூறாததும் முழுவதும் கூறாததும் அல்லது பிரமாணத்தை பற்றிய சந்தேகத்தை நீக்குவதற்காக தன்னுடைய குருவினுடைய (வார்த்தை) பிரமாணத்தை கூறுகிறோம்.

குருவினால் கூறப்பட்ட வேதாந்த சித்தாந்தத்தை விட அதிகம் கூற தகுதியில்லாததால் கூறமாட்டேன். ஆயிரம் கிரணங்களுடன் சூரியன் பிரகாசிக்கும் போது மின்மினி பூச்சி என்ன செய்ய முடியும். -5

குருவே வேதப்பொருளை முழுவதும் கூறிவிட்டதால் இங்கு சொல்லப்படுவது, பெயர் புகழ் போன்றவைகளுக்காக என்று இந்த பிரமாணத்தின் மீது சந்தேகமென்றால் அதை நீக்கும் பொருட்டு இது கூறுகிறோம்.

பெயர், புகழ் போன்றவைகளுக்காக இந்த கிரந்தத்தை நாங்கள் எழுதவில்லை. பிரம்மத்தை அறிந்தவரான சானைக்கல்லைப்போன்ற குருவினிடம் என் ஞானத்தை தீட்டிக்கொள்ளவே. –6

துன்பம், அதற்கு காரணம், ஜீவனால் அடையப்பட வேண்டியது, அதற்கான வழி ஆகியவை இந்த கிரந்தத்தில் கூறப்படப்போவதை நினைவுறுத்த இச்சுலோகம் சொல்லப்படுகிறது.

ஆத்மாவை அறியாததே அதன் அனுபவத்திற்கு தடையாகிறது. அந்த அறியாமை சம்சாரத்திற்கு மூலம் . அதன் அழிவே, ஆத்மாவிற்கு முக்தி (விடுதலை) ஆகிறது. –7

ஜீவனால் அடையவேண்டியதற்கு வழி பாக்கி இருப்பதால் அதை கூறுகிறோம்.

வேதாந்த வாக்யங்களினால் உண்டான சரியான ஞானம் சீக்கிரம் அழிக்கவல்ல நெருப்பை போல ஆத்ம அஞ்ஞானத்தை அழித்து விடும். அஞ்ஞானத்துக்கு எதிராக இல்லாததால் கர்மாவால் இயலாது. –8

**பிரதிக்ஞா** (தீர்மானம்) செய்த விஷயத்தை தெளிவாக்க, அதை எதிர்த்து கேள்வி எழுப்பப்படுகிறது. மற்ற மதத்தினரின் கோட்பாட்டை ஏற்று அது விளக்கப்படுகிறது.

முக்தி செயல்களினால் உண்டாவதால் அங்கு வெறும் ஞானம் என்ன செய்யும், எப்படி முக்தி தரும் என்றால் நிதானமுடைய மனதையுடையவனாக எல்லாவற்றையும் கேள். –9

காம்ய பலன்களை அடைய கர்மம் செய்யாமலும், நிந்திக்கப்பட்டதை விட்டும், தினமும் (நித்யம்) செய்யவேண்டியதையும் நிமித்தத்தினால் (விஷேச நாட்களில்) செய்ய வேண்டியதையும் முறைப்படி செய்பவருக்கே (முக்தி கிடைக்கும்). -10

அதனால் என்ன ஆகும்.

காம்ய பலனில் விருப்பம் இல்லாது செய்ததால் தேவதை முதலிய மேல்பிறவி தீண்டுவது இல்லை. நிந்திக்கப்பட்டதை விட்டதால் நரக முதலிய கீழ் பிறவியும் இல்லை. -11

புண்ய - பாவத்தினால் உடம்பு கிடைப்பதும் (அனுபவிப்பதனால் அது அழிவதும்) ஞானத்தினால் தான், கர்மத்தினால்தான் என்ற இருவருக்கும் சரிசமமாக ஒத்துக் கொள்வதால், அது சம்மந்தமான கேள்வியும், பதிலும் ஒன்றே.

இன்பத்தையும் , துன்பத்தையும் கொடுக்க கூடிய பிராரப்தத்தினால் ஆன இந்த உடம்பு எந்த புண்ய, பாவத்தினால் உண்டானதோ அது அனுபவில்பதாலேயே அழிவு பெறும். -12

காம்ய மற்றும் நிந்திக்கப்படட கர்மங்களை விடுவதினால் மட்டுமே சம்சாரத்தில் உள்ள அத்துனை துன்பங்களும் விடுபடும் என்று முடிவதனால், தினமும், விசேஷ காலங்களிலும் (**நித்திய, நைமித்திக**) செய்யும் கர்மத்தினால் என்ன பயன் இருக்கிறது என்றால், அப்படி இல்லை. அவை செய்யப்படாமலிருந்தாலும் தோஷம் உண்டாகும்.

செய்ய வேண்டியதாகிய கர்மாக்களை செய்பவருக்கு, அது செய்யாமல் போனால் உண்டாகும் பிரத்தியவாயம் என்ற தோஷம் தீண்டுவதில்லை. அதனால், ஆத்ம ஞானத்தை விட்டு கர்மாக்களை ஒழுங்காக செய்ய வேண்டும். -13

(ஞானத்தினால் பிரயோஜனம் இல்லை என்று) ஒத்துக் கொண்டு

கூறப்பட்டது. உண்மையில் ஆத்மாவின் ஞானம் என்று உண்மையில் ஒன்றுமில்லை. அதை நிரூபிக்கும் பிரமாணம் இன்மையால்.

இங்கு எத்துணை ஸ்ருதிகளும் (வேதமும்) ஸ்ம்ருதிகளும் உள்ளனவோ, அத்துனையும் கூறுகிறது கர்மம் செய்யவே. அதனால் கர்மமே மோக்ஷம் அடைய சரியான வழி. -14

பிரமாணமின்மை உங்கள் குறைப்பாட்டினால் இருக்கும் என்றால் அப்படியில்லை. ஏனென்றால்.

மிகவும் முயற்சி செய்து பார்த்தும் ஞானத்தை கட்டளையாக உரைக்க கூடிய ஷ்ருதியோ, ஸ்மிருதியோ தென்படவில்லை. மற்ற க்ரந்தங்களிலோ எங்களுக்கு நம்பிக்கை இல்லை. -15

எப்படி இங்கு பூமியில் கட்டளையில்லாமலே முயற்சி செய்யப்படுகிறதோ. (தெரிந்தவுடன் அஞ்ஞானம் தெளிகிறதோ) அதுபோல இருக்கட்டும் என்றால் அப்படியில்லை. ஏனென்றால்.

கட்டளை இல்லாமல் விவேகமின்மையால் எவன் மோக்ஷத்திற்க்கான செயலை செய்கிறானோ அது சாம்பலில் ஆஹுதியை இடுவதுபோல் பிரயோஜனமற்றது. -16

வேதத்தின் பொருளை அறிந்தவரும் எல்லோராலும் பிரமாணமாக ஒத்துக்கொள்ளபடுபவருமான **மஹர்ஷி ஜெய்மினி** அவர்களும் இதையே கூறுகிறார்.

வேதம் செயலை புரிவதையே கூறுவதால் அப்படி இல்லாதது பொருளற்ற வார்த்தையே என்று தெளிவாக சிந்தித்து வேதப்பொருளை அறிந்தவரான ஜெய்மினி உரக்க கூறுகிறார். -17

வேத மந்திரமும் இதையே கூறுகிறது.

கர்மாவை செய்து கொண்டே நூறு வருஷம் வாழ ஆசைபடவேண்டும் என்று மந்திரமும் ஆயுள் முழுவதும் கர்மத்தை செய்யவே பணிக்கிறது. -18

ஞானவழியினருக்கு ஆத்மா பற்றிய விஷயத்தில் வேதவாக்கியத்தையே ப்ரமாணமாக ஒத்துக்கொள்கிறார்கள். வாக்யத்திற்கும் வினைச்சொல்லே முக்கியமாக இருப்பதால் அந்த வினைச்சொல்லில் விரும்பும் ஞானவழியின் இன்மை இருக்கிறது.

வினையை விடுத்து ஒரு சொல்லும் பொருளை தரகூடியதாக இருக்க முடியாது. அப்படி இருக்க , சொற்களின் கூட்டான வாக்கியம் ஞானத்தில் தன்னுடைய தாத்பர்யத்தை உறைக்க முடியாது. -19

ஞானத்தில் தாத்பர்யத்தை ஒத்துக்கொண்டாலும் தவறில்லை. ஏனென்றால்-

கர்மமும், ஞானமும் உடலும் உறுப்பும் போலவோ, தன் முக்கியத்துவத்தை உடையதாகவோ இருக்கும். இப்படி இரண்டும் ஒன்றாகவே இருப்பதால் ஞானத்தை ஒத்துக்கொண்டாலும் தோஷம் இல்லாததாகிறது. -20

ஞானம் ஒத்துக்கொள்ளப்பட்டாலும், இல்லாவிட்டாலும் ஞானத்தினால் முக்தி என்பது இல்லை.

அதனால் எல்லா ஆஸ்ரமத்திலிருப்பவரும் (பிரம்மசாரி முதலான) வாக்கு, மனம், உடலால் செய்யவேண்டியவைகளை நன்றாக முடிந்தவரை முறைப்படி செய்தாலே முக்தி கிட்டும். வேறு வழியினால் அல்ல. -21

பொருளற்ற வாதங்களே இவை என்று நிந்தித்து கூறும் வகையில்-

இப்படியாக தானே தன்னுடைய பேச்சுத் திறமையினால் உண்டான இன்பத்தினால் பூரித்து போனவர்களாக, யாகசாலையில் மூண்ட புகையினால் சூழப்பட்ட புத்தி உடையவர்கள் பிதற்றல் அங்கு எதிரொளிக்கிறது. -22

நிந்தனை ஆரம்பமானதை உணர்த்த -

இங்கே தோஷங்களை அதே வரிசையில் திறமையுடன் கூடியதாகவும், எதிராளியின் வார்த்தைகளை முறிப்பதாகவும் உள்ள வாக்கியங்களை சுற்றி வளைக்காமல் கூறுவோம். -23

நான்கு வகையான கர்மங்களின் பலனான (உற்பத்தி, கிடைத்தல், விகாரம், சம்ஸ்காரம்) முக்தியில் இருக்க முடியாததால், முக்தி கர்மத்தின் பலன் இல்லை.

முக்தியென்பது அஞ்ஞான நாசம் மாத்திரமென்பதால், கர்மம் அதற்கு வழியில்லை. இருட்டினால் உண்டான தோற்றங்களை இருட்டு எவ்வாறு விலக்காதோ, அதுபோல் கர்மம் அஞ்ஞானத்தை விலக்காது. -24

கர்மத்தில் பலத்தை முகத்திக்கு (மோக்ஷம்) ஏற்றாலும் கூட தோஷம் இருக்கிறது.

ஒரு கர்மத்தை செய்வதாலோ, இல்லை. எல்லாவற்றையும் செய்வதாலோ, முக்தி கிடைக்கும். ஒரு கர்மத்தில் என்றால் மற்றவை ப்ரயோஜனமில்லாதவையாகிறது. எல்லாவற்றையுமென்றால் அவை ஒவ்வொன்றுக்கும் தனியாக கூறப்பட்ட பலன் இருப்பதால் (தவறாகிறது). -25

எல்லா கர்மங்களுக்கும் ஆரம்பத்திலேயே பலன் கூறப்பட்டிருப்பதால், பலன் கூறப்படாதவை முக்திக்கு என்பது நிரூபிக்கபட முடியாததாகிறது.

பாவங்கள் நீங்க நித்ய கர்மாக்கள் ஆகுவதாலும், அதுபோல், ஸ்வர்கம் முதலிய பலன்களை தருவதாக இருப்பதால் காம்ய கர்மங்களும் முக்தி தருவதற்கு வழியாக இருப்பதில்லை. -26.

கூறப்பட்டதற்கு பிரமாணம் இருப்பதாலும் (அல்லது பிரமாணம் இல்லாததாலும்)-

இந்த உலகத்தில் அடையமுடியாத முக்தியும் அதை அடையும் வழிகளும், வேதத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. அங்கேயே முக்திக்காக என்று ஒரு கர்மமும் கூறப்படவில்லை.

முன்பு ஒப்புக்கொள்ள கூடாததை ஒப்புக்கொண்டதால், **ச்வஸ்ரு நிர்கச்ச உக்தி** என்ற நியாயத்தை போல மற்றவர்(மருமகள்) மறுத்ததை மறுத்து, அதை தானே (மாமியார்) மறுப்பதுபோல) இருக்கிறது உங்கள் பிரயோஜனமில்லாத உலரல்

நிந்திக்கப்பட்டதையும், காம்ய பலன்களை தரும் கர்மங்களையும் விடுவது எங்களை போலவே உங்களுக்கும் பிடித்தமானதாவே இருக்கிறது. நித்திய கர்மங்களுக்கு பலன் இல்லாததாலும் கர்மம் முக்திக்கு வழியில்லை என்றாகின்றது. –28

இப்படியிருக்க , முக்தி கர்மங்களினால் மட்டும் அடையபடுவதாகிறது என்ற நீங்கள் கூறியது நிராகரிக்க பட்டதாகிறது. அதனால் இப்பொழுது எல்லா கர்மங்களிலும் முயற்சிக்கு காரணம் தவறான ஞானமே என்று நிரூபித்து ஆத்மாவின் அறிவு எப்படி இருக்கிறதோ அப்படியே அதன் சரியான ஞானத்தினால் மட்டுமே எல்லா பிரச்சனைக்கும் காரணமான இந்த ஸம்ஸாரம் விலகும் என்ற இந்த முடிவை திடப்படுத்தும் ஆசையுள்ளவராக கூறுகிறோம்.

இங்கு இது விசாரிக்கப்படுகிறது. நிந்திக்கப்பட்டதும் எதேச்சையாக செய்யப்படும் கர்மங்களில் எப்படி தன்னுடைய இயல்பாலேயே உண்டான நிமித்தங்களை கொண்டு இது நன்மை, இது தீது என்று எண்ணி கானல் நீர் பருகும் ஆசையுடையவன் போல் உலகத்தில் கிடைக்கும் பிரமாணமான வழிகள் கொண்டே நல்லதை அடையவும் தீயதை விலக்கும் தன்னாலேயே முயற்சி செய்யப்படுகிறதோ அப்படியே சாஸ்திரத்தில் கூறப்பட்ட நித்தியமானதும், காம்யமான கர்மங்களிலும் உண்டா, அல்லது அங்கு முயற்ச்சிக்கு வேறு ஏதாவது காரணம் உண்டா,.

இப்படியாக கூறினால், இதை கேள், உலகத்திலோ அல்லது வேதத்திலே கூறப்பட்ட முறைப்படி பிரமாணத்தினால் முடிவு செய்யப்பட்ட ஆத்மாவின்

உண்மையான ஞானம் என நாம் முயற்சி மேற்கொள்ள காரணமாகவும், தியாகத்தை உபதேசிக்கும் சாஸ்திரத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றால், கர்மத்தை விட்டவர்கள் அழிகிறார்கள். தவறான ஞானத்தை கைக்கொண்டாதாலும், வேத பிரமாணத்தை உடைய கர்மத்தை விட்டதாலும். ஆனால், கானல் நீரை குடிக்கும் ஆசையுடன் முயற்சி செய்வது போல **ப்ரம** (தவறான) ஞானத்தோடு எல்லா முயற்சியும் எடுக்க காரணம் என்றால் நாங்கள் மேன்மை அடைந்தோம். நீங்கள் அழிந்தீர்கள்.

அஞ்ஞானத்தினால் நன்மையை அடையவும் தீமையை விலக்கவும் ஆசை படுபவருக்கு, அடையவும் விடவும் வழிகளை காட்டும் சூரியனை போன்று சாஸ்திரம் தெளிவாக்குகிறது. -29

இப்படியாக **பிரத்யக்ஷம், அனுமானம், வேதாகமம்** ஆகிய பிரமாணங்களை ஒப்புக்கொள்வதால், ஆத்மா பரந்து விரிந்ததாக, இன்பத்தை உடையதாக, ஆசைபடக்கூடியதாக ஆன தன்மைகளை உடையதாகவும், அங்கு விருப்பமில்லாத தன்மைகள் இன்மையை போன்றதும், தன்னாலேயே விளங்குவதால், இப்படிப்பட்ட ஆத்மாவின் ஞானம் இல்லாததாலும்தான் எனக்கு நன்மை உண்டாகட்டும், தீமை உண்டாகாதிருக்கட்டும் என்று தவறான ஞானம் மண்ணையும் சிப்பியையும் தெளிவாக தெரிந்து கொள்ளாததால் ஆன தவறான ஞானத்தை போல முயற்சிக்கும் காரணமாக இருக்கிறது என்று முடிவானது. சாஸ்திரம் பொருட்களை (விஷயங்ளை) அடைய , இருத்தலை அதில் கூறவில்லை. அதனால் இந்த விசாரத்தையே மேலும் விளக்கமாக ஆரம்பிக்கிறோம்.

மனிதர்களுக்கு ஒன்றை அடையவும், விடவும் உள்ள ஆசையை சாஸ்திரம் உண்டு பன்னுவதில்லை. ஏனென்றால் அது இயல்பானதாகவே இப்படி இருப்பது பிராணிகளிடமும் காணமுடிவதால். -30

ஆத்மாவின் உண்மைநிலையை அறியாதவருக்கே கட்டளையாகவும், நிந்திக்கப்பட்டதாகவுமான சாஸ்திரம் ஆகிறது என்று கூறுப்பட்டது. இப்பொழுது ஆத்மாவின் இயல்பானதினாலும் (கர்மாவில்) முயற்சி முடியாது என்பதை கூறும் ஆசையுடன் -

கழுத்தில் உள்ள தங்க மாலையை அறியாமல் தேடுவது போல் இருப்பதை கூட தவறாக தேடும் ஆசை வருவதும் தன்னுடைய நிழலில் உண்டான பயத்தினால் அசை ராக்ஷஷன் என்று இல்லாததை விலக்க முயற்ச்சிப்பதும், எது இருக்கிறதோ அதை விலக்கவும் எது இல்லையோ அதை அடையவும் ஆசை உண்டாகிறது. - 31-32

இங்கு இவைகளில் அடையவும், விடவும் ஆன இந்த நான்கு விஷயங்களில் வகுத்து நியாயத்தை கூறுகிறோம்.

அடைய வேண்டியதற்கும், விலக்க வேண்டியதற்கும் ஆன வழிகளை வேதத்தில் இருந்து தெரிந்து கொண்டு அதன் வழி கர்மம் செய்து அடையவேண்டியதை அடையவும், வி வேண்டியதை விடவும். - 33

பாக்கி இரண்டிற்கும் தெரிந்து கொள்வதால் போதுமாகிறது.

விலக்க வேண்டியதாகவும், அடையவேண்டியதாகவும் உடையவையின் சரியான அறிவினாலேயே அது விலக்கப்பட்டதாகவும், அடையப்பட்டதாகவும் ஆகிறது. முயற்ச்சியினால் இல்லை. அறிவின்மை மாத்திரமே தடையாக இருப்பதால் அது செயலினால் அடையமுடியாது. -34

எப்படி முயற்சியினால் அல்லாமல், ஆத்மாவின் உண்டமையான நிலையை அறிந்து கொள்வதாலேயே நமக்கு அளவில்லாத இன்பம் கிடைகிறதும், குறைவில்லாமல் எல்லா துன்பங்கள் தீருவதும் உண்டாகிறது. அதை கூறுகிறோம்.

காமம் அறிவின்மையால் உண்டாவதால் அது அறிவின்மையை போக்க போதுமானதில்லை. அதற்கு சரியான அறிவே எதிரி, எப்படி இருட்டிற்கு சூரிய ஒளியோ அதை போல. - 35.

ஆனால் ஆத்மாவின் அறிவும் அந்த அறிவின்மையில் உண்டாவது. சாஸ்திரம், சீடன், ஆசிரியன் ஆகியவை இல்லாமல், ஆத்மாவின் அறிவும்

ஒருவனுக்கு கிடைக்காது என்றால், இது ஒரு பிரச்சனை இல்லை. எதனால் ஆத்மாவின் அறிவு அதன் உண்மையான உருவத்திலேயே அதன் நிலைபெற்று இருக்கும் காரணத்தினால், அது அறிவின்மையையும், அதனால் உண்டான அபிமானங்களையும் அழித்து விடுகிறதோ, அதனால் அது ஆத்மாவை அடைவதற்கு மாத்திரமே சாஸ்த்திரத்தை எதிர்பார்க்கிறோம். உண்டான அறிவின்மையை விலக்க அல்ல. செயலோ செய்பவன் உண்டானால் தானாகவே உண்டாகிறது. அதனால், செயலோ செய்பவர் முதலானது இல்லாமல் இருக்க முடியாது. அது பல கோடி கல்பங்களினால் பிரிக்கப்பட்ட பலனை தருவதற்காக ஆத்மாவையே சார்ந்திருக்கிறது. அதற்கு தனித்து இருக்கும் இயல்பு இல்லாததால். ஆத்மாவின் அறிவைபோல செயல் அது அடையப்பட்ட காலத்திலேயே ஸ்வர்க்கம் முதலான பலனை அதனை புரிந்தவருடன் இணைக்காது. ஆனால் ஆத்மாவின் அறிவோ தான் அடையப்பட்டவுடன் அதன் பலனான அளவில்லாத இன்பத்தையும், குறைவில்லாத துன்பத்தையும் நீக்க வேறு ஒரு உருவத்தை அடைவதையோ அல்லது வழியை அடைவதையோ எதிர்பார்ப்பதில்லை. இது எவ்வாறு என்றால் –

பலமுள்ள வேதத்தின் பிரமாணத்தினால் உண்டான ஆத்மாவின் அறிவானது வேறு (எந்த பிரமாணத்தினாலும்) நிராகரிக்க முடியாது. மற்ற தவறான சம்ஸ்காரத்தை விலக்கவும், அது வேறு ஒன்றையும் எதிர்பார்ப்பதில்லை. – 36

தன்னுடைய நிலையை பல காரணம் கூறி நிலைநாட்டிய பின் இந்த விஷயத்தை முடிக்கிறோம்.

அதனால் துன்பமென்னும் பெருங்கடலுக்கு காரணமான அறிவின்மையை விலக்கவே சரியான அறிவே போதுமானது. செயலினால் என்றால் முடியாது கூறப்பட்ட காரணத்தினால். – 37

ஆனால், பலமுள்ளதான சரியான அறிவு இருந்தும் பிரமாணமல்லாத அறிவின்மையால் நிராகரிக்கப்படுவது காண்கிறோம். ஏனென்றால் ஆத்மாவின் சரியான அறிவு இருந்தும் கூட செய்பவன், அனுபவிப்பவன் என்ற விருப்பு ,

வெறுப்பு முதலிய அறிவின்மையில் உண்டாகும் . எண்ணங்கள் உண்டாகும். சரியான அறிவினால் விலக்கப்பட்ட (நிராகரிக்கப்பட்ட) இடத்தில் அதற்கு எதிரான எண்ணங்கள் உண்டாவது கிடையாது. இது அப்படி இல்லை. ஏனென்றால்–

அறிவினால் விலக்கப்பட்ட காரணத்தினால் அறிவின்மை அதை விளக்க முடியாது. அதனுடைய நினைவுகள் (அறிவின்மையின்) உடனே அறிவினுடைய நினைவுகளை கொண்டு வரும் . -- 38.

<u>கர்மம் அறிவின்மையால் உண்டாவதால்</u> (1–35) என்று கொடுக்கப்பட்ட காரணம் என்பதை முன்பே <u>நன்மையை நாடவும்</u> (1–29) ஆகியவைகளால் கூறிவிட்டாகியது. அதை மேலும் திடப்படுத்தவே அறிவின்மை இருக்கும் மட்டும் சம்ஸாரம் இருக்கும் என காட்டுவோம் என கூறி–

பிராமணன் முதலிய எண்ணங்களை இந்த உடம்பில் கொண்டு, நான் ஆத்மா இல்லை என்ற எண்ணத்தினால் வேதத்தில் சொல்லப்பட்ட உடல், வாக்கு, உள்ளம் ஆகிய செயல்களினால் புரிய முயல்கிறார்கள் – 39

எதனால் செயல் அறிவின்மையினாலேயே உண்டாகிறதோ, அதனால் அது விலக்கப்பட்டால் விலகும் என்று கூறுகிறோம் –

பிரம்ம ஞானம் என்ற நெருப்பினால் , எல்லா எண்ணங்களும் எரிக்கப்பட்டவராகிய முக்தர் அந்த ஆத்ம தத்வமாகவே இருக்கிறார். அதனால் பீடிக்கப்பட்டவராக இல்லை –40.

அதனால் மற்றவர்கள் யாருக்கு இந்த அடர்ந்த அறியாமையுடைய **அந்தக்கரணத்தை** (மனதை) உடையவர்களாக இருக்கிறார்களோ, வேதத்தினால் சொல்லப்பட்ட **கர்த்தா** (முயற்சிப்பவர்) முதலிய அதிகாரங்களை ஒப்புக்கொண்டவர்கள், அதனால் கட்டளை, நிந்தனை போன்ற வாக்கியங்கள் என்ற பாம்பினால் தீண்டப்பட்டு செயல்புரிபவர்கள்.

நல்ல கர்மத்தினால் (செயலினால்) தெய்வத்தன்மையை,

நிந்திக்கப்படுவதை புரிவதால் நரகத்தை அடைகிறார்கள். இரண்டு வகையான புண்ய, பாவங்களினால் மனிதத்தன்மையை கண்டிப்பாக அடைகிறார்கள். - 41

நான்முகனிலிருந்து சிறு பூச்சிவரை எல்லாமே இந்த பயங்கரமான இன்பம், துன்பம் இரண்டுமான பெருங்கடலில் மேலும், கீழுமாக கடிகார முள்ளை போன்று சுழன்று கீழானதும், நடுவானதும், மேலானதுமான மரம், மனித மற்றும தேவப்பிறவிகளை இன்பம், துன்பம் அறிவின்மையால் அடைந்து வேகமான காற்றினால் அலைக்கப்படும் கடலின் நடுவே இருக்கும் ஒரு இலையை போன்று நல்லதும், கெட்டதும் இரண்டுமானதுமான கர்மம் என்னும் காற்றினால் அலைக்கழிக்கப்படுகிறான்.

இப்படி அறிவின்மை ஆசை மற்றும் கர்மத்தினால் அலைக்கழிக்கப்படுகிற இந்த மனிதன் ஆசைகளினால் பீடிக்கப்பட்டவனாக பிறந்து அதை முழுமையாக அடையாமல் இருக்கிறான். - 42.

கூறப்பட்ட பொருளில் நம்பிக்கை ஏற்பட பிரமாணம் கூறப்படுகிறது. -

வேதமும் இங்கு கூறுப்பட்ட பொருளாக ஆசையை விட்டொழிக்க கூறுகிறது. ஏனென்றால், அறிவின்மையை சம்சாரம் அதிலிருந்தே உண்டாகிறது. அது விலக்குவதாலேயே அழிகிறது. - 43.

அது வேதத்தில் எங்கு சொல்லப்பட்டது என்றால் **யதா ஸர்வே ப்ரமுச்யன்தே** ( ப்ரு 4-4-7, கட 4-14) எப்பொழுது எல்லா ஆசைகளும் விடுபட்டதோ, அப்போதே இந்த பிறவியிலேயே இங்கேயே தன் சுவரூபத்தை அடைகிறான். **இதி நு** (ப்ரு 4-4-6) என்று இந்த ஆத்மாவின் மேல் உள்ள ஆசையினால் மற்ற எல்லா ஆசையையும் துறந்தவாறே அவரின் எல்லா ஆசைகளும் முழுமையடைந்தவையாகிறது. அவருக்கு மீண்டும் வேறு பிறவி கிடையாது. என்று வாஜசனேய பகுதி யஜுர் வேதத்தில் கூறுப்பட்டுள்ளது. **வியாசரும்** ஒவ்வொரு இடத்திலும் ஆசையினால் உண்டானதுதான் இந்த சம்சாரம் என்று கூறுகிறார் - 44.

இந்த சம்சாரத்தின் வழி கூறப்பட்டது இப்பொழுது அதை

விட்டொழிக்க கர்மங்கள் எப்படி தூரே இருந்து மோக்ஷத்திற்கு காரணமாகி உதவுகிறது என்று கூறுவோம்.

இப்படிப்பட்ட துன்பத்தினால் வருத்தப்பட்ட ஏதோ ஒரு புண்ணியத்தின் பலனால் தினமும் செய்ய வேண்டிய கர்மங்களை ஒழுங்காக செய்த இந்த மனிதனுக்கு (காம்ய கர்மங்கள் செய்தில்) பற்றற்ற தன்மை உண்டாகிறது. -45

எப்படிபட்ட பற்றற்றதன்மை என்றால், கூறுகிறோம்.

பலன்கள் நிலையற்றவை என்ற அறிவினால், முன்பு நரகத்தின் மேல் உள்ள பயம் உண்டானது போல காமிய பலன்களிலும் உண்டாகிறது. அதனால் தினமும் செய்யவேண்டிய (நித்யகர்மங்களை) மாத்திரம் செய்ய ஆசைப்படுகிறான் - 46

இப்படி நித்தியமாக (தினமும்) செய்ய வேண்டியதையும், நைமித்திகமான (விசேஷ ) தினங்களில் செய்யவேண்டியதையும் செய்வதால்-

இறைவனுக்கு அர்ப்பிக்கப்பட்ட கர்மங்கள் புரிந்ததால் தூய்மையடைகின்ற அவனுடைய மனம் பிரம்மலோகம் போன்ற அரிய உலகங்களிலும் பற்றற்று போவதால் அழுக்கு இல்லாததாகிறது. - 47

எதனாலென்றால் ரஜோகுணம், தமோ குணத்தினால் பற்றப்பட்ட மனமே ஆசை என்ற முள்ளினால் தைக்கப்பட்டு விஷயங்கள் அடர்ந்து வருத்தும் இடத்தில் போடப்படுகிறது. அதனால் செய்ய வேண்டியவைகளான நித்திய , நைமித்திக கர்மங்களை முறையாக செய்வதினால் விலக்கப்பட்ட ரஜோ, தமோ அழுக்கு விலக்கப்பட்டு, துலக்கப்பட்ட ஸ்படிகத்தை போல வெளிவிஷயங்களுக்கு காரணமான விருப்பு , வெறுப்பு ஆகிய எண்ணங்களினால் ஆட்கொள்ளப்படாமல் , எல்லா அழுக்கையும் நீக்கி, தன்னுடைய ஆத்மாவை மட்டும் அடைய முயர்ச்சிக்கிறது. ( கண்ணாடியை போன்ற மனம்) அதனால் இதை கூறுகிறோம்.

எல்லா ஆசைகளையும் எப்போது புத்தியானது விட்டு விடுகிறதோ, அப்பொழுது தன்னுடைய ஆத்மாவை அறிந்து கொள்ள முனைகிறது . - 48

இதுவே நித்திய, நைமித்திக கர்மங்கள் செய்வதின் பெருமை.

அதனால் மோக்ஷம் அடைய ஆசையுள்ளவன் ஆத்ம அறிவை அடைய விரும்புபவர்கள் மனம் தூய்மையடைய எப்பொழுதும் நித்திய, நைமித்திக கர்மங்களை செய்ய வேண்டும். – 50

சொல்லப்பட்ட பொருளில் **ஸ்ரீ க்ருஷ்ணரின்** வாக்கு பிரமாணம் -

ஞானவழியில் செல்ல ஆசையுள்ளவன் அதை முழுமையாக கடைபிடிக்க சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்ட கர்ம்த்தை செய்வது சிறந்தது. கடைபிடிக்க முடிந்தவருக்கு சன்யாசம் தான் வழி என்று ஸ்மிருதி கூறுகிறது. - 51

நித்திய கர்மத்தை செய்வதால் புண்யம் உண்டாகிறது. புண்ணியமுண்டாவதால் பாவம் அழிகிறது. அதனால், மனம் செம்மையடைகிறது. அதனால் சம்சாரத்தை பற்றிய தெளிவு பிறக்கிறது. அதனால், பற்றற்ற தன்மை. அதனால் மோக்ஷமடைய ஆசை அதனால் அதை அடையும் வழியை தேடுதல் அதனால் எல்லா கர்மங்களிலும், அதன் வழிகளையும் விடுப்பது (சன்யாசம்) அதன்பின் யோகத்தினை பின்பற்றுதல், அதனால் ஆத்மாவில் மனம் லயிப்பது (நாடுவது) அதனால் **தத்வமஸி** (நீ அதுவாக இருக்கிறாய்) போன்ற வாக்யங்களின் பொருளை ( குருவிடமிருந்து) கேட்டு அறிந்து விசாரம் செய்வது, அதனால் அறிவின்மை விலகுகிறது. அதனால் ஆத்மாவிலேயே நிலைத்திருப்பது ஆகிறது. (**பிரம்மைவசன் பிரம்மாப்யேதி** (ப்ரு 4-4-6)) பிரம்மமாக இருந்து கொண்டு ப்ரம்மத்தை அடைந்து விடுகிறார். ( **விமுக்தஸ் சவிமுச்யதே** (கட. 2-2-1)) முக்தரே முக்தியடைகிறார் என்று பரம்பரையாக கர்மா இப்படி அறிவின்மையை விலக்குகிறது. ஞானத்தை போல நேரடி எதிரியாக இல்லாததால் எப்படி கர்மா அறிவின்மையை நீக்குகிறது. - 52.

கர்மத்தினுடைய வேலை சிறிது கூட முக்தியில் இருப்பது முடியாது. முக்தியில் எது ஆகிறதோ அதுவும் கர்மத்தை எதிர் பார்ப்பத்தில்லை இதை கூறுகிறோம்.

உண்டாவது, கிடைப்பது, சிறப்பிப்பது அல்லது கெடுப்பது இவை நான்கே கர்மத்தின் பலனாக முடியும் . முக்தி இதுபோல் இல்லாத காரணத்தால் அதற்கு கர்மா வழியில்லை . -53

இப்படியாக கர்மா நேரடியாக அறிவின்மையை விலக்க போதுமானது இல்லை என்று காட்டி விட்டோம். முக்தியிலும் கூட முக்தி அடைய விரும்புபவரும் அதனுடைய நிரந்தரமற்ற தன்மையை உணர்ந்து ஈடுபடாது எல்லாவகை கர்மங்களுக்கும் அங்கு இடமில்லை என்று முன்பே (1-29) கூறினோம். கர்மம் எப்படி தூர இருந்து உதவுகிறது, வழியாக அறிவு உண்டாகிறது என்று நிருபித்தோம். அறிவின்மையை விலக்க ஆத்மாவை பற்றிய நாம் அடைந்த சிறந்த நேரடி வழியாக இருக்கிறது. வேறு ஞானமே முழுமையாகவோ அல்லது சிறுமையாகவோ எந்த வழியும் இல்லை என்பதை இப்பொழுது கூறுவோம். அங்கு ஞானம் சிறுமையாகவும், கர்மம் முக்யமாகவும் கூட காரணமாக முடியாது என கூற.-

கர்மத்தின் அங்கமாக இருந்து ஞானம் அறிவின்மையை நீக்க முடியாது. அடைய வேண்டியதாக ஞானமும் அடையும் வழியாக கர்மமும் இருப்பதால் ஒரு நேரத்தில் இரண்டும் இருக்க முடியாததாகிறது. -54

இரண்டும் சமமாக முக்யத்வம் வாய்ந்ததாக இருப்பதும் கூடி முடியாது .

புலியும் ஆட்டையும் போல. அழிக்கும் தன்மையும் அழியும் தன்மையும் இருப்பதாலும் ஒரே இடத்தில் இரண்டிற்கும் கூட்டு முடியாது . - 55.

எப்படி அழிக்கும், அழியும் தன்மை என்றால் . எதனால்.

இருப்பதை அப்படியே காணாதது அறிவின்மை, அறிவு அதற்கு எதிரி. அதனால் அதன் கூட்டு என்பது சூரியனுக்கும் இரவு நேர இருளுக்கும்

சேர்ந்திருக்க முடியாதது போல ஆகும். - 56

இப்படி எங்கும் நிறைந்ததாயிருக்கிற ஆத்மாவில் விருப்பமுடையவனுக்கு பாக்கியில்லாமல் அதிகாரத்தை தரும் எல்லாவகையான கர்மங்களும் அதன்மேல் பற்றற்று இருக்கும் தன்மையுடையவனானதலால் கூனிகுருகியிருக்கிறது. எப்படி என்றால் அதை கூறுவோம். -

**ப்ருஹஸ்பதி** யாகத்தை செய்ய தகுதி ப்ராமணனுக்கு மாத்திரம் இருப்பதால் க்ஷத்ரியர்கள் முயற்சிப்பது இல்லை. அதே போல்தான் ப்ராமணன் என்ற அபிமானம் உடையவன் க்ஷத்ரியர்களுக்கான (**ராஜசூயம்** போன்ற) கர்மங்களை செய்வதில்லை. -57.

எப்படி இந்த உதாரணமோ, அப்படியே உதாரிக்கப்பட்டதும் என்று கூற

ஆத்மாவில் எந்தேகமில்லாது தான் உடம்பு என்ற எண்ணமில்லாது 'இல்லை இல்லை' என்று கூறப்பட்ட வழியில் உடம்பு முதலியவைகள் ஆத்மா இல்லாததை காண்பவன், அது போலவே உடம்பினால் செய்யப்படும் கர்மங்களையும் பற்றோடு பார்ப்பதில்லை. - 58

கூறப்பட்டதையே விளக்க இந்த உதாரணம் .

எப்படி மண்ணினால் செய்யப்பட்ட பொம்மையை உண்மை யானை என்று எண்ணி குழந்தை அடைகிறதோ அதுபோலவே உடம்பு நான் என்று எண்ணி உண்மையை உணராமல் கர்மங்களை செய்கிறான். -59

நாங்கள் ஞானத்திற்கும், கர்மத்திற்கும் ஒற்றுமையை எந்த இடத்திலும் காணவில்லை . எங்கு ஞானம் கர்மத்திற்கு காரணமாக இருக்கிறதோ, அதை அங்கு விலக்க நம் முன்னோர்களாலும் முடியாது. அதை பிரித்து காட்ட உதாரணத்தை காட்டுவோம்.

எப்படி தூணை கண்டு இது திருடன் என்ற எண்ணமுள்ளவன் பயந்து

ஓடுகிறானோ அதுபோல, அறிவு முதலியவைகளில் தான் அது என்ற எண்ணமுடையவன் கர்மா புரிகிறான். - 60

இப்படியே எங்கெல்லாம் கர்மத்திற்கு ஞானம் காரணமாக இருக்கிறதோ, அங்கெல்லாம் இந்த நியாயத்தை கையாளவேண்டும். எங்கு ஒரே சமயத்திலோ அல்லது ஒன்றொன்றாகவோ ஞானமும் கர்மமும் இருக்க முடியாதோ அதை கூறுகிறோம்.

தூணை பற்றிய சரியான அறிவு, ஒருவதற்கு காரணமாக (அங்கமாக) எப்படி ஆவதில்லையோ அப்படியே, ஆத்மாவை பற்றிய சரியான அறிவு கர்மங்கள் புரிவதற்கு காரணமாவதில்லை. - 61

எப்படிப்பட்ட குணத்தினால் இந்த சுபாவம் எது ஒன்று மற்றொன்று இருப்பதற்கு உதவி புரிகிறதோ, அது அதனுடைய (அங்கம்) குணத்தை உடையதாகும். ஆனால் எது அழிக்கிறதோ அல்லது முக்கியமாக இருக்கிறதோ அது இல்லை. - 62

எதனால் என்றால் -

எது கர்மத்தை பற்றிய பகுதிக்கு விடையளிப்பதாக இருக்கிறதோ அதுவே கர்மத்தின் (அங்கமாக) குணமுடையதாக ஆகும் என்று பார்க்கிறோம். - 63

எந்த ஆத்மாவின் உண்மையை தெரிந்து கொள்ளவும், நம் அறிவின்மையை விலக்குகிறதோ அது எந்த கர்மத்தினிடையேயும் இல்லாததால் ஞானம் அங்கம் கிடையாது. அதுபோல், அங்கு எந்த கர்மமும் தரப்படாததால், அதுவும் ஞானத்திற்கு அங்கம் கிடையாது. - 64.

ஞானகர்ம சேர்க்கையை ஏற்று கொண்டவர் கூட, இதை ஏற்றுக் கொள்ளதான் வேண்டும், ஏனென்றால்.

ஞானத்திற்கும் கர்மத்திற்கும் காரணம், ஆத்ம ஸ்வரூபம் அறியாமை,

நீக்கல் ஆகிய காரியம் இவை மூன்றும் ஒன்றுக்கொன்று எதிரானது. அதனால், வெளிச்சமும், இருளும் போலவே இவை இரண்டும் சேர்ந்திருக்க இயலாது . - 65.

ஞான கர்ம சேர்க்கைக்கு எதிராக மற்றொரு காரணம் -

அறியாமையை விலக்காமல் ஞானமென்பதே இருக்க முடியாது. செய்பவன், செயல் போன்ற கூட்டங்களும் இல்லாததால் ஞானத்தை கர்மம் தீண்டவும் முடியாது . - 66

இப்படி கூறி முடித்தாலும் சிலர் தன்னுடைய சம்பிரதாயத்தின் மேல் ஏற்பட்ட பிடிப்பினால் இப்படி கூறுகிறார்கள், வேதாந்த வாக்கியத்தினால் உண்டாகும், நான் ப்ரம்மமாக இருக்கிறேன் போன்ற அறிவு பிறப்பதாலேயே அறிவின்மை நீங்குவதில்லை. ஆனால் , நெடுங்காலம் வரை செய்கின்ற தெய்வ வழிபாடுகளால் சேர்ந்த புண்ணியத்தினால் அவர்களுடைய அறிவின்மை முழுவதுமாக அழிகின்றது. (**தேவோ பூத்வா தேவானப்யேதி** (ப்ரு 4-1-2)) வேதமும் தெய்வத்தினை பாவனையால் கண்டு தெய்வ தன்மையை இறந்தவுடன் அடைகிறான் என்கிறது. வேறு சிலரோ வேதாந்த வாக்யத்தினால் உண்டான நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்ற அறிவு சேர்க்கையின் அடிப்படையில் இருப்பதால் ( நானும் ப்ரம்மம் என்று ) அவை ஆத்மாவின் உண்மையான அறிவை தர இயலாது. ஆனால் , இதையே கங்கை பிரவாகம் போல் இடைவிடாது கடைபிடித்து வந்தால், இந்த வாக்கியத்தில் இல்லாது வேறு புதிய அறிவு உண்டாகும். அதுவே, பாக்கியில்லாமல் எல்லா தடைகளையும் அழிக்கும். வேதமும் ( **விஞ்ஞாய பிரஞ்ஞாம் குர்வீத ப்ராமண** (ப்ரு 4-4-20)) பிராமணன் அதை வார்த்தைகளால் தெரிந்து கொண்டு அறிவை அடைவானாக. என்கிறது என்கிறார்கள்.

இந்த இரண்டு வகைகளையும் நீக்கவே இதை கூறுகிறோம் .

ஞானம் உண்டான உடனேயே செய்பவன், செயல் ஆகிய கூட்டங்கள் அழித்து விடுகிறது. அதனால், அறிவின்மையான கர்மத்திற்கும், வேத ஞானத்திற்கும் எப்போதும் சேர்க்கை இருக்கமுடியாது. - 67

இப்படியாக பலவேறு இல்லாத பிரம்மத்தில் ஞான கர்மத்தின் சேர்க்கையை விலக்கிவிட்டோம். இப்போது, இரண்டாவது வகையை எடுத்துக் கொண்டாலும் அதிலும் எப்படி ஏற்க முடியாதோ அதை கூறுகிறோம்.

(**பேதாபேதமான**) ஒன்றாகியும், பலவாகியும் இருக்கும் ( விசேஷமாகவும், சாமான்யமாகவும்) ப்ரம்மத்தை ஒப்புக்கொள்ளும் வாதிகள் எவராயிருந்தாலும் அவர்களுடைய மார்கத்திலும் கூட, ஞான கர்ம சேர்க்கை நிரூபிக்க முடியாது. – 68

இவர்களை இருவகையாக பிரித்து இருவரையும் நிராகரிக்க.–

பிரம்மமானது ஜீவாத்மாகவே இருந்தாலும் கர்மத்தினால் ஆத்மாவை (பிரம்மத்தை ) அடையமுடியாது. அறிவின்மையால் உண்டானதால், பிரம்மமாக இல்லாவிட்டாலும் அது முடியாது வீணானதால். – 69

அங்கு ப்ரம்மம் ஆத்மரூபமாகவே இருப்பதால் அதை அடைய முயற்சி ஒன்று தேவையில்லை. இரண்டற்றதால் ஆத்மாவை பற்றிய அறிவின்மையை நீக்குவது மாத்திரமே அடையாததற்கு காரணம் அந்த வகையில் .

அறிவின்மை என்ற மூடல் விலக்க கர்மங்கள் காரணம் இல்லை. ஞானத்தினாலேயே அதை செய்ய முடிந்தால் அங்கு கர்மமானது உபயோகமற்றது . –70

இரண்டாவது வகையான , ப்ரம்மம் ஆத்ம ரூபமாக இல்லாமல் வேறாக இருந்தால், கர்மம் அதை அடையும் வழியாக இருக்க முடியாது. ஞானமும் கர்மத்தினுடன் சேர்ந்தோ, பிரிந்தோ காரணமாக இருக்க முடியாது. ஏனென்றால், முக்தி அடைய விரும்புபவன் அந்த ப்ரமத்தில் இருந்து வேறானதால், ப்ரம்மமும் அவனிடமிருந்து வேரானதால் என்றிருக்கும் போது.

தன்னுடைய ஸ்வரூபத்தை விட்டு எந்த கர்மத்தினாலும் எந்த காரணம்

கொண்டும் வேறாக மாற முடியாது. மாறினாலும் முடியாது. வேறாகியதாலும், அழிந்தவன் வேறொன்றை அடைய முடியாத நிலையிருப்பதாலும். - 71

மற்ற பகுதியில் (**துவைதிகள்** பக்ஷத்தில்) கட்டளை இருக்கட்டுமாக .

துக்கப்படுகிறன்றவர்களாக துவைதிகள் தங்களுடைய பரமாத்மாவிற்கு பிடித்தமான செயல்களினால் தான் விடுபடமுடியும். அவருக்கு விரோதமான செயல்களால் அல்ல. - 72

வேறு பக்ஷத்தில் ( **ஜீவனும் பிரம்மமும் வேறில்லை**) கட்டளைக்கே இடமில்லை.

எப்படியென்றால்.

கூட்டாகவும், தனித்தும் **(ஏகானேகம், பேதாபேதம்**) உள்ள ஸ்வரூபத்தை உடையவர்கள் பிரம்மத்திலேயே இருக்கிறார்கள். எதையும் பிரித்து பார்க்காமல் இருக்கும் அவர்களுக்கு கர்மத்தினால் என்ன பிரயோஜனம் கூறு. --73

அதுமட்டுமல்லாமல் எல்லா கர்மங்களுக்கும் காரணம் இருப்பதாலும், இல்லாததாலும் எல்லா கர்மங்களுக்கும் உள்ள தகுதியை அடைகிறான். ஏனென்றால்.

எல்லா ஜாதி (வர்ணம், ஆஸ்ரமம் முதலிய) உள்ளவனாக இருப்பதால் கர்மம் புரிவதற்கு ஒரு காரணமும் இருக்க முடியாது. விசேஷத்தை ஒப்புக்கொள்ளாமல் கர்மம் தொடங்கவே முடியாது . -74.

கர்மத்தின் கட்டளை இருக்கட்டுமாக, அவனுடைய பிறப்பினால் உண்டான அபிமானத்தினால் என்றால், அப்படி இல்லை. ஏனென்றால்.

ஞானம் உணடானவனுக்கு பிறப்பினால் உண்டான அபிமானம் அறிவில்லாதவர் போல இருக்காது. அறிவுள்ளவர்க்கும் இருக்கும் என்றால் ப்ரமத்தை அடைந்தவருக்கு எந்த பயனும் இல்லை. - 75

அஞ்ஞானத்தின் காரியமாக இருப்பதால் ஒரே காலத்திலோ அல்லது பிறகோ ஞானத்துடன் கர்மம் இருக்க முடியாது . கர்மம் அறிவின்மையாலும், ஞானம் சரியான அறிவினாலும் உண்டானதால் என்று ஞானகர்மத்தின் சேர்க்கையை நீக்கிய பின்னும், தண்ணீரில் மூழ்குபவன் புல்லை பிடிப்பதுபோல (பலவீனமான ப்ரமாணம் கொண்டு) கூறுகின்றனர்.

ஆத்ம ஞானத்திற்கு பிறகு மீண்டும் பிறப்பு முதலிய அபிமானம் அடையட்டும் என்றால் அவன் அடைந்தது அறிவின்மையே. அவன் கர்மங்கள் செய்வான். யார் அறியாமையில் உள்ளவனை கர்மத்தில் இருந்து தடுக்க கூடும். – 76.

அதுமட்டுமல்ல அது அடைந்ததாகவே இருப்பதால் அடையப்பட வேண்டியது இல்லை. ஏனென்றால் .

ஆத்மா சாமான்யமாகவும், விஷேசமாகவும் இருப்பதால் கர்மமும் அப்படியே இருப்பதால் அது அந்த யோகியின் ஸ்வரூபமேயாகும். மூச்சு விடுவதும் , இழுப்பதும் போன்று அது உள்ளதால் அவர் கட்டளையை எதிர்பார்ப்பதில்லை. –77.

இப்படி பேதாபேதம் (பிரிவின்மையில் பிரிவு) உள்ளதாக ப்ரம்மத்தை எடுத்துக்கொண்டால், கர்மம் ஞானம் என்ற இரண்டும் இருக்க வாய்ப்பு உண்டு அல்லவா. அவை பிரிவில் உண்டாவதாலும், பிரிவின்மையில் உண்டாவதாலும் என்றால் அந்த கேள்விக்கும் இடமில்லை.

ஏனென்றால் இது வேறு என்ற புத்தி, பிரிவின்மையான புத்தியை விளக்காமல் பொருள்களை புரிந்து கொள்ள முடியாது. கூறியபடி ஒப்புக்கொள்ளாவிட்டால் அந்த பொருட்களில் வ்யவஹாரதன்மையே போய்விடுகிறது. இப்படி ப்ரமாணமல்லாத இந்த முடிவை, ஏற்றுக் கொண்டாலும் கூட, இரண்டு பிரிவையும் (பிரிவின்மையும், பிரிவும்) ஒப்புக்கொள்ளப்பட்டதால், பிரிவற்ற நிலையிலும் ப்ரம்மமானது துன்பத்தை அடைகிறது. அதனால் இதை கூறுகிறோம்.

பிரிவுள்ளதாகவும், பிரிவில்லாததாகவும், சாமான்யமானதாகவும், விசேஷமாகவும், ஏற்றுக்கொண்டால் ப்ரம்மம் நிச்சயமாக துன்பத்தை அடைகிறது. துன்பப்படும் எல்லா ஜீவன்களுடைய துன்பத்தையும் அனுபவிக்க நேரிடுவதால் இதை ஒப்புக்கொள்பவரின் அறிவை என்ன சொல்வது. - 78

அதனால், பக்குவமடைந்தவர்களுக்கு ஞானம் மட்டுமே வழி. கர்ம, ஞான சேர்க்கை எப்போதும் இல்லை என்று கூறி முடிக்கிறோம்.

இருட்டு எப்படி சூரியனுக்கு அங்கமாகாதோ, நெருப்பு எப்படி குளிர்ச்சிக்கு அங்கமாகாதோ, நீருக்கு எப்படி சுடும் தன்மை அங்கமாகாதோ அதுபோலவே ஞானத்திற்கும் கர்மம் ஒருபோதும் அங்கமாகாது. -79

நிரூபிக்கப்பட்ட முறையினாலேயே எதிராளியின் கேள்விகள் அத்துணையும் நிராகரிக்கப்பட்டு விட்டதால் கூற வேண்டியது ஒன்றும் பாக்கி இல்லாததால், யாகம் முடிந்தவுடன் மற்ற பாக்கியானதை குறித்த இடத்தில் தூக்கி எறிய கூறும் **பிரதிபத்தி கர்மத்தை** போல எதிராளியின் கேள்விகளை நிராகரிக்க கொஞ்சம் கூறவேண்டி இருக்கிறது என்று இதை கூறுகிறோம்.

முக்தி கர்மத்தினால் கிடைக்கிறது என்று பலதை நிரூபிக்கப்பட்டதால் (1-9) சரியில்லாததை கூறினீர்களே அதில் உள்ள முறையேடுகளை இப்போது கூறுவோம் --80

காம்ய கர்மங்களும், நிந்திக்கப்பட்ட கர்மங்களும் விடுக்க வேண்டும் என்று எந்த நிச்சயத்தை நீங்கள் கூறினீர்களோ அது கடைபிடிக்க முடியாதது. என்ன காரணத்தினால் என்றால், இரண்டு வகையாக தான் கர்மங்களை நிராகரிக்க முடியும், பலன் தர ஆரம்பித்துவிட்டவைகளை அனுபவித்தும், பலன்தர ஆரம்பிக்காத பாபகர்மங்களை பிராயசித்தத்தினாலும், மூன்றாவது வழியாக தன்னுடைய செயலற்றதான உண்மை ஸ்வரூபத்தை தெரிந்து கொள்வதால் என்றும், அது ஆத்ம ஞானத்தினால் என்று கூறப்பட்டபடியால் நீங்கள் அதை ஒப்புக்கொள்ளமாட்டீர்கள். அதில் அனுபவிக்கப்படாமல் ஆரம்பிக்காமல் இருக்கும் கர்மங்களை கடவுளினாலும் கூட விட முடியாது

என்ன காரணத்தினால். துவங்காது இருக்கும் கர்மத்தையே ஒருவன் செய்யாமல் விட முடியும். சுவதந்திரமானவன் என்பதால். ஆனால் செய்து முடிக்கப்பட்ட கர்மத்தில் அது இயலாது என்பதால், நிச்சயிக்கவும் முடியாது என்பதால் ஒருவரும் நான் உயிருள்ளவரை காம்ய கர்மமும், நிந்திக்கப்பட்ட கர்மங்களும் செய்ய மாட்டேன் என்று நிச்சயிக்க முடியாது. திறமைசாலிகள் இடத்தில் கூட, சிறிய தவறுகளை காண முடிவதால் ப்ரமாணம் இல்லாததாலும் அது இயலாது. ப்ரமாணமும் இல்லை. மோக்ஷத்தில் ஆசையுடையவன் நித்திய, நைமித்திக கர்மங்களை செய்யவும். காம்ய நிந்திக்கப்பட்ட கர்மங்களை நீக்கவும். பலன்தர ஆரம்பித்ததை அனுபவிக்கும் படி கூறவும். கர்மங்கள் முடிவில்லாததால் நாம் செய்த கர்மங்களுக்கு கணக்கு இல்லாததால், அதற்கு காரணம் சம்சாரம் அனாதியானதால் காம்யகர்மத்தையும் நிந்திக்கப்பட்ட கர்மத்தையும் அது செய்தே எதிர்க்கவும் முடியாது. அதிலும் புண்ய பாபம் சமமாக இருந்து எதிர்பு இல்லாததால், அதனால் கூறுகிறோம்.

கழிந்த எண்ணிக்கையில்லாத ஜன்மங்களில் செய்யப்பட்டது எண்ணிக்கையில்லாததால் எல்லா காம்ய கர்மங்களையும் நிந்திக்கப்பட்ட கர்மங்களையும் இப்போது விட முடியாது. – 81.

கூறப்பட்ட படியே ஆகட்டும் கழிந்த பல ஜென்மங்களில் செய்யப்பட்ட கர்மங்கள்.

எப்படி ப்ராயசித்த கர்மத்தினால் பாப புண்ணிய கர்மங்கள் நாசம் அடைகிறதோ, அப்படியே நித்திய கர்மங்களினால் ஆகட்டும் அவைகளின் நாசம் என்றால் , நித்திய கர்மத்திற்கு பலன் இல்லாததால், அது காம்ய , நிந்திக்கப்பட்ட கர்மங்களை விலக்க முடியாது. – 82

ப்ரமாணம் இன்மையாலும், எப்படி .

பாப கர்மங்களை நசிக்க ப்ராயசித்த கர்மங்கள் வேதத்தில் சொல்லப்பட்டது போல், காம்யகர்மங்களை அழிக்க நித்திய கர்மங்கள் என்று வேதத்தில் கூறப்படவில்லை. –83.

அதுவும் போகட்டும், காம்ய கர்மத்தினாலேயே முன் ஜன்மத்தில் செய்யப்பட்ட காம்ய கர்மங்கள் நாசம் அடையட்டும் என்றால் , அதுவும் முடியாது. எதனால்.

பாப கர்மங்களை எதிர்க்க எப்படி இங்கே பாபகர்மங்கள் ஆவதில்லையோ அதுபோல காம்ய கர்மங்களை எதிர்க்க காம்ய கர்மங்களால் ஆகாது. அவைகள் விரோத கர்மங்களில்லாததால் . -84.

இப்படி, முக்தி கர்மங்களில் என்பது நிரூபிக்கப்பட்டதால் (1-9) என்பது நிராகரிக்கப்பட்டது. இனி ஆத்ம ஞானத்திற்கு ஒரு ப்ரமாணமும் இல்லை என்று கூறப்பட்டது. அதை நீக்க கூறுகிறோம்.

ஷ்ருதியும் , ஸ்ம்ருதியும் இங்கு விருப்பமுடையவர்கள் பலவகையாக இருப்பதால் அவர்களுக்கு காம்ய பயன் தருவதாக பல கர்மங்களை கூறியிருக்கிறது. - 85

அதிகமாக இருத்தல் என்பது ப்ரமாணத்திற்கு காரணமாகாது. அதனால் கூறுகிறோம்.

ப்ரமாணத்தன்மை அடைவதற்கு பல இடத்தில் கூறப்பட வேண்டிய அவசியமில்லை. ஒரு விஷயத்திற்கு பல ப்ரமாணங்கள் அவசியமில்லை. ஒன்றுக்கு ஒரு ப்ரமாணமே போதும். - 86.

மிகவும் முயற்சி செய்து தேடியும் ( 1-15) என்று எதை கூறினீர்களோ அங்கும் தவறு உங்களுடையதே எதனால் என்றால்.

(**பரீக்ஷ்ய லோகான்** (மு.உ. 1.2.12.)) உலகத்தை விசாரித்து பார்த்து என்று ஆத்ம ஞானத்தை போதிக்கும் கர்மமில்லாதன்மையை அடைவதில் தாத்பர்யத்தை உடைய ஷ்ருதியை ஏன் நீ கேட்கவில்லை. - 87

ஆனால் ( **ஆத்மாத்யேவோபாஸீத** - ப்ரு 1-4-7) ஆத்மா என்று உபாசிப்பீர்களாக, (**ஆத்மா வா அரே த்ருஷ்டவ்ய** - ப்ரு 2-4-5) ஆத்மாவை

பார்க்க வேண்டும். ஆகியவை மனிதனை ஆத்மாவை அடையும் கர்மத்திற்கு கட்டளை இடுவதாக எடுக்க வேண்டும் என்றால் அப்படியில்லை. மனிதனுடைய நியமத்தினால் அடையமுடியாத ப்ரம்மத்தின் சுவரூபத்தின் ஞானத்தினால் மட்டுமே எல்லா ப்ரச்சனைகளும் முடிந்து விடும் என்பதால் ஞானமே முக்திக்கு வழி. கட்டளையை ஒப்புக் கொண்டாலும் இது வேறு எந்த வழியாலும் அறிந்து கொள்ள முடியாத அபூர்வ கட்டளையாக ஏற்க முடியாது. அதனால் கூறுகிறோம்.

நியமத்தை கூறும் கட்டளையாகவோ அல்லது **பரிசங்க்யாவிதி** (பரிசங்க்யாவிதி, இரண்டு சாதனங்கள் ஒரு சாத்யத்தை அடையும் நிலையில் மற்ற சாதனத்தை நீக்கும் விதி என்று பொருள்.) ஆகவும் இருக்கலாம். அனாத்மா தர்ஷனத்தை உடைய வழிகளை விட்டு பரமாத்மாவை அடையும் (ஷ்ரவனாதி) உபாசனையை செய்கிறோம். - 88

ஷ்ருதி ஸ்ம்ருதியை தவிர வேறு எதிலும் எங்களுக்கு நம்பிக்கையில்லை (1-15) என்று எதை கூறினாயோ அதுவும் கூட தூங்கி வழியும் மனதினுடைய கனவினை காண்பவனாக உன்னால் பிதற்றப்படடது. என்ன காரணத்தினால் என்றால், நாங்கள் ப்ரமாண பலத்தினால் மாத்திரம் அந்த அனுபவ ரூபமான ஆத்மாவை நிரூபிக்கவில்லை. அதனால்தான் எல்லா ப்ரமாணத்தையும் தருவது இயலாது என்று கூறுகிறோம். ப்ரமாணமும் தன் இருப்பு இருக்க, அனுபவத்தையே நாடுகிறது. அதனால் கூறுகிறோம். -

வேதவாக்கியத்தால் மட்டுமே அறியக்கூடிய விஷயத்தில் அதை மாத்திரம் நம்புவது சரியாகும். ஆனால், ப்ரமாணத்தினால் அறியப்பட முடியாது . தானே ஒளிர்கின்ற ஆத்மாவில் எப்படி நம்பிக்கை இல்லாமல் இருக்க முடியும் . - 89

கட்டளை இல்லாமலே செய்யப்படுவது பலன் தருவதில்லை (1-16) என்று எதை கூறினாயோ அதுவும் அறியாமல் எப்படி தெரிகிறது வேறு சமயத்தில் பலன் தர கூடிய கர்மத்தில் இந்த நியமம் சரியாக வரும் ஆனால் தெரிந்த மாத்திரத்திலேயே பலன் தரும் ஆத்ம ஞானத்தில் அப்படி ஆகமுடியாது என்று கூறுகிறோம்.

சம்சாரத்தின் காரணத்தை அழிக்ககூடிய ஞானத்தின் பலன் உடனேயே அனுபவமாகிறது என்றால், நீ ஞானம் ப்ரயோஜனமற்றது என்கிறாய் அது எங்களுக்கு நியாயமானதாக படவில்லை. - 90

ஜெய்மினியின் வார்த்தையை எடுத்துக்காட்டி நீ எதை கூறுகிறாயோ அதுவும் கூட அவரின் பொருளை புரிந்து கொள்ளாமலேயே , என்ன காரணத்தினால் என்றால் ஜெய்மினியின் அபிப்ராயம் வேதத்திற்கு எல்லாவற்றிற்கும் கர்மம் தான் பொருள் என்பது இல்லை. அப்படி அதுவே பொருளாக இருந்தது என்றால் இனி ப்ரம்மத்தை பற்றிய விசாரம் ஆரம்பமாகிறது, எதிலிருந்து ஜென்மம் தோன்றியதோ என்பது போன்ற ப்ரம்மத்தை நிரூபணம் செய்யும் மிகவும் நேர்த்தியான நியாயத்தையுடைய எல்லா வேதாந்தத்தையும் உள்ளடக்கிய **ப்ரம்மசூத்திரத்தை வ்யாசர்** செய்திருக்கமாட்டார் ஆனால் செய்திருக்கிறார். அதனால், ஜெய்மினியின் அபிப்ராயமும் இதுவேதான். எப்படி கட்டளையிடும் வாக்கியத்திற்கு அதன் பொருளிலேயே ப்ரமாணம். அதுபோல ப்ரம்மத்தை பற்றி கூறும் வாக்கியத்திலும் அதுபோலவே வேறு பொருள் சமமானமாக இருப்பு இல்லாததால் .

கட்டளை விஷயமான வேதவாக்கியங்கள் கர்மத்தை குறிக்ககூடியது நீ அதுவாய் இருக்கிறாய் போன்ற வாக்கியங்கள் கர்மத்தை குறிக்க கூடியது என்று எப்படி உன்னால் கூறமுடியும் - 91.

அதுமட்டுமில்லாமல், ஆத்மதத்துவத்தை மட்டுமே ஒப்புக்கொள்ளும் எங்களை போல பின்னால் பலன்தர கூடிய கர்மங்களை ஒப்புக்கொள்ளும் உங்களாலும் காமத்தில் முயற்ச்சி ஏற்க முடியாதது ஏன் -

சுவர்கம் செல்லும் விருப்பமுடையவன் **அக்னி ஹோத்ரம்** என்ற யாகத்தை முறைப்படி செய்யவும் என்று இறந்த பின் அடையகூடியதை கூறியிருக்கும் ஜெய்மினி, ஆத்மாவில் செய்பவன் என்ற எண்ணத்தை எங்ஙனம் கூறினார். - 92

கர்மத்திற்கு துணையாக இருக்கும் உடம்பு முதலிய எதுவும்

பற்றாததான ஆத்மாவில் கர்மம் புரிவதற்கு தகுதியும் இல்லை. என்ன காரணத்தினால் என்றால்.

எல்லா பிரமாணத்திற்கும் விஷயமில்லாத நான் என்ற அனுபவத்திலேயே அடையப்படும். ஆத்மா அஹங்காரத்தினால் முன்னிலைக்கு வராவிட்டால் அது ஜெய்மினியின் ஆத்மாவாக இருந்தாலும் கட்டளையால் எப்படி ஊக்குவிக்கமுடியும் . -93

ஆத்மாவில் எந்த முயற்ச்சிக்கும் காரணம் இல்லை . எதனால்

இன்பம், துன்பம் முதலியவைகளில் ஆத்மாவை அல்ல அஹங்காரத்தை குறிக்கிறோம். இன்பம் முதலியவை விஷயமாகியதால், ஆத்ம சாக்ஷிமாத்திரமாய் இருப்பதால், இப்படிப்பட்ட நிலையில் ஜெய்மினியின் ஆத்மாவாய் இருந்தாலும் கட்டளையால் எப்படி ஊக்குவிக்கமுடியும் . -94

இன்னும்

ஆத்மாவிற்கு உடம்பு முதலியவைகளுடன் சம்பந்தம் இல்லை. விஷயங்களுடன் ஆத்மாவின் சம்பந்தம் ஒருபோதும் தூரத்திலும் இல்லை. இப்படியிருக்க ஸ்வர்கம் முதலியவைகளில் இன்பத்துடன் எப்படி சம்பந்தம் இருக்கமுடியும் . - 95

எதனால் வேறு வகையாக ஒன்றும் இல்லையோ (1-18) தான் மனிதன் என்ற எண்ணத்துடன் செய்பவன் என்ற புத்தியுள்ளவனை நினைவில் வைத்தே (**குர்வனேவ** - ஈஉ -2) செய்து கொண்டே போன்ற மந்திரங்கள் வேதத்தில் உள்ளது. இரண்டற்ற ஆத்மாவை ஒப்புக்கொள்பவருக்கு அல்ல. - 96

செயல் இல்லாமல் வாக்யம் இருக்கமுடியாது (1-19) என்று எதை கூறினாயோ அதுவும் சரியானது இல்லை. அப்படியே இருந்தாலும் எந்த செயலையும் எங்கு வேண்டுமானாலும் சம்பந்தப்படுத்த முடியாது. ஆனால் எங்கு , எந்த சம்பந்தம் உடைய செயலை அந்த இடத்தில் வைத்தால் அது அந்த வாக்கியத்தின் அர்த்தத்தையும் எதிர்பார்ப்பையும் முழுவதுமாக ஆக்குகிறதோ

அதையே கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட செயலை நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். ஏனென்னறால் அது வாக்கியத்தின் பொருளுக்கு எதிராக இல்லாததால் எதிர்பார்க்கப்படாத பலனை தராததால் ஆறு வகையான மாற்றம் ( இருத்தல், பிறத்தல், வளர்தல், மாறுதல், கெடுதல், அழிதல்) இல்லாத எந்த துன்பமும் இல்லாத தானே ஒளிர்கின்ற ஆத்மாவை நாங்கள் கூறுகிறோம். அதில் இருக்கிறாய், இருக்கிறேன் போன்ற வினைச்சொற்களை வேறு எதையும் எதிர்பார்க்காத சொற்களை பயன்படுத்த வேண்டும். வேறு வகையான எதிர்மறையான பொருளை தரக்கூடிய சொற்களை இல்லை.

ஒரு என்ற சொல்லை தா என்ற சொல்லிற்கு பயன்படுத்த மாட்டோமே அதுபோல, வேண்டும் போன்ற சொற்களை தானே ஒளிரும் ஆத்மாவிற்கு பயன்படுத்த முடியாது. – 97

நீ அதுவாய் இருக்கிறாய் போன்ற வாக்கியம் ஆத்மாவை விட்டு வேறு பொருளை கூறுகிறது என்று எடுத்து கொள்ளமுடியாது என்று கூறுகிறோம்.

நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்யங்கள் ஆத்மாவை தவிர வேறு பொருளை குறிப்பதாக முப்பத்து முக்கோடி தேவர்களும் கூறமுடியாது – 98

எதனால் இப்படி .

வாக்கு , மனம், உடல் முதலியவற்றால் முறையாக செய்யப்பட்ட கர்மங்களினால் எல்லா ஆசிரமத்தினரும் முக்தியை அடைவர் ( 1-21) என்பது தவறு. ஏனென்றால், ஞானத்தினால் மட்டுமே முக்தி அடைய முடியும் –99

அதனால் இதுவும் கூட சரியாகும்.

தங்கள் மனக்கோட்டையினால் ஆட்கொள்ளப்பட்டு அதிலேயே சரியானது என்ற அறிவுடையவர்களான கர்மத்தை புரிபவர்களுக்கு அதனால் முக்தி என்ற வார்த்தை பொளிவை தருகிறது. ஆத்மாவை அறிந்தவர்களுக்கல்ல . –100

## <u>அத்யாயம் – 2</u>

**வித்யாகணப: நமஸ்துப்யாம் வரவரதே காமரூபீ |**
**வித்யாம் ப்ரயச்ச மஹ்யம் த்வாம் யஸ்மாத் சித்திர் பவது சதா ||**

வரத்தை அருளுகின்ற அழகு பொருந்திய உருவத்தை உடைய **வித்யா கணபதியே**, உனக்கு நமஸ்காரம், எனக்கு நீ வித்யையை அளிப்பாயாக. எதனால் எப்பொழுதும் நான் அடைய வேண்டியதை அடைந்தவனாக ஆவேனோ .

ப்ரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களுக்கு விஷயம் ஆகாததால் அவைகளுக்கு தன்னிலிருந்து உருவாக கூடிய சத்தம் முதலியவைகளுடன் சம்பந்தம் இருப்பதால். ஆத்மா எல்லாவகை விஷயங்களிலிருந்தும் வேறுபட்டிருப்பதால் எல்லாவகை துன்பங்களுக்கும் காரணமான சம்சாரத்திற்கு காரணமான அறிவின்மையை அழிக்கும் ஞானமே அதை எதிர்க்க கூடியதாக இருப்பதால் சூரியன் இருட்டை அழிப்பது போல <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> போன்ற வேதாந்த வாக்கியங்களால் உண்டான அறிவினாலேயே ஆகும் என்பதை பல வகையான யுக்திகளை கொடுத்து காட்டப்பட்டது. அதனுடைய பொருள் விளங்காமல் இருப்பதற்கு எது காரணமோ அதை விலக்க இந்த இரண்டாவது அத்யாயத்தை துவங்குகிறோம்.

<u>நீ அதுவாக இருக்கிறாய்</u> என்ற வாக்யத்தை கேட்டும் அதன் பொருள்

விளங்கவில்லையென்றால் அதற்கு காரணம் நீ, அது போன்றவைகளின் பொருளை உணராமையே. அதை இப்போது கூறுகிறோம். - 1

**நான் பிரம்மம்** போன்ற வாக்கயித்தின் பொருளை எவன் அதை உணர்த்தும் வேதாந்த வாக்கியத்தினாலேயே உண்டாகும் வேறு ப்ரமாணத்திற்கு அது விஷயமாகாததால் என்ற விஷயத்தை தீர்மானமாக தெரிந்து கொள்ளவே எதிராளியின் கேள்வியின் மூலம் தெளிவிக்கின்றோம்.

இந்த சம்சாரம் முழுவதும் விலகும் பொருட்டு இந்த சம்சாரம் விசாரத்தினால் நிர்ணயம் செய்ய முடியாது என்றோ, கேட்ட வாக்கியத்தை நினைவு கூர்ந்தோ, குருவிடம் இருந்து வாக்யத்தை கேட்டோ தெளிகிறார்கள். - 2

இங்கு வாக்யத்தை கேட்காமலும், அதை கேட்பதாலும் ஞானம் உண்டாகிறது. என்பதால் கூறுகிறோம்.

**பிசாசகனை** போல வாக்யத்தை கேட்டதினாலேயே ஒருவன் (தான் ப்ராமணன் என்ற ) ஞானத்தை அடைகிறான். **விராட்**(ப்ரு 1-4-2), ப்ரு (3-1-1) , **ஸ்வேதகேது** (6) போல வாக்யத்தினால் இல்லாமல் வேறு வழியில் ஞானம் உண்டானது. குருவிடம் கேட்ட வாக்யத்தை விசாரம் செய்வதால் நிச்சயமாக ஞானம் உண்டாகிறது. - 3

வாக்கியத்தினால் ஞானமடைவது பல வகையாக இல்லை. ஆனால் நியமமாகவே ஆகிறது. ஏனென்றால் .

கூறப்பட்ட முறையில் ஞானம் வாக்யத்தின் மஹிமைகளாலேயே என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், வாக்யம் இல்லாமல் எவரும் அதன் பொருளை முழுமையாக தெரிந்து கொள்ள முடியாது . -4

வாக்யமும் எதை உணர்த்த உபயோகப்படுத்தப்பட்டதோ அதை உணர்த்தியே தீரும் எல்லா ப்ரமாணங்களுடைய தன்மையும் அப்படியானதால்.

உடம்பிலோ அல்லது இந்திரியங்களிலோ அல்லது ஆத்மாவிலோ அல்லது மனதிலோ விரோதம் , நீ சத்ப்ரம்மமாக இருக்கிறாய் என்ற வாக்யத்தின் பொருளை உணர்ந்தவருக்கு உண்டாகிறது இல்லை. - 5

விரக்தியை (சம்சாரத்தில் இல்லாமல் ப்ரம்மத்தின்மேல் விருப்பம் ) அடையாதவருக்கு துன்பத்தை தரும் சம்சாரத்திலிருந்து விலக வழியில்லை. உலக ஆசைகள் ( உலக விஷயங்களில்) உள்ளவனுக்கு மோக்ஷம் அடைவதற்கு விருப்பம் உண்டாவதில்லை. - 6

மோக்ஷத்தில் விருப்பமில்லாதவனுக்கு குருவின் பாதங்களை அடையும் வழியுமில்லை குருவின் பாதங்களை அடையாதவனுக்கு அவரிடம் இருந்து வேதாந்த வாக்யத்தை கேட்டல் நடப்பதில்லை. - 7

வாக்யமில்லாமல் சொற்களும் அதன் பொருளும் புரிவதில்லை. நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் சிந்திக்காமல் எதை சார முடியும். - 8

நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் இல்லாமல் வாக்கியத்தின் பொருளும் தெளிவாக புரிவதில்லை. அது புரியாமல் அறிவின்மையின் விலகலும் உண்டாகாது . -9

அறிவின்மையை விலக்காமல் மோக்ஷம் அடைவது ஆகாது. அதனால் கூறப்பட்ட (நீ என்பதின் பொருள்) பொருளை விலக்கவே இந்த க்ரந்தத்தை தொடர்கிறோம். -10

மலத்தை ஆத்மா இல்லை, அது கார்யமாவதால் என்று எப்படி தெரிந்து கொள்ளப்படுகிறதோ அதுபோல, அன்னத்தினால் உண்டான இந்த்ரியம் , சரீரம் முதலியவைகளை (ஆத்மா இல்லை என்று ) ஏன் தெரிந்து கொள்வதில்லை . - 11

முன்பும், பின்பும் (அரிசியாகவும், மலமாகவும்) அது ஆத்மா இல்லை என்ற எல்லோரும் அறிந்ததால் இடையிலும் ( சரீரமும்) அப்படியே என்பதை அறிய என்ன தடை. முன்பு அனாத்மாவானது (ஜடமானது) அறிவின்மையால்

ஆத்ம தன்மையை அடைகிறது. மாலை, வாசனை பொருள் போன்று உடம்பும் ஜடமானது என்று அறிவுள்ளவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். - 12.

இப்படி கூறிய என் வார்த்தைகளை நீ கேட்கவில்லையென்றால், இந்த அழுக்கு மயமான உடம்பிலிருந்து உனக்கு தன்னாலேயே விருப்பமின்மை உண்டாகும்படி உனக்கு ஆகும்.

எதுவரை உடம்பை நான் என்று எண்ணுகிறாயோ அதுவரை உன்னை அதிலிருந்து கொண்டு செல்ல முடியாது. (மரணத்திற்கு பிறகு) நாய்களின் வசம் உள்ளதாகும் உன் உடம்பை இப்படி நான் என்று எண்ண மாட்டாய் . -13

(பிணத்தின்) தலையை தன் பாதங்களால் பிடித்துக்கொண்டு மற்ற நாய்களை நோக்கி குறைக்கிறது. எந்த உடம்பில் நான் என்ற எண்ணத்தை நீ வைத்துக் கொண்டு இருந்தாயோ, அப்படியே மற்றவர்களும் செய்வதை கண்டும் ஏன் அதில் அத்துணை பற்று வைக்கிறாய். - 14

புத்தி முதல் உடம்பு வரை அனைத்துமே அனாத்மா என்பது வேதத்தில் இருந்து தெரிய வருகிறது என்பதை கூறுகிறோம்.

வைக்கோல், அரிசி, உமி போன்ற மூன்றும் ஒரே விதையில் எப்படி உண்டாகிறதோ, அப்படியே புத்தி, மாமிசம், மலம் எல்லாமே அன்னத்திலிருந்து (உணவிலிருந்து) ஆகிறது. - 15

கூறப்பட்ட பொருள் தெளிவாகினால் விருப்பு, வெறுப்பு முதலியவைகளால் ஒருவர் ஆட்கொள்ளப்பட்டு துன்பப்படமாட்டார் - என்பது தீர்மானமாக வேண்டி உதாரணத்துடன் கூறுகிறோம்.

மலம் கழித்த பின் அதில் தோஷம் உள்ளதை கண்டு கொண்டு, அந்த தோஷத்தை ஒருவர் கூறுவாறாகில், அவருக்கு அதானால் என்ன மாற்றம் உண்டாகும். - 16

அதுபோல இந்த ஸ்தூல உடம்பையும், ஸுக்ஷ்ம உடம்பையும்

அறிவின் துணைக்கொண்டு விட்டு விட்டால் அதை குறை ஒருவர் கூறுவாறாகில் அதனால் அறிவுள்ளவருக்கு என்ன மாற்றம் உண்டாகும். -17

நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்ற வாக்யத்தில் கூறப்பட்ட பொருளை உணர்தலுக்கு காரணமாக நான், எனது என்ற அறிவை இந்த புத்தி முதல் உடம்பு வரையிலான எல்லாவற்றில் இருந்தும் சந்தேகமில்லாமல் விலக்குவது, அது விலக்கினால் வேறு எதனிலிருந்தும் பிரிக்க முடியாதவராகிறார். தன் ஆத்மாவிலேயே அவர் தனித்து இருக்கிறார் என்பதை கூறுகிறோம்.

எதிரி, உறவினன் , தன்னுடைய உடம்பிலும் எப்பொழுதும் ஒன்றாகவே பார்க்கும் அறிவாளிக்கு ஒருவரும் எப்படி தன் உடம்பு, உறுப்பில் ஒருவர் கோபம் கொள்வதில்லையோ, அப்படியே , எதில் கோபம் வரும். -18

உடம்பு முதலியவை ஆத்மா இல்லை என்பதற்கு இன்னும் காரணங்கள்.

பானை முதலியவைகள் போல, அது பார்க்கப்படும் பொருளானதால், அதே கருவிகளால் அதுவும் பார்க்கப்படுவதாலும், கனவில் (நான் இருந்தும்) இந்த உடம்பானது தெரிவதில்லை. அதனால் அறிவாளிகள் உடம்பை ஆத்மா இல்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். -19

உடம்பு முதலியவைகளில் போகத்திற்கு பாத்திரமாகவும் (அனுபவத்திற்கு ) வழியாகவும் (கருவி) உள்ள சேர்க்கையினால் ஆத்மாவை வேறாகவும், ஒன்றாகவும் பார்ப்பவரின் பலன்களும் வேறு வேறாக கண்கூடாகவே தெரிகின்றது.

நான்கு நபர்களால் முழு பலத்தையும் பிரயோகித்து தூக்கப்படும் இந்த உடம்பானது அறிவில்லாதவர்களின் நான் என்ற புத்தியால் மிகவும் லேசாகிறது. -20

எல்லோரும் ஒப்புக்கொள்வதால் இந்த பகுதியை முடிக்கும் பொருட்டு

கூறுகிறோம்.

வானத்தில் தெரியும் நீலத்தை விசாரத்தினால் விளக்குவதுபோல இந்த ஸ்தூல உடம்பையும் ஆத்மதன்மை இல்லாதது என்ற விலக்கி, ஸுக்ஷ்ம உடம்பையும் அதுபோலவே விசாரித்து விலக்கவும். -21

ஸுக்ஷ்ம உடம்பை எப்படி விலக்குவது என்றால் கூறுகிறோம்.

அஹங்காரம் (நான், எனது என்ற எண்ணம்) , முயற்சி, விருப்பம் இவைகள் ஆத்மாவின் தர்மங்கள் இல்லை, இளைப்பு முதலியவை போல, தன்னிலிருந்து வேறாக இவை இருப்பதாலும், தான் இருந்தும் இவை இல்லாததாலும், எப்படி துணி முதலியவைகளோ அப்படியே. - 22

வேறாக இருப்பதற்கு உதாரணம்.

நெருப்பு எப்படி அதன் தர்மமான சுடும் தன்மையை எதிர்ப்பதில்லையோ, அது எப்படியோ, அப்படியே ஆத்மாவும் (அஹங்காரம் முதலிய) தர்மங்களை தான் என்றே அறியும். வேறாக அல்ல. - 23

ஆத்மாவானது செயல்தன்மை உடையதாகவும் அதை புரியும் தன்மையுடையதாகவும் எப்போதும் இருக்க முடியாது, என்பதை கேட்ட **மீமாம்ஸகர்கள்** (கர்மம் புரிபவர்கள்) கூறுகிறார்கள். நான் என்ற எண்ணம் உண்டாகிறதால் அதை அறிவதே ஆத்மா என்று அதை விளக்கவேண்டி கூறுகிறோம்.

எது கர்மமாக (விஷயமாக) அறியப்படுகிறதோ அது அதை செய்பவராக இருக்க முடியாது. எப்படி பானை என்ற அறிவு உள்ளதோ, அப்படி நான் என்பது இல்லை. - 24

இங்கு கூறப்படுவது என்னவென்றால் பிரத்யக்ஷத்தினால் ஆத்மாவில் கர்மத்தன்மையும் (விஷயத்தன்மை) செய்பவர் என்ற தன்மையும் ஒப்புக்கொள்ளப்பட்டால் அதை (பிரத்யக்ஷத்தை) சார்ந்து செய்யப்படும்

அனுமானத்தினால் அதை விடுவது என்பது நியாயமானது இல்லை. இந்த சந்தேகத்தை விளக்கவே ப்ரத்யக்ஷத்தை பற்றி கூறுவோம்.

எது காண்பவரினால் காணப்படுகிறதோ அது அந்த பொருளினுடைய தர்மமே (தன்மை) ஆகும். காண்பவருடையது அல்ல. காண்பவரிடத்தில் இருக்கும் தர்மமானது (தன்மை ) காணப்படுவது ஆவது இல்லை. எப்படி காண்பவரின் ஞானம் காணப்படுவது ஆவதில்லையோ. – 25

ப்ரத்யக்ஷத்தினாலேயே நீங்கள் (மீமாம்சகர்) ஒப்புக்கொள்ளும் ப்ரத்யக்ஷத்தை தவறு என்று நிரூபித்துவிட்டதால், செய்யப்பட்ட அனுமானம் சரியானதே. அதனால் அதை விவரிக்கிறோம். அதை இப்போது விகல்பம் (வழிகள்) தந்து அதில் உள்ள தவறுகளை காட்டுவோம்.

ஆத்மாவின் வழியாகவோ அல்லது அதன் பகுதியின் (அம்சம்) வழியாகவோ தன்னில் இருக்கும் தர்மங்களை அறிவது முடியாது. காரணம் இரண்டல்லாததால் (பாகம் இல்லாததாலும்) சமானமானதாலும் (அம்சத்தை இரண்டு பாகமாக ஒப்புக்கொண்டாலும் அவை) ஆத்ம விஷயமாக இல்லாததால் . – 26

ஒரே நேரத்திலோ அல்லது ஒவ்வொன்றாகவோ ஒரே தர்மம் விஷயமாகவும் அதை காண்பவராகவும் இருக்க முடியும் என்றால், அது முடியாது என்பதை விளக்கி கூறுகிறோம்.

காண்பானாக இருப்பதால் அது காண்பவராக மட்டுமே இருக்க முடியும் – விஷயமாக இல்லை. வேறு நேரத்தில் ஆகட்டும் என்றால் காணப்படுவது காண்பான் இல்லாமல் இருக்க முடியாது . – 27

இருக்கட்டும். என்னுடையது ஆகியவை அனாத்மா என்றே கூறப்படுவதால் ஆனாத்மாவானது முதலியவைளின் தர்மங்களாக ஆகட்டும் . ஆனால், நான் என்பது தன்னுடைய ஆத்மா சம்பந்தமாகவே எல்லோரும் அறிந்ததாகையால் நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்ற ஷ்ருதி வாக்கியத்தினாலும், அது அனாத்மா என்பது நியாயமானது இல்லை என்றால்,

அப்படி இல்லை.

அஹங்கார தர்மத்தை நான் ப்ரம்மாக இருக்கிறேன் என்ற வாக்கியத்தினால் ஆத்மாவிலிருந்து வேறல்லாததாக கொண்டால் , நான் வெள்ளையாக இருக்கிறேன் என்ற இடத்திலும், நான் என்பதை வெள்ளையாக ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் உண்மையில் (நான் ப்ரம்மமாக இருக்கிறேன்) என்ற வாக்யம் அஹங்காரத்தை நீக்குவதாக இருக்கிறது. - 28

எப்படி அந்த வாக்யம் அஹங்காரத்தை நீங்குவதாக இருக்கிறது என்கிறீர்கள். கூறுகிறோம்.

எது இந்த தூணானதோ, அது இந்த மனிதர் தான் என்ற , மனிதர் என்ற அறிவினால் தூண் என்ற அறிவு (தவறான ) விலகுகிறதோ, நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்ற அறிவினால் பாக்கி இல்லாமல் எல்லா தவறான அஹங்கார புத்தியையும் நீக்கிவிடகிறது. - 29

அஹங்காரம் ஆத்மாவின் தர்மமல்லாததை விலக்கினால் வேறு இந்த இரண்டானதான எதுவும மீதம் இருப்பது இல்லை. அதற்கு காரணமில்லாததால் அதை கூறுகிறோம்.

நான் என்ற புத்தி விலகினால் அதனுடன் என்னுடையது என்ற புத்தியும் விலகும். ஏனென்றால் அதற்கு நான் புத்தி காரணமானதால் எப்படி இருட்டு நீங்கினால் (அதனால் கயிரில் உண்டான) பாம்பு நீங்குகிறதோ. -30

கூறப்பட்ட உதாரணத்தை விளக்கிக் கூறுகிறோம்.

இருட்டு காரணமாக பிரம்மையினால் தவறாக கயிறில் பாம்பு தென்படுகிறது. அந்த தவறான பிரம்மையில்லாமல் கயிரில் ( மாலையில்) பாம்பை ஒருவர் காணுவதில்லை . - 31

(தூக்கத்தில்) தொடருவது இல்லை என்பதாலும் அஹங்காரம் ஆத்மாவின் தர்மம் இல்லை.

நான் என்ற அஹங்காரம் ஆத்மாவின் தர்மம் என்றால், அது முக்தியிலும், தூக்கத்திலும் இருக்க வேண்டும். எதனால், அது தொடர்வதில்லையோ அதனால் அஹங்காரம் மற்றதின் தர்மம். - 32

ஆத்மாவின் தர்மம் என்று ஒப்பிக்கொண்டால் நீக்க முடியாத தவறுக்கு காரணமாகும்.

அஹங்காரத்தை ஆத்மாவின் தர்மம் என்று ஒப்புக்கொண்டால் அதுவும் ஞானத்தை போல நித்யமானதாகும். அப்படி ஆனால் மோக்ஷத்தை பற்றி கூறும் வேதாந்த வாக்யம் உடனே உபயோகமற்றதாக ஆகிவிடும். - 33

சுபாவமானது அந்த அஹங்காரம் என்று ஒப்புக்கொண்டால், அது (தவறு) இல்லாமல் நீங்க வழியிருக்கும். மாம்பழத்தைப் போல என்றால், அப்படியில்லை.

மாம்பழம் போன்றவைகளில் மாற்றம் இயல்பானதே. அதன் ஒரு குணம் மறைவதும் , புதிய குணம் உண்டாவதும், அதுபோல ப்ரம்மத்தில் முடியாது மாறும் தன்மை இல்லாததால். வேதமும் பார்ப்பவன் அழிவதில்லை **(நஹி த்ரஷ்டு, விபரிலோபோ வித்யதே** - ப்ரு -4-3-23) - 34

அஹங்காரம் போவதும் வருவதுமாக அநித்யமாக இருப்பதால், அது எதில் இருக்கிறதோ (ஆத்மா ) அதுவும் (தர்மியும்) அப்படியே, அதனாலேயே அநித்யமாகும்.

வருவதும், போவதுமாக இருக்கும் அஹங்காரத்தை தன்னில் ஆத்மா வைத்திருப்பதால் அதுவும் அநித்யமாகவே இருக்கும். ஏனென்றால் உண்டாவதும் அழிவதுமான தர்மத்தை உடையது, தர்மியானதிலும் (ஆத்மாவிலும்) மாற்றத்தை கொண்டுவரும். - 35

பௌத்தர்கள் ஆத்மா அநித்யமாக இருக்கட்டும் அதனால் என்ன நஷ்டம் உண்டாகும் , ப்ரமாணத்தினாலும் இதுவே முடிவாக ஏற்கப்பட்டுள்ளது

என்றால் அப்படி இல்லை.

கூர்மையான புத்தியுடையவர்களுக்கும் எப்பொழுதும் அனுபவமாகின்ற ஆத்மா சாக்ஷியாக எப்பொழுதும் தானே ஒளிர்கின்றதால் அதை விலக்க முடியாது. எப்படி ப்ரத்யக்ஷமான பானையை எவ்வளவு தர்க்கம் கொடுத்தும் இல்லை என்று விலக்க முடியாதோ, அப்படியே. - 36

இந்த காரணத்தினால் அஹங்காரம் அனாத்மா என்பதை நிச்சயம் செய்து கொள்ளுங்கள்..

சாக்ஷி ப்ரமாணத்தினால் பார்க்கப்படுவதால் அஹங்காரம், பானை முதலியவைகளை போல பார்க்கப்படும் பொருளாகிறது. எதனால் ப்ரமாணம் ஆகின்ற பொருள்கள் அறியப்படுகின்றதோ அது எப்படி பொருளாகும் . -37

தர்மமாக கூறப்படும் அஹங்காரமும் அதன் தர்மியான ஆத்மாவும் விரோதமான இயல்பை உடையதாலும் அது தர்மாதர்மியாக இருக்க முடியாது.

அஹங்காரம் பார்க்கப்படுவதாலும் குணமானதாலும் அது தர்மியான ஆத்மாவிலிருந்து விரோதமானது காற்றினால் தூண்டப்படும் நெருப்பானது குளிர்மை தன்மையை அடையாது. - 38

அதனால் சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்ளுங்கள்.

அறிகின்றவரும், அறியப்படுபொருளும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. அறிபவர் எதை அறிகின்றாரோ அதன் மூலம் அவர் அறியப்படமுடியாதவர், அறிவும் அதன் சுவரூபமான அறிபவரை அறியாது. -39

அறிபவரும் தன்னால் அறியப்படும் புத்திக்கு பொருளாக ஆனால் எல்லா வ்யவஹாரமும் முடிவை அடைந்து விடும். ஏனென்றால் .

அறிபவரும் தன்னால் அறியப்படும் புத்திக்கு பொருளாக (விஷயமாக)

ஆனால், அவரும் அறியப்படுபொருளாக ஆகின்றது. அதனால் (ஒன்றானதால்) உடனே (**அதிருஷ்யம்**) பார்க்கமுடியாதது போன்ற வேத வாக்கியங்களும் உபயோகமற்றதாகும். -40

எப்படி என்றால்.

அறிபவர், அறிபடுபொருளின் தன்மையும், அறிபடுபொருள், அறிபவர் தன்மையையும் அடையும் என்றால் அறிபடுபொருள் மாத்திரம் ஆகும். உலகம் இல்லாவிட்டால் அறிபவர் மாத்திரமாகும் பொருளில்லாமல் . -41

கூறப்பட்ட நியாயத்தை உறுதியாக்க வேதத்தில் கூறப்பட்ட உதாரணத்தை கூறுகிறோம்.

(**அதோ அன்யதார்த்தம்** ப்ரு -3-4-2)) மற்றவை (ஆத்மாவல்லாதவை) அழியக்கூடியது, (**நேதி நேதி** ப்ரு - 3-9-23)) இது இல்லை த்ருடமான (மூர்த்தமான) இது இல்லை திருடமில்லாத (அமூர்த்தமான) போன்ற வாக்யங்களினால் மீண்டும் மீண்டும் ஆத்மா குணமற்றது என்று கூறும் வேதத்தை எப்படி நீக்க முடியும் . -42

மஹாபூதம், அஹங்காரம் முதலியவை க்ஷேத்ரம் என்று **பகவான்** கூறுகிறார். அவருடைய பார்வையிலும் கூட அறிபவருக்கும் (ஆத்மாவுக்கும்) அறிபடுபொருளான (அஹங்காரம் முதலிய) வைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. -43

இப்பொழுது கூறிய விஷயங்களை முடிக்கிறோம்.

இப்படியாக கூறப்பட்ட வழியில் ஆத்மாவிலிருந்து வேறானது இந்த பொய்யான சம்சாரம் (ப்ரபஞ்சம்) என்று இந்த கவலைக்கெல்லாம் காரணமான பிரித்தறிவதற்கு கடினமானதாக இந்த அனாத்மாவான த்வைதத்தை தெரிந்து கொள்ள வேண்டும். -44

எப்படி பொய்யானதன்மை உண்டானது இந்த த்வைதம் என்றால்.

ஆத்மாவை தவிர மற்றப் பொருள்களை ஆத்மாவிலிருந்து வேறாகவோ அல்லது ஆத்மாவிலேயே இருத்தலை காட்ட முடியாது. இப்படி தவறான அறிவினால் உண்டான அஹங்காரம் முதலியவை ஆத்மாவில் (ஆத்மாவென்றே ) கற்பனை செய்யப்பட்டது .– 45

அதனால் அறிவின்மையால் (அஞ்ஞானத்தினால்) உண்டானவை இவை.

ஓசை முதலியவை அறிபடுபொருள்களாகவே எப்போதும் இருக்கிறது. அறிபவரான ப்ரம்மமோ (ஆத்மாவோ) குணம் (தர்மம்) இல்லாததாக இருக்கிறது. அஹங்காரம் இந்த இரண்டையும் தழுவியிருந்து ஆத்மாவை போன்ற ஒரு போலி தோற்றத்தை உண்டாக்குகிறது. – 46

அதுவே, இந்த இரண்டற்றதான ஆத்மாவில் த்வைத புத்தியை கொண்டு வருகிறது.

பார்ப்பவரான ஆத்மா ஒன்றாக இருந்த போதும் எல்லா உயிர்களிடத்தும் (அந்தக்கரணமாக) பலவாக இருப்பது போல தோன்றுகின்றது. எப்படியென்றால், நீர்நிலைகள் பல இருக்கும்போது அதில் தெரியும் பல சூரியன் போன்றது. --47.

கூறப்பட்ட பொருளை விளக்க உதாரணம்.

எப்படி நண்பன், பொதுவானவன், எதிரி போன்று வேறுவேறு பேரால் ஒரே நபரில் காணவருகிறதோ, அதுபோல ஒரே ஆத்மா (சைதன்யம்) பல அந்தக்கரணத்தின் காரணத்தினால் பலவகை எண்ணப்படுகிறது. --48

நீர் பாத்திரத்தை கொண்டு வருவது, கொண்டு செல்வது போன்ற செயல்கள் எப்படி சூரியனின் செயல்கள் போல ஆகின்றனவோ அவைகளின் அளவே சூரியனின் அளவாவது போல, அவைகள் அடையும் இடத்தையெல்லாம் சூரியனும் அடைவது போல மாற்றமில்லாத தன்மையுடைய

ஆத்மா அந்தக்கரணத்தின் தன்மையால் செயல் முதலியவை புரிவது போல ஆகின்றது. -49

ஒரே ஆத்மாவில் விபரீதமான தர்மங்கள் இருப்பது முடியாது என்று கருதக்கூடாது. என்ன காணரத்தினால்,

போலியாக தோன்றும் (கற்பிதம் செய்யப்படும்) பொருள்கள் உண்மையானதாக இல்லாத காரணத்தால் அவை ஒரே இடத்தில் இருக்க முடியும். எப்படி, ஒரே பெண்ணை கவர்ச்சியானவளாகவும் (காமுகனுக்கு) , தீண்டதகாதவளாகவும் (சன்யாசிக்கு), சுவையுள்ளவளாகவும் (நாய், கழுகுக்கு) பார்க்கும் தன்மை இருப்பது போல. - 50

இந்த செயல், வழி அதன் பலன் போன்றவை ஆத்மாவை சிறிதும் தீண்டுவதில்லை. அவை அஞ்ஞானத்தினால் மட்டும் உண்டாவதால்.

இரண்டற்றதாக இருந்தும் போலியான பொருட்களின் மேல் உண்டான அறிவின்மையால் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வது, சோம சர்மாவின்( பஞ்சதந்திரத்தில் கற்பனையால், இருந்த பாலையும் இழந்த) தந்தையை போல, --51

பொருட்களுடைய உண்மையான இயல்வை அறியாத அறியாமை என்ற கண்நோயால் மறைக்கப்பட்டு .

சுத்தமில்லாத, சரியில்லாத (கழுதை, கம்பம்) பொருட்களையும், அழகான புருவம் உடையவள், அழகான மூக்கு உடையவள், அழகான முகத்தை உடையவள், அழகான கண்களை உடையவள், அழகான சிரிப்பை உடையவள் என்று தவறாக மோகத்தினால் கட்டியனைப்பதுபோல. -52

இந்த விலக்க விருப்பப்படும் எல்லாவித துன்பத்திற்கும் காரணம் அஹங்காரம் தான் அது ஆத்மாவுடன் சம்பந்தம் வைத்திருப்பதால் ஆத்மாவில் இந்த அறிவின்மையோடோ அதன் செயல்களிலோ எந்த சம்பந்தமும் இருந்ததில்லை , இருக்கவும் போவது இல்லை. அது எப்போதும்

விட்டு போகாத ஞானத்தை இயல்பாக உடையதாகையால்.

பொருட்களை ஆத்மாவின் சம்பந்தம் உடையதால் பார்ப்பதாகவும், ஆத்மா அதை பார்ப்பதால் பொருள்களாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்ற இந்த அஹங்காரம் அழிந்தால் ஆத்மா இரண்டற்றதாக தானே ஒளிரும் . -53

இங்கு சிலர் சந்தேகிக்கின்றனர். வேதாந்த வாக்கியத்தினை அறியும் பொருட்டு நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் அனாத்மாவாக காட்டப்பட்ட இந்த அஹங்காரம் அது தவறான பொருளை கூடியாதாகிறது. ஏனென்றால் , நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்று ப்ரம்மத்தையும், அஹங்காரத்தையும் ஒரே தளத்தில் (வேற்றுமை உருபு கொண்டு) கூறியிருப்பதால் அது ஆத்மாவுடன் ஒரே தளத்தில் இருக்கும் தன்மையை அடைகின்றது என்று அதனால் **நான்** என்பது இங்கு ஆத்மாவை குறிக்கின்றது என்று கூறப்படவேண்டும். அதை **அபிதா, லக்ஷண, கௌணம்** என்ற இந்த முறைகள் வழியாக கூறுகின்றோம். (**அபிதா** - ஒரு சொல்லின் பொருளை கூறுவது, அதனுடைய சக்தியும் , **லக்ஷண** - அபிதாவுடன் சம்பந்தமுடைய பொருளை கூறுவது, **கௌண** - அபிதா பொருளுடைய குணத்துடன் (விசேஷத்துடன்) சம்பந்தம் உடையது கூறுவது). -

அஹங்காரம் (நான்) அற்ற தூக்கத்திலிருந்து விழித்தவர் கூட நான் ஒன்றும் அறியவில்லை என்றே கூறுகின்றனர். இரும்பு சுடுகிறது என்று (இரும்பை நெருப்புக்கு லக்ஷணமாக கூறுவது போல, நான் ப்ரம்மமாக இருக்கிறேன் போன்ற வாக்யங்களில் ) அந்த வாக்யங்களில் லக்ஷணையால் தன் ஆத்மாவையே குறிக்கின்றனர். -54

அருகில் இருப்பதினால், மிகவும் சந்தோஷமாக இருப்பதால், இது நான் என்று சொல்வதாலும், (பானை போன்ற) வேறு வ்ருத்திகளால் இல்லாமல் நான் என்றே வ்ருத்தியினாலேயே ஆத்மாவானது குறிக்கப்படுகின்றது. -55

ஆத்மாவுடனேயே, இருப்பதால் எப்போதும் ஆத்மா இல்லாமல் அது அழிந்துவிடும் என்பதாலும், ஆத்மா இல்லாமல் அது இருக்கும் என்பது ஒரு போதும் ஆகாது ஆகையால் அஹம் (நான்) என்றே தன் ஆத்மா குறிப்பிடப்படுகின்றது. - -56

மறுபடி எப்படி இந்த ஆத்மா என்கிற **வஸ்து** (பொருள் ) காட்டப்படுகிறது.

பேர் உருவம் போன்றவைகளிலிருந்து வேறாக எந்த பாகம், இல்லாத , செயல், வழி, பலன் போன்றவை இல்லாமல், எல்லா இடத்திலும் வியாபித்து இருக்கும் ஆத்ம தத்துவமே எங்களால் தானே ஒளிர்கின்ற ஆத்மா என்று கூறப்படுகின்றது. (லக்ஷணை வ்ருத்தியினால்). –57

அறிவின்மையினால் உண்டான புத்தி முதலிய செய்பவர் என்ற வகையிலேயே நேர்மடையாகவும், எதிர்மடையாகவும் நான் இன்பமானவனும், துன்பமானவனும் கூட என்ற அஹங்காரம் முதலியவைகைள அனாத்மா என்று கூறினோம், வெறும் ஆத்மாவை விவரிக்க முடியாதாகையால் அதற்கு பலன் இல்லாததாலும் இப்போது அறிவின்மை (அவித்யா ) யினால் தவறாக கற்பனை அதனால் செய்யப்பட்ட சாக்ஷியை அண்டி (ஆதரித்து), புரிபவர் முதலிய எல்லா மாற்றங்களையும் நிராகரிக்க வேண்டி கூறுகிறோம்.

எல்லோருடைய புத்தியிலும் அநித்யமாக, ஜடமாக, மாறுபடுகின்றதாக இருக்கும், நாட்டியத்தை , ஒரே பொருளாக இருக்கும், எப்போதும் இருக்கும், ஆத்மாவானது, பார்க்கும் செயல் புரியாமல் இருந்தும் பார்க்கிறது. –58

ஆனால் எல்லோருடைய முடிவும் (ஆத்மா அநித்யத்தின் சம்பந்தத்தினால் தெளிவாக இல்லை என்ற விஷயத்தில்) அவரவர் பார்வைக்கு சரியாக இருப்பதாக தெரிவதாலும், வேறொருவர் பார்வைக்கு அதில் எல்லா வகை தவறுகளும் தெரிவதாலும், ஒரு இடத்திலும் நமக்கு நம்பிக்கை பிறப்பதில்லை. அது மட்டுமில்லாமல், எல்லா தார்க்கிகர்களும் தவறு, குறைகூறாத, ஒப்புக்கொண்ட ஒருவரும், ஆனால் என்று கேள்வி எழுப்பாத , ஒரு நிலை உண்டாகவில்லை யென்றால் கூறுகிறோம். (முதலில் நம்பிக்கை உண்டாகட்டும், எல்லா தர்க்க க்ரந்தங்களிலும் அனுபவத்தையே அடிப்படையாக கொண்டதால்) அதை கூறுகிறோம்.

தர்க்கம் என்ற ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டவர்களான இந்த விசார

சீலர்கள் இந்த கேள்வியை முன்னிட்டு (குணதோஷத்தின் சாக்ஷியின் ஆனவத்திலேயே) இதனால், இதனால் என்று காரணத்தை கூறும் வாக்கியங்களினால் ஒருவர் மற்றொருவரை மோஹமான ப்ரம்மையில் ஆழ்த்துகிறார்கள். --59

இங்கு கேட்கிறார்கள், ஆத்மாவின் அனுபவ சுவரூபத்தை ஒப்புக்கொண்டாலும், அதில் மாற்றம் உள்ளது. அல்லது மாற்றங்கள் இல்லை என்றாலும், தவறுகள் இருக்கவே செய்கிறது. எதனால் என்று கூறுகிறோம்.

மழையினாலும் , வெய்யினாலும் ஆகாயத்திற்கு என்ன மாற்றம் உண்டாகிறது. தோலுக்கு தான் பாதிப்பு வருகிறது. ஆத்மாவானது தோல் போன்றது, மாறும்தன்மை உள்ளது என்றால் அது அழிவதாகிறது. ஆகாயத்தை போன்றது என்றால் அது அஸத்தாகிறது. (ஜடமாக அறியாததாகிறது. ) - 60

புத்தியில் உண்டாகும் ஞானத்தினால் (ஆத்மாவிற்கு) மாற்றம் உண்டாகும் என்றால் அது அநித்யமாகிறது. மாற்றம் ஒன்றும் ஆவதில்லை என்றால் அது அறிபவன் என்பதே ஆகாது. - 61.

(இந்த கேள்விகளுக்கு) இதற்கு விடை .

மேலே எழுகின்ற புகையினால் ஆகாயமானது கிழிகிறதா, இல்லை கிழிவதில்லையா, கிழிவதில்லை என்றால் புகை அப்படியே இருக்க வேண்டும் (மேலே எழாமல்) . கிழிகின்றது என்றால் கிழிவது என்பது என்ன ( ஆகாயம் பாகமில்லாததால்) . -62

இதையே தெளிவாக்கும் பொருட்டு கூறுகிறோம்.

மாற்றமில்லாத ஆத்மாவில் அனுபவிப்பவர் முதலான குணங்கள் அஹங்காரத்தின் சேர்க்கையினால் உண்டாகட்டும். எப்படி செல்லும் பொழுது கரையில் இருக்கும் மரங்கள் முதலியவை ஓடுவது போல் தெரிகிறதோ. - 63

கூறப்பட்ட பொருளையே மேலும் விளக்கிக் கூற வேறு உதாரணம்

உபயோகிக்கப்படுகிறது.

எப்படி **ஜாத்தியமணி** செண்மையாக ஆடாமல் அசையாமல் (ப்ரகாசிக்கிறதோ), பானை முதலிய பொருட்கள் அதன் அருகில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது எந்த மாற்றமும் அடைவதில்லை. – 64

இந்த உதாரணத்தில் இந்த பொருளே கூறப்பட்டது என்று தெரிவிக்க கூறுகிறோம்.

பானை முதலிய பொருட்களை எந்த வெளிச்சம், அதை வெளிச்சப்டுத்தி காட்டுகிறது என்கிறோமோ, அதே வெளிச்சம் அந்த பானை முதலிய பொருட்களை அகற்றியபின் வெளிச்சப்படுத்தி காட்டாததாகிறது. – 65

இதுவும் கூட

அதுபோல எல்லா எண்ண அலைகளையும் வெளிச்சப்படுத்தி காட்டும் ஆத்மா அந்த எண்ண அலைகளின் இருப்பினாலோ இன்மையினாலோ (பாதிக்கப்படுவதில்லை) அதில் மாற்றம் ஏற்படுவதில்லை. –66

வெளிச்சப்படுத்துகிறது என்று ஆத்மாவில் ஒரு செயலும் இல்லை. வெளிச்சம்படும் பொருட்களின் இருப்பு மாத்திரத்தினாலேயே அப்படி பெயருக்காக கூறப்படுகிறது. – 67

இது சாங்க்யர்களின் முடிவு என்று சந்தேகிக்க வேண்டாம். ஏனென்றால் –

எப்படி இந்த சுத்தமான ஆகாயத்தில் மேக கூட்டமானது திடீரென தோன்றுகிறது, திடீரென அதிலேயே அடங்கியும் போகிறது. அதுபோலவே, ஆத்மாவிலும் இந்த உலகமானதும். – 68

இப்படியாக புத்தியின் (அறிவின்) மாறும் தன்மை நியாயமாக ஆகிறது.

சென்றது, வருவது, மற்றும் இருப்பது என்று எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் ஆத்மாவானது அறிந்துக்கொள்வதால் , புத்தியானது அப்படிப்பட்டதாக இல்லாததால் அது மாற்றமுடையதாகிறது. - 70

அதனால் இந்த ஆத்மாவிலும் த்வைதமானது சிறிதும் தீண்டுவதில்லை. ஏனென்றால்

ஓசை முதலிய பொருட்களை கொண்டு ஆகிற (நிமிடத்தில் ) க்ஷணத்தில் அழியக்கூடிய எண்ண அலைகளை நித்யமான ஆத்மாவானது எப்பொழுதும் சூழ்ந்து இருப்பது போல இருப்பதால். - 69

புத்தி மாறும் தன்மையுடையது என்பதற்கு காரணம் கூறுகிறோம். அதனால் இது முடிவாகிறது.

ஆத்மா பார்க்காமலேயே பார்க்கும் புத்தியை பார்க்கிறது, கேட்காமலேயே கேட்கும் புத்தியை கேட்கிறது, விருப்பப்படாமலேயே விருப்பப்படும் புத்தியை எந்த முயற்ச்சியுமில்லாமல் , மாற்றம் இல்லாமல் தெரிந்து கொள்கிறது. - 71

வெறுக்காமல் வெறுக்கும் புத்தியை தெரிந்து கொள்கிறது. கோபப்படாமல் கோபப்படும் புத்தியை அறிகிறது. துன்பப்படாமல் துன்பப்படும் புத்தியை பார்க்கிறது, சந்தோஷத்தினால் சந்தோஷம் அடையும் புத்தியை புரிந்து கொள்கிறது. - 72

மோகத்தையடையாமல் மோகத்தை அடையும் புத்தியை, கற்பனை செய்யாமலே கற்பனை செய்யும் புத்தியை, நினைக்காமலேயே நினைக்கும் புத்தியை, தூங்காமல் (மீண்டும், மீண்டும்) தூங்கும் புத்தியை பார்க்கிறது. -73

உருவமில்லாமல் உருவத்தையெல்லாமும் தான் தன்னுடையது என்று இல்லாமல் அப்படிப்பட்டவைகளை மூன்று காலங்களும் இல்லாமல் மூன்று காலங்களையும் நித்யமான ஆத்மா மிக வேகமாக உண்டாகும் புத்தியை தெரிந்துக் கொள்கிறது. - 74

எதையும் ஆஷ்ரயிக்காமல் ஆஷ்ரயிப்பவைகளை, வெளியில் உள்ளவைகளையும் எல்லையில்லாது எல்லைக்குட்பட்டு (இரண்டற்ற ஆத்மா) எல்லா உடம்பிலும் இருக்கும் புத்தியை பார்க்கிறது. - 75

இந்த காரணங்களினாலும் கூறப்பட்ட பொருளை நிச்சயப்படுத்த வேண்டும்.

துன்பப்படுபவர் ஆத்மாவானால் துன்பத்தை பார்க்கும் சாக்ஷி யார் இருக்க முடியும். துன்பப்படுபவரை சாக்ஷி என்பதாக ஏற்க முடியாது. அதுபோல, சாக்ஷி துன்பப்படுபவர் என்றும் அப்படியே ஏற்க முடியாது. - 76

கூறப்பட்ட விளக்கத்தை விளக்கி கூறுகிறோம்.

மாற்றம் என்பது இல்லாமல் துன்ப்படுபவர் என்பது இருக்க முடியாது. சாக்ஷி எப்படி மாற்றம் உடையதாகும். புத்தியின் ஆயிரக்கணக்கான எண்ண அலைகளுக்கு, நான் சாக்ஷி, மாற்றமில்லாதவன். - 77

இப்படி எல்லா வகையிலும் மாற்றமுடையது புத்தி, எவ்வகையிலும் மாற்றமில்லாதது ஆத்மா என்பதை அனுபவத்தினால் நிச்சயிக்க கூறுகிறோம்.

ப்ரமாணமாகவும் , ப்ரமாணமின்மையாகவும் இருக்கும் இந்த எண்ண அலைகளில், என்னுடைய ஆத்மாவானது அழிந்து விடாது (எப்போதும் இருந்து கொண்டே இருக்கும் ) , என்னிலிருந்து வேறாக எதெல்லாம் இருக்கிறதோ (தெரிகிறதோ) அதெல்லாம் கண்டிப்பாக சீக்கிரம் அழியக்கூடியவைதான் . - 78

இன்ப, துன்பமும் அதன் சம்பந்தமும், ப்ரத்யக்ஷமாக அறியப்படுவதால், அதனால் நம்பிக்கை மாத்திரத்தினால் இதை புரிந்து கொள்ள வேண்டாம்.

எப்படி ஒரு தடியுள்ளவன் மற்றொரு தடியுள்ளவரை பார்க்கிறாரோ அதுபோல இன்ப துன்பத்தினால் பற்றப்படாத ஆத்மா அதனால் பற்றப்பட்ட

புத்தியை பார்க்கிறது. - 79

பானை உண்டாவது, இருப்பது, அழிவது ஆகிறதால், ஆகாயத்திற்கு அவைகள் இல்லை. அதுபோல புத்திக்கு உண்டாவது முதலியவை இருக்கின்றது. ஆத்மாவிற்கு இல்லை. -80

இப்படிப்பட்ட காரணங்களினால் புத்தியின் மாறும் தன்மையானது சரி என்றாகிறது.

இந்த புத்தியுடன் எதனுடைய சேர்க்கையுண்டாகிறதோ, சந்தோஷம், பானை போன்றவைகளில் அதையே இது அறிந்து கொள்கிறது. அதே நேரத்தில் வேறொன்றையும் அறிவதில்லை. அதனால், இது மாறும் தன்மையுடையது என்பது தெரிகிறது. - 81

இந்த ஒவ்வொரு நேரமும் மாறும் புத்தியின் இயல்புக்கு ஆத்மாவே சாக்ஷியாகிறது. ஆத்மா அறியாமலே புத்தி உதயமாவதோ ( பிறப்பதோ) இல்லை. மறைவதோ முடியாது.

நித்யமானதும், வரிசையில்லாத (**க்ரமம்**) ஆத்மாவானதால் முழுவதும் சூழப்பட்டே மாறும் தன்மையான புத்தி ஆறு மாற்றங்களையும் (இருத்தல் முதலிய) அடைகின்றது. எப்படி மலையானது ஆகாயம் சூழப்பட்டே இருக்குமோ, அதுபோல. - 82

சத்தான ( இருத்தலான) ஆத்மா மாறும் தன்மையில்லாதது என்பதற்கு சில யுக்திகள்.

யோசிப்பதில் (ஞாபகத்தில்) , கனவில், விழிப்பில் , புத்தியின் எந்த ஒரு எண்ண அலையும் ஆத்மாவினால் அறியப்படாததாக (சூழப்படாததாக) இருப்பதில்லை. இதனால் இது அநித்யமானதும் மாற்றம் அற்றதும் தானே ஒளிர்கின்றதும் என்று நிரூபணமாகிறது. - 83

இப்படியாக மற்றவ (சாங்க்கிய) ர்கள் ஒப்புக்கொள்ளும் முறைப்படி

யுக்திகளால் ஆத்மாவானது எந்த வகையான மாற்றமும் இல்லாதது என்று காட்டப்பட்டது. இப்போது வேதத்தில் கூறப்பட்ட முறைப்படி கூறுகிறோம்.

இந்த ஆத்மாவில் மாற்றமடையும் தன்மை இருக்கட்டுமாக, அது கற்பனையானதால் போலித்தோற்றமே ஆகும். எப்படி நீரில் மூழ்கியிருக்கும் பாதி கொம்பின் வளைவோ ( கோணலோ). - 84

நாய்களைபோல (எதிரிகளின் வாசனையை முகர்ந்து குரைக்கும்) உள்ள தார்க்கிகர்களால் இங்கு ஆறு மாற்றமும் இல்லாததான ஆத்மாவில் எந்த ஒரு தவறையும் சுட்டி காட்ட முடியாது. - 85

இப்போது கூறப்பட்டு கொண்டிருக்கும் பொருளை அனுசரித்தே, புத்தியின் மாறும் தன்மையும் ஆத்மா நம்மில் இருப்பதையும் யுக்திகளை கொண்டு கூறுகிறோம்.

ஒவ்வொரு பொருளின் அறிவிலும் எப்படி மாறுபடுகிறதோ புத்தி அவை உள்வெளி பொருட்களை கிரஹித்து கொண்டிருப்பதால், அப்படி சைதன்ய தன்மையாக ஆத்மா இருப்பதினால் அது எப்போதும் மாறும் தன்மையை அடைவதில்லை. - 86

தன்னுடன் சம்பந்தம் அடைந்த பொருளைதான் .

புத்தி பொருட்களின் ஒரு பாகத்தையே அறிகிறது. அதனாலேயே அது முழுவதும் அறிவதில்லை. அப்படி பொருட்களை அது அடையாமல் (சம்பந்தம்) அறிந்து கொள்கிறதென்றால் அது எல்லாமறியும் ஆத்மாவாகவே ஆகிறது. - 87

ஆத்மா ஒன்றாக இருக்கும் காரணத்தினால் .

ஒரு சண்டாளனின் (வெட்டியான்) புத்திக்கு எது பார்பவனாக(ஆத்மா) இருக்கிறதோ அதுவே ப்ரம்மனுக்கும் (அல்லது ப்ராமணனுக்கும்) பார்பவனாக இருக்கிறது. இரண்டு பேருக்கும் வெளிச்சம் ஆனது ஒன்றே தான்,

பொருட்களின் பிரிவினால் பலவாக ஆகிறது. - 88

எதனால் .

அவஸ்தை, தேசம்,காலம் முதலிய வேற்றுமைகள் இவர்கள் இருவருக்கும் ( சண்டாளன், ப்ராமணன்) சாக்ஷியாக இருக்கும் ஆத்மாவிற்கு இல்லை. அதனால் இந்த உலகம் முழுவதும் உள்ள புத்தியின் எண்ண அலைகளை ஆத்மா தனியாகவே பார்க்கிறது. - 89

எல்லா உடல்களிலும் ஆத்மா ஒன்றாகியபடியால் ஆத்மாவை அறிந்தவருடையதும், அதை அறியாதவருடைய உடல்களிலுடன் சம்பந்தம் உடைய காரணத்தினால் அவர்களில் ஆகும் துன்பங்கள் முதலியவைகளுடன் சம்பந்தம் உண்டாகும் என்றால், அப்படி இல்லை.

ஆத்மாவை அறிவதற்கு முன்னால் மற்றவருடைய துன்பங்கள் நம்மை தீண்டுவதில்லை என்றால், அறிந்தப்பின் எப்படி அது தீண்டும். அவருக்கு தன்னுடைய உடம்பினால் உண்டாகும் துன்பமே இல்லை எனும்போது (மற்றது ஏது). - 90

கூறப்பட்டது தன்னுடைய அறிவினால் நிரூபிக்கபட்டது என்பதால் இதை ஏற்க வேண்டியதில்லை. பின் எப்படி, வேதத்தில் கூறியிருப்பதால்.

சப்தம் முதலியவையான பொருட்கள் (விஷயங்கள்) உண்டாகி அழியும் அந்தக்கரணத்தின் எண்ண அலைகள் மாறுபாடில்லாத ஆத்மாவினாலேயே அறியப்படுகிறது என்று வேதம் கூறுகிறது. - 91

அது எந்த வேத வாக்கியம் .

பார்வையை பார்க்கும் ஆத்மாவை அப்படியே (பொருட்களை பார்ப்பதுபோல) பார்க்க எண்ணாதே (ப்ருகு - 3-4-2) . எல்லா எண்ண அலைகளையும் அறியும் அறிபவரான ஆத்மாவை எதை கொண்டு அறிவது ( ப்ரு-2-4-14) போன்ற வாக்கியங்கள். --92

எதனால் எல்லா ப்ரமாணங்களாலும் எந்த பொருள் நிச்சயமாகிறதோ அதனால் வேறு போல பேசுபவர்களை பிறவி குருடர்கள் போல தயை பட வேண்டியவர்கள்.

இப்படிபட்ட இரண்டற்ற மாற்றமில்லாத ப்ரம்மத்தை மந்த அறிவுள்ளவர்கள், பிறவிக் குருடர்கள் யானையை தடவிபார்த்து பல கோடி வகைகளாக கற்பனை செய்வது போல செய்வார்கள். – 93

ப்ரமாணங்களினால் தீர்மானமாக கிடைத்த பொருளை தவறாக பார்ப்பதினால் அவர்கள் தயை செய்யப்பட வேண்டியவர்கள் என்றாகிறது. அதை கூறுகிறோம்.

எந்தெந்த விசேஷணங்களை (வேறு படுத்துவது) நாம் பார்க்கிறோமோ அதனில் பிரிவற்ற தன்மை தொடராததால் அவை ஆத்மா இல்லை. பானை முதலியவை ஆகாயத்திற்கு ஆவது போல அதனால் ஆத்மா எல்லா வேறுபடுத்தும் பொருட்களிலும் (தன்மையிலும்) இருந்து வேறானது. – 94

அதனால் ஆத்மாவில் பிரிவுகள் தீண்டுவதில்லை. பிரிவுகள் பொய்யான தன்மை உடையதாகியதால். அதனால் கூறுகிறோம்.

அழிவற்ற ஆகாயத்திற்கு எப்படி பானை முதலானது அழிவிள்ளதாக இருக்கிறதோ, அப்படியே , அழிவுள்ளவைகளான அஹங்காரத்துடன் இந்த உலகம் அழிவற்ற ஆத்மாவை அண்டியுள்ளது. அதனால் அவை கண்ணைக் கசக்கினால் தெரியும் முடி (மயிர்) கூட்டம் போல் பொய்யானது. --95

இந்த யுக்திகளினாலாகிய செயலின் பலன் இந்த பிரிவினையை அறிவதே. அதை கூறுகிறோம்.

புத்தியின் ஆத்மா இல்லாத தன்மை அனுமாணத்தினால் எல்லோரும் அறிந்துக்கொள்கிறார்கள். ஆத்மாவின் இரண்டற்ற தன்மையும் அதன் ஆத்ம தன்மையாலேயே நிச்சயமாகிறது. – 96

பார்ப்பவர், பார்க்கும் கருவி, பார்க்கப்படும் பொருள், பார்க்கும் செயல், பார்ப்பதின் பலன் என்று இவைகளான ப்ரம்மாவிலிருந்து சிறு பூச்சி வரை சம்சாரமானது ஒரு பழைய மாலை போல நேர்மறையாகவும், எதிர்மறையாக நீக்கப்பட்டாலும் அப்படி இருந்தும் இதை, தானே ஒளிர்கின்ற ஆத்மாவிலிருந்து வேறுபட்ட இருப்பு உடையதாக சாங்கியர்களை போல நினைத்து கொள்ளக்கூடாது. பின் எப்படி என்றால், தானே ஒளிர்கின்ற நிரந்தரமான மாற்றமில்லாத ஞானமே இயல்பானதாக உள்ள ஆத்மாவின் நிழல் மயமான ஜீவனின் விசாரமின்மையால் உண்டான அறியாமையை சார்ந்துள்ளது மட்டுமே, அதனையே காரணமாக உள்ளது என்பதை கூற ஆசையுள்ளவராக கூறுகிறோம்.

அறிந்துக் கொள்பவர் இல்லாமல் பொருட்கள் இருப்பதில்லை. ஆனால், பொருட்கள் இல்லாமல் ஆத்மா (பார்ப்பவர்) இருப்பது இருக்கிறது. இப்படிப்பட்ட விசாரத்தினால் புத்தி முதலியவைகளிலிருந்து ஆத்மாவை பிரித்து அறிய வேண்டும். - 97

எதனால் அறியும் கருவியும், பொருளையுடைய நடத்தையும் ஆத்மாவை அறிந்துக் கொள்ளாததையே சார்ந்தே இருக்கிறதோ, அதனால் ஆத்மா அறியபடும் பொருள் இல்லை என்று நிரூபணமாகிறது. கார்யமானது தன்னுடைய காரணத்தை மீறி வேறு ஒன்றை சார்ந்து இருப்பதில்லை. அதனால் கூறுகிறோம்.

புத்தி , உடல், பானை முதலிய எல்லாம் ஆத்மாவிலிருந்து பிரிந்து இருக்கிறது.. ஆத்மாவாக தானே இருப்பதால் எதிலிருந்து அது சிறிதும் பிரிந்திருக்க முடியும். - 98

(புத்தி முதலியவை) தானே அறிவதில்லை என்பதால், அறிவதில்லை என்பது அறியாமையால் உண்டானதால்.

ப்ரமாணம் (அறியும் கருவி) இல்லாமல், புத்தி முதலியவை நிரூபிக்க முடியாது. ஏனென்றால் அவை அனுபவத்தை சார்ந்திருப்பதால். ஆத்மாவோ

அறிவையே இயல்பாக கொண்டதால் அது எதை சார்ந்திருக்கப்பார்க்கிறது. - 99

கூறப்படவிருக்கும் ஒன்றில் மற்றொன்றை ஏற்றி பார்ப்பதை நிரூபிக்க வேண்டி கூறப்பட்ட எதிர்மறையை மீண்டும் கூறுகிறோம்.

பானை (என்ற) அறிவிலிருந்தும் பானையின்றி பொருளிலிருந்தும் பார்ப்பவர் எப்படி வேறாகி இருக்கிறதோ அதுபோலவே, நான் என்ற அறிவிலிருந்தும் அதற்கு பொருளான துன்பத்தையுடைய அஹங்காரத்திலிருந்தும் ஆத்மா வேறாகிறது. - 100.

இப்படி, இந்த தானே ஒளிர்கின்றதும், மற்றொன்றால் ஒளிர்விக்கப்படுகிறதுமான ஆத்மாவும் அது இல்லாததும், உலகத்தில் பார்க்கப்படும் கயிறில் பாம்பை ஏற்றிப்பார்ப்பது போல அறியாமையை சார்ந்திருப்பதே ஒன்றை மற்றொன்றில் ஏற்றிப்பார்ப்பது என்பது என்பதை கூறுகிறோம்.

எப்படி மேகம் நகர்வதை நிலவில் ஏற்றிப் பார்க்கப்படுகிறதோ (அது நகர்வது போல) அப்படியே இன்பம் முதலிய புத்தியின் தர்மங்களை ஆத்மாவில் ஏற்றுகிறார்கள். - 101

எப்படி சுடும் தன்மையை இரும்பில் தவறான புத்தியுள்ளவன் நினைக்கிறானோ அப்படியே, ஆத்மாவினுடைய சேதனத்தன்மையை அஹங்காரத்தில் தவறாக எண்ணுகிறான். - 102

ப்ரத்யக்ஷம் முதலிய அறியும் கருவிகளின் விஷயங்களாகவே, ஆத்மாவும், அது இல்லாதவையும் என்ற எல்லாமும் அறியாமையை சார்ந்தேயிருக்கிறது. பரமார்த்த (உண்மையான) சம்பந்தத்தை சார்ந்து இல்லை. இந்த எல்லா துன்பங்களுக்கும் காரணமான அறியாமையிலிருந்து எப்படி தப்புவது என்றால் கூறுகிறோம்.

பலவகைப்பட்ட துன்பக்கூட்டமான சம்சாரம் என்னும் மரத்தின்

முக்கிய காரணமாக (வேராக) இருக்கும் ஆரம்பமில்லாத அறியாமை, அந்த அறியாமையின் விலகல் (அழிவு) ஆத்மாவின் தத்வத்தை அறிவதால் உண்டாகும். - 103

அதனுடைய விலகல் தத்துவத்தை அறிவதால் என்பது எப்படி ஆக முடியும் என்றால், அதற்கு கூறுகிறோம். மாடு மேய்க்கும், ஆடு மேய்க்கும் அறிஞர்களும் நன்றாக அறிந்ததே இது.

தவறினால் தவறாக உண்டான அறிவு சரியான அறியும் கருவியினால் (ப்ரமா) உண்டான அறிவினால் விலகுகிறது. கயிறு என்னும் அறிவு விலக்குவது போல ஆத்மாவின் அறிவு (ஆத்மஞானம்) உடல் முதலியவைகளில் ஆத்மா என்ற அறிவு விலகுகிறது. - 104

உலக விஷயங்களில் அறியாமைக்கு அறிவு என்னும் பலன் கிடைக்கிறதோ அப்படி, ஆத்மாவின் விஷயத்தில் இல்லை.

அறியாமையின் அழிவே இங்கு பலன் என்பதால் குறிப்பிடப்படுகிறது. தெரியாததை அறிந்து கொள்ளுதல் என்ற நிலைக்கு இங்கு வழி இல்லை. ஆத்ம ஞானமே இயல்பாக உள்ளதால். - 105

ஏனென்றால் அறிபவர் முதலியவை ஆத்மாவினை அறியாமையே காரணமாக இருப்பதால். அதனால்.

அறிபவருடைய விஷயமாக இந்த அறிபவர் முதலியவை (அறிபடு பொருள், கருவி) ஆத்மாவினுடைய (புத்தி) இருப்பை அறிவதில்லை. ஒன்றை மற்றொன்றும் அறிவதில்லை. அதனால் தன்னி (இவைகளி) லிருந்து வேறான ஆத்மாவினுடைய அறிபடுபொருளேயாகும். - 106

பார்ப்பவர் முதலியவைகளின் விசேஷமான தன்மையை விளக்க, கூறுகிறோம்.

தன்னிலிருந்து வேறானதை பொருட்கள் என்று அறிவதற்கு

விஷயமாக உறுதி செய்து கொள்ளவேண்டும். அறிகிறேன் என்பதில் இருக்கும் நான் என்பதை பார்ப்பவர் (சாக்ஷி) மாற்றமில்லாத அழிவில்லாத ஆத்மாவே என அறிதல் வேண்டும். – 107

ஆத்மா எல்லா காரணங்களும், செயல்களும் அதன் பலன்களும் தீண்டாததாக இருக்கிறது என்பதால் காரணம், செயல், அதன் பலன் என்கிற சம்சாரத்திற்கு சாக்ஷியாக இருக்கிறது என்பதை கூறுகிறோம்.

அறிபவர், அறியும் வழி, அறிபடு பொருள், என்ற பிரிவுகளில் எது பிரிவில்லாமல் இருக்கிறதோ அவைகளில் இருத்தலையும், இல்லாமையையும் பார்ப்பவராக மட்டும் (சாக்ஷி) இருந்து அவைகளை கொள்வதும், தள்ளுவதும் இல்லாததும் ஆக இருக்கிறது ஆத்மா. – 108

அறிபவர் முதலியவைகளில்தான் அறிபவர் முதலியவைகளின் இருத்தலும், இல்லாமையும் இருத்தல் இருக்கிறது. எதனால் அப்படி இல்லை என்கிறீர்கள் என்றால் , அதை கூறுகிறோம்.

அறிபவர் முதலியவைகள் தன்னுடைய பிறப்பையும், அழிவையுமோ தானே அறிவதில்லை . அதே காரணங்களால் அவை பிற பொருட்களின் பிறப்பு , அழிவை அறிய முடியாது. அதனால் இவைகளில் மூன்று பிரிவும் தன்னாலேயே நிரூபணம் ஆகாது . அதைவிட வேறாதால் ஆகிறது. – 109

அறிபவர் முதலியவைகள் சாக்ஷியின் மூலமாக நிரூபணம் ஆகிறது என்பதால் தன்னுடைய சாக்ஷியும் மற்ற சாக்ஷியினால் நிரூபணமாகும் என்று முடிவில்லாது ஆகும் என்றால் அப்படி இல்லை. சாக்ஷி தவிர வேறு காரணங்களில் அவசியமில்லாததால் (எதிர்பார்ப்பு) என்று கூறுகிறோம்.

புத்தியை போல தன்னுடைய இருப்பை நிரூபிக்க வேறு ஒன்றையும் மாற்றமில்லாத சாக்ஷி சார்வதில்லை. அதை சார்ந்தே மற்றவைகளின் இருப்பு இருக்கிறது. தன்னையே நிரூபிக்க அது தன்னையே சார்வதில்லை. – 110

ஏனென்றால், அறிபவர் முதலியவை அறியாமையாலேயே

உண்டானது. அதனால் நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் ஆத்மாவை பிரித்தறிய வேண்டும்.

உண்டாகுதல், இருத்தல், அழிதல் முதலியவைகளில் எது மாத்திரம் இருக்கிறதோ, அந்த ஈஸ்வரன் நான் என்று முடிவு செய்ய வேண்டும். அறிபவர் முதலிய அழியும் தன்மையுடையது நான் என்று இல்லை. - 111

தானே ஒளிரும் ஆத்மாவினுடைய நிழலை கூறிய விசாரமின்மையால் என்று நிரூபிக்கப்பட்ட ஆத்மாவினை அறியாமை காரணம் என்பதால் இரண்டும் ஒன்றை ஒன்று சார்வது இயல்பானதால் த்வைத தன்மையுடைய அனாத்மா நிரூபிக்கமுடியாது.

த்வைதத்தின் வேறுவேறான (பலவான) தன்மை தன்னி (இயல்பினா) லேயே நிரூபணமாவதில்லை. ஆத்மாவிலிருந்து வேறாகவும் நிரூபணமாவதில்லை என்பது எதனாலோ, இரண்டும் (த்வைத உலகமும், ஆத்மாவும்) சேர்ந்தும் உலகத்தின் பலவான தன்மை நிரூபிக்க முடியாது அதனால் இரண்டற்ற தன்மை பொய்யான த்வைதத்தை நீக்குவதின் மூலம் நிரூபணமாகிறது. - 112

கூறப்பட்ட பொருளை சந்தேகமற தீர்மானிப்பதற்கு வேத உதாரணங்கள் தருகிறோம்.

எப்பொழுதும் ஆத்மா, அறிவே தன்மையாக உள்ளதால், காரணம் முதலியவைகள் அதை தீண்டுவதில்லை . தடியானதில்லை இது இல்லை, பிறப்பதில்லை போன்ற வேத வாக்கியங்கள் கூறுகின்றது. -- 113

எல்லாமுமான இந்த த்வைத உலகம் ஆத்மாவை அறியாமலேயே உண்டானதால் தன்னைத்தானே நிரூபிக்க முடியாததாகையால் ஆத்மாவை அறிவதற்கு உதவியாக இருப்பதில்லை.

ஆத்மாவிலிருந்து (ஆத்மா இயல்பை) புத்தி, உடல், பானை முதலியவைகளில் நீக்கிவிட்டால் அவை ஆறாவதால் (இன்மை-ப்ரமாணத்தால்

- **அபாவம்**) அறிபடும் பொருளாகும் (இல்லை என்று ஆகும்) என்பதை தீர்மாணிக்க வேண்டும். - 114

எப்படி இதை யுக்தியினால் தீர்மாணிக்க முடியும் என்றால்,

தானே ஒளிர்கின்ற, மாற்றமற்ற ஆத்மாவை சார்ந்தே புத்தியில் தோன்றும் அறிவானது நிரூபணமாகிறது (தெரிகிறது) அப்படிப்பட்ட புத்தியின் அறிவால் பானை முதலிய பொருட்கள் நிரூபணமாகிறது. - 115

எதனால் எந்த விதமான யுக்தியினாலும் ஆத்மாவில் காரணத்தன்மை, செயல்தன்மை, பலன்தன்மை ஏதும் இருப்பதில்லையோ, அதனால் ஆத்மாவின் உண்மையான இயல்பை அறியாததனாலேயே உண்டானதால், ஆகாயத்தில் புழுதி, புகை, பனி, நீலம் முதலியவை ஏற்றிப் பார்க்கப்படுகிறதோ, அப்படியே கூறப்பட்ட ஆத்மாவில் காரணம், செயல், பலன் ஆகிய தன்மையுடைய சம்சாரம் நான், என்னுடையது, முயற்சி , ஆசை முதலிய பொய்யானதை ஏற்றிப் பார்ப்பதே என்பது நிரூபணமாகிறது.

இந்த பொருளை கூறுகிறோம்.

நான் என்ற போலியான உறவினால் இந்த துன்பத்தையடையும் ஆத்மாவாக ஜீவன் தன் உண்மை இயல்பை அறியும் ஆசையுடன் வேதத்தை (சரண்) அடைந்து , அதில் கூறப்பட்ட , இது இல்லை முதலிய வாக்கியங்களை கேட்டு அறிந்து மோக்ஷத்தை (தன் இரண்டற்றதான இயல்பை) அடைகிறான் (அதிலேயே இருக்கிறான்). - 116

அதனால் மோக்ஷத்தில் ஆசையுடையவன் வேத வாக்கயித்தினால் கனவில் (கண்ட பயங்கரமான தோற்றத்தின்) காரணத்தினால் உண்டான முழிப்பை போல இது என்று இந்த தீர்மானமான அறிவு உண்டாகிறது.

ஆத்மாவானதால் அனாத்மாவானவைகளை எப்போதும் அதிலிருந்து நீக்கப்பட்டதால் (இல்லாத) நான் , எனது என்பது இல்லை. எப்படி சூரியனில் இருட்டோ அதுபோல என்னில் இந்த அறியாமை. - 117

இப்படி இந்த ஆத்மாவின் இயல்பை நிரூபித்து விட்டு ஆச்சார்யமாக கூறுகிறோம்.

எந்த சமயத்தில் எல்லாம் ஆத்மாவாகவே ஆகிறதோ இவருக்கு என்பது முதலிய விளக்கமானதும் முழுமையாக த்வைதத்தை விளக்கும், ஆத்மாவிலிருந்து சம்சாரத்தை விலக்கும் வேத வாக்கியத்தை நான் என்ன இதுவரை கேட்கவில்லையா. (அத்துணை துன்பத்தை அனுபவித்ததற்கு) . – 118

ஆத்மா, காரணம் முதலியவை இல்லாததாக எவனுக்கு தீர்மானமாகிறதோ, புத்தி முதலியவைகளிடன் பற்றற்றது போல இரண்டற்ற தன் இயல்பை அடைகிறான். – 119

## அத்தியாயம் – 3

**நம: ஸ்கந்தாய கார்திகாய நம: சேனாபதயே நம: |**
**புக்திம் முக்திம் ச ப்ரதாதாரம் ஸ்வஸ்ய அஞ்ஞான நிஹந்தயே ||**

**ஸ்கந்தனுக்கு** நமஸ்காரம், **கார்த்திகேயனுக்கு** நமஸ்காரம் . **சேனாபதி** (படைத்தலைவனுக்கு) க்கு நமஸ்காரம். சுகங்களையும், மோக்ஷத்தையும் தருபவரை என்னுடைய அறியாமை நீங்க பணிகிறேன்.

இந்த அறிபவர், அறியும் வழி, அறிபடு பொருள், அறியும் கருவி எல்லாமே, ப்ரம்மன் முதலி சிறு பூச்சி வரை, பொய்யான ஏற்றிப் பார்த்தல்தான் என்று பலவகையாக நிருபித்து பாட்டினோம். ஆத்மாவும், பிறப்பு , முதலிய ஆறு மாற்றங்கள் இல்லாதது, அறிவு மாத்திரமானது என்பதை தெளிவாக்கினோம். அந்த பொய்யான தோற்றமுடைய சம்சாரத்திற்கும் மெய்யான ஆத்மாவுக்கும் அறியாமையை தவிர வேறு ஒரு சம்பந்தமும் கிடையாது. வேறு இடத்தில் வேதத்தில் குறிப்பிடப்பட்ட, இதுவே (உலகம்) ருக், நெருப்பு சாமம் என்று விபரீதமான இயல்புடைய இடத்தில் அறியாமையால்

அந்த சம்பந்தமும் இல்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு ஆத்மா, அனாத்மா என்ற இரண்டு பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அனாத்மாவிற்கு அறியாமையுடன் சம்பந்தம். அதனுடைய இயல்பே அறிவின்மை. அறியாமைக்கு அறியாமை என்பது சரியாக இராது. அறியாமைக்கு அறியாமை என்பது இயல்பாக ஒப்புக்கொண்டாலும் அது என்ன புதுமையை செய்ய முடியும். அதற்கு ஞானம் (அறிவு) கிடைப்பது என்பது இல்லை. எந்த காரணத்தினால் அதனால் விலக்கப்படுவது அறியாமை என்பது ஆகுமோ, அனாத்மாவே அறியாமையினாலே பிறந்ததால் முன்பே நிரூபணமாகும் (இருத்தலை அடையும்) சத், அதன் பிறகு உண்டாகும் அனாத்மாவுக்கும் அறியாமைக்கும், சாரப்பட்ட – சார்ந்த என்ற சம்பந்தத்தை அடையட்டும் என்றால், இல்லை. ஆத்மா அதை எதிர்பார்த்ததில்லை . அதனுடைய இயல்பும் இல்லை. இந்த காரணங்களினாலேயே அனாத்மாவிற்கு அறியாமை என்பது நீக்கப்பட்டாகிறது. அதனுடைய பொருளாகவும் அறியாமை ஏற்க முடியாது.

பாக்கி இருக்கிறது என்ற நியதிப்படி, ஆத்மாவிற்கு அறியாமை என்பது உண்டாகிறது. அதை அறியாதவனாக இருக்கிறேன் என்ற அனுபவம் உண்டாவதால் <u>பகவானே, இப்படியாகப்பட்ட (படித்த) நான் மந்திரங்களை அறிந்தவனாக மாத்திரம் இருக்கிறேன். ஆத்மாவை அறிந்தவனாக யில்லை</u> என்று வேதமும் கூறுகிறது. ஆத்மாவிற்கு அறியாமை இயல்பு என்பது இருக்க முடியாது. அது சைதன்யமே இயல்பாக உள்ளதால். அதற்கு சிறப்பாக (விஷேஷமாக) ஆக முடியும். ஞானத்தின் இழப்பும் (போல அதனை அடைதலும் ஆக முடிகிறபடியால், அது ஞானத்தின் செயலானபடியால், ஆத்மா அறிவே இயல்பாக உள்ளதால், அது அறியாமையும் செயலும் இல்லை. அறியாமையை எதிர்பார்க்காமல் ஆத்மா தானே இருப்பதால் இயல்பாக அதனால் ஆத்மாவினை சார்ந்ததே அறியாமை என்பது தீர்மானமாகிறது.

ஆத்மாவை சார்ந்திருக்கும் இந்த அறியாமைக்கு எது விஷயமாகிறது என்றால், ஆத்மாவே என்போம். ஆனால், ஆத்மாவும் அறிவே இயல்பானதாகவும், இரண்டற்றதாகவும், அறியாமையை விலக்கும் தன்மையுள்ளதாகவுமிருக்கிறது. போன்ற காரணங்களால் ஆத்மாவில் (சார்ந்து)

அறியாமை என்பது ஏற்க முடியாததாகிறது. என்றால் , ஏற்கமுடியும். எப்படி, அறியாமை மட்டுமே காரணமாக இருப்பதால் பாம்புத்தன்மையுடையது கயிறு என்ற பிரிவுகளில் அதனால் அதை நீக்க த்வைதத்தின் தவறின் இல்லாமையே காரணமாகிறது. அது நீக்குதலும் வாக்கியங்களினால்தான். அதில் உள்ள சொற்களையும், அதன் பொருளையும் அறியவதனால். அதனால் அதுபோல வாக்கியங்களினை விளக்க இந்த அத்தியாயம் (பகுதி) ஆரம்பிக்கிறோம்.

அங்கு கூறப்பட்டது போல, நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களில் சொற்கள் அதன் பொருளும் கொண்டு நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் விளக்குகிறோம்.

எப்பொழுது நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களினால், நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்று புரிந்து கொள்கிறானோ, அவனுடைய நான் என்னுடையது என்பது மொத்தமாக அழிந்து போகிறது. புத்திக்கு மேலே போகிறான். (வியவஹாரம் இல்லாமல்). – 1

எவன் ஒருவன் அது என்ற சொல்லை நீ என்ற சொல்லுடன் ஒன்றானதாக புரிந்து கொள்கிறானோ, அவன் வாக்கியங்களால் அடைய முடியாத நிலையையடைகிறான். வாக்கையும், மனதையும் தாண்டிய (பொருளற்றதால்) நிலையை அடைகிறான். எப்படி இந்த நிலையை அடைகிறான் என்றால்

அது என்று எது குறிப்பிடப்பட்டு வருகிறதோ அந்த ப்ரம்மத்துடன் நீ என்ற சொல்லின் பொருளான தன்னுடைய ஆத்மாவிலும் கூறப்படுவதால் அவை இரண்டும் துன்பம் அடையும் தன்மையையும், அனாத்மாவானதையும் நீக்குகிறது. எப்படி நீல தாமரையோ (நீலம், சிவப்பு முதலியதையும், தாமரை, பானை முதலியதையும் நீக்குகிறதோ) – 2

இப்படிப்பட்ட நேர்மறை, எதிர்மறையான யுக்திகளால்தான் அதனுடைய (நீ, அது) பொருள் நிலையாகிறது என்று கூறினோம். அதனால் அதை விளக்க, அதை (சுருக்கி) சூத்திரம் போல கூறுகிறோம்.

அதுவும், நீ யும் சமானாதிகரண்யம் (ஒரே தலத்தில் இருக்கும்) தொடர்புடன் இருக்கிறது. அது வுக்கும், நீ க்கும் ஒன்றுக்கொன்று **விசேஷண விசேஷ்ய** (சிறப்பு, அது குறிப்பிடதக்க) உள்ள தொடர்புடன் உள்ளது. அது வுக்கும், நீ க்கும் **லக்ஷய – லக்ஷண** (குறிபிடப்பட்ட - குறி) என்ற தொடர்புடன் உள்ளது. --3

இந்த சூத்திரத்தை கூறியவுடன் யாரோ கேட்கிறார். வாக்கியத்தின் பொருளை விளக்க முன் அத்யாயத்தில் நேர்மறை, எதிர்மறையாகவும் உள்ள நியமத்தின்படி எல்லா கர்மத்தினையும் விடும் சந்நியாசத்தினை கூறினீர்கள். அது வேதத்தினால் கூறப்பட்ட கட்டளையை அனுசரித்தா இல்லை, தானே ஒருவன் அதன் பலன் மேல் உள்ள ஆசையினால் செல்லுவானா என்றால், இதில் என்ன வேறுபாடு இருக்க முடியும் என்றால், கேள் கூறுகிறோம்.

ஆத்மாவை நேரில் அடைவதற்காக, ஒரு கட்டளை இருக்கிறது என்று கொண்டால், அப்பொழுது கட்டாயம் ஆத்மாவை அடையவேண்டி, நல்லது கெட்டது என்ற இரண்டு வகையான கர்ம கூட்டத்திலிருந்தும் , விடுபட்டு , ஒருமுகப்பட்ட மனதுடன் நேர்மறை , எதிர்மறையாக இங்கு கூறப்பட்ட வழியின்படி ஆத்மாவை அறிவான். அதை அடையும் முன்னால் வழுக்கி விழுந்தவர்கள் அதிலேயே தொடங்குவார்கள் (மறுபிறப்பில்) . மறுபடியும் அவன் தன் ஆசையினாலேயே தொடங்குகிறான். (முயற்ச்சிக்கிறான்) என்றால் அப்பொழுதும் எந்த தோஷமும் இல்லை. இருந்தாலும் நாங்கள் அது கட்டளையினால் தான் கிடைத்தத என்று கூறுவோம். எதனால் என்றால்.

எல்லாவகையான இது என்ற அஹங்காரத்தையும் முழுமையாக நீக்கி **சமம், தமம்** முதலிய உபாயங்களை கை கொண்டு நேர்மறை , எதிர்மறையாக யுக்திகளை கைகொண்டு தன்னுடைய ஆத்மாவின் பிரம்மத்தன்மையை விரைவாக (நேராக) அறியவும் . – 4

இது என்ற அஹங்காரத்தை முன்பு கூறிய காரணங்களினால் கைவிட்டு நான் யார் என்று விசாரிப்பவருக்கு வேதம் தயையுடன் கூறுகிறது. <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> என்று. - 5

இங்கும் சாங்க்ய மதத்தை சேர்ந்தவர்கள் கேட்கிறார்கள் - உடல், இந்திரியம், மனம், புத்தி முதலிய அனாத்மாவானவைகளில் ஆத்மா என்று எந்த காரணமும் இல்லாமல் உண்டாகும் பொய்யான (தவறான) அறிவே அறியாமை. அதனுடன் கூடியதாலேயே இந்த ஜீவனுக்கு பலவிதமான துன்பங்கள் உண்டாகின்றது. அதை (அறியாமை) நேர்மறை, எதிர்மறையாக விசாரித்தே நீக்க முடியும் என்பதால் (நீக்கியதால்) நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வேத வாக்கியங்கள் பொருளற்றவையாகின்றது. அதனால் இந்த வாக்கியங்களில் பெருமையை காக்க, அது ஆத்மா அனாத்மா என்ற பிரிவை நிலை நாட்டுதலிலேயே என்றால், அதை நிராகரிக்க இதை கூறுகிறோம்.

ஆத்மா , அனாத்மா என்ற பிரிவு கொண்ட அறிவானது பிரிவை விஷயமாக கொண்டது சாக்ஷி ஆத்மாவிலோ பிரிவு என்பதே இல்லை. பிரிவு அறியாமையின் செயல். அறிவான ஆத்மாவை வாக்கியத்தினால் புரிந்து கொண்டு அனாத்மாவை விட வேண்டும். - 6

அறிவான ஆத்மாவை வாக்கயித்தால் புரிந்து கொண்டு அனாத்மாவை விட வேண்டும் என்று கேட்டு யாரோ ஒருவர் கேட்கிறார். பொய்யான அறிவை விடுத்து ஆத்மாவின் அறியாமைக்கு வேறு எதுவும் இல்லை என்பதால் எதை வாக்கியத்தால் நீக்குவது அறியாமை என்றால் அறிவின் இல்லாமை. அதனுடைய இயல்பும் பொருளில்லாததால் எப்படி அது சம்சாரத்திற்கு காரணமாகும். ஜடத்திலிருந்து (இல்லாமையிலிருந்து) இருத்தல் என்பது ஏற்கமுடியாது. ஹே, மேன்மையானவனே, எப்படி ஜடத்திலிருந்து இருத்தல் வரும் (சா. 6-2-2) என்று வேதமும் கூறுகிறது. என்றால் கூறுகிறோம்.

எல்லா பொருட்களையும் அது புத்தியில் உதிக்கும் முன்பு தூக்கத்தில் எதுவும் தெரிவதில்லை. ஒரே **சத்தே** (இருத்தலே) இயல்பாக இருக்கும் ஆத்மாவுக்கு வேறற்றதாக இருந்து கொண்டே அவைகளின் இருப்பை (ஆத்மா ) அறியாமலேயே இருக்கிறது. - 7

முன் செய்யுளில் ஆத்மாவை அறியாமல் இருக்கிறது என்று கூறப்பட்டது. யார் அந்த அறிவான சத் இயல்புடையவர் என்ற கேள்விக்கு , அதனுடைய இயல்பை நிரூபிக்க கூறுகிறோம்.

ஒரு விஷயம் ஆசைப்படும் போது எது அறிபவராகவும், அறியும் வழியாகவும் தானே ஜொளிக்கிறதோ தன்னுடைய இயல்பினாலேயே எது நிரூபணமாகிறதோ அதுவே அறியாத பொருள் என்று முடிவு செய்ய வேண்டும். - 8

இங்கு சிலர் கூறுகின்றனர், இங்கு சொல்லப்படும் எந்த வாக்கியமாயினும் வேதத்தில் அல்லது உலகத்தில் கூறப்பட்டதாகிலும், அவை கூடியிருந்தே ஒரு வாக்கயித்தின் பொருளை உணர்த்துகின்றன. அதனால் <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> என்பது போன்ற வாக்கியங்கள் கூடியிருந்து நான் ப்ரம்மம் என்று ஞானம் முடிவில் உண்டாகிறது. அப்படிப்பட்ட அறிவானலேயே ஒருவர் முக்தியை அடைகிறார் என்பதை நிராகரிக்க வேண்டி இதை கூறுகிறோம்.

எப்படி ஒரே தலத்தில் இருக்கும் பானை கூடிய ஆகாயம், கூடாத ஆகாயம் அதனால் பிரிக்கப்பட்ட, பரந்து விரிந்த தன்மையை நீக்கி ஆகாயம் என்ற பொருளில் மாத்திரம் குறிக்கிறதோ, அதுபோல நீ , அது ஆகியவை துன்பப்படும் தன்மை முதலியவை பார்வைக்கு அப்பாற்பட்டது போன்றவையை நீக்கி மெய்ப்பொருளை உணர்த்துகின்றது. எங்கள் கொள்கையில் (தெளிதல் முதலியவையில்) எதிர்பார்ப்பு இல்லை. - 9

எப்படி மெய்ப்பொருளை அவை உணர்த்துகிறது என்றால் அதை நிரூபிக்க சிறப்பு அது குறிப்பிடதக்கதும் என்ற முறை கையாள்கிறோம்.

நீ என்ற பொருளை அது என்ற பொருளுடன் சிறப்பிக்கும் போது அதனால் துன்பம் நீக்கப்படுகின்றது. அது நீ என்ற பொருளினுடைய நெருக்கத்தினால் அதில் உள்ள பார்க்க முடியாது என்ற தன்மை விலகுகிறது. - 10

ஒரே தலத்தில் குறிப்பிடப்பட்டதும் சிறப்பு அது குறிப்பிடத்தக்க முறையில் குறிப்பிட்டதையும் சுருக்கி கூறப்பட்டதால் இப்போது குறிப்பிடப்பட்டதும் குறியும் உள்ள தொடர்பை கூறுகிறோம்.

சத்தாகவும், அறிவாகவும், எப்பொழுதும் உள்ளதாகவும் உள்ள தன்மைகள் ஆத்மாவினுடையது (ப்ரம்மத்தினுடையது) புத்தியின் அறியும் தன்மையாகவும், நான் என்ற தன்மையாகவும் இருப்பது இந்த ஆத்மாவே என்பதால் புத்தியினால் குறிப்பிடப்பட்டது குறியான இந்த ஆத்மாவே. - 11

ஆத்மாவுனுடைய அறிவும், தானே ஒளிர்கின்ற தன்மையும், ஏற்றி பார்க்கப்பட்ட புத்தியினுடைய அறியும் தன்மையும், ஒளிர்கின்ற தன்மையுனுடைய சிறப்பை குறிப்பிடுகிறோம்.

விஷயங்களை ஒரு பொருளாகவும், நான் இப்படிப் பட்டவன் என்று சாக்ஷிக்கு விஷயமாகவும், புத்தியின் அறியும் தன்மையும், ஒளிர்கின்ற தன்மையும், ஆத்மாவை போல அறிவாகவும் , தானே ஒளிர்கின்றதாகவும் இல்லை. (அறியும் பொருளை கொண்டு அறியும் தன்மையும், வெளி விஷயங்களை கொண்டு தன்னில் ஒளிர்கின்றன தன்மையும் குறிப்பிடப்பட்டது). இவை வேறு வேறல்ல என்று அறிய வேண்டும்.

எப்படி புத்தியில் அறியும் தன்மையே உள்ளதோ, அப்படி புத்தியில் அறியும் தன்மை, ஒளிரும் தன்மை முதலிய கூறப்பட்ட காரணங்களினால் ஆத்மாவில் அறிவு முதலியவை. - 12

எப்படி புத்தியில் அறியும் தன்மை முதலிய அது காரணமாக ஆத்மாவில் அறிவு முதலியவை என்று புத்தியுடன் ஒரே தன்மை உள்ளது என்று ஆத்மாவை குறிப்பிடப்பட்டதால் அறிவு முதலியவை ஆத்மாவிலிருந்து வேறானதாக இருக்கிறது என்று தோன்றும். அதை நிராகரிக்க கூறுகிறோம்.

தர்மம், அதை உடையது என்ற பிரிவு புத்தியிலேயே தான் இருக்கிறது., அது ஆத்மாவில் இல்லை ஏனென்றால் அங்கு அறிவு வேறற்றதாக இருப்பதால் அதனால் பிரிவுக்கு எந்த காரணமும் அங்கு எடுபடாது (இருக்க வாய்பில்லை). - 13

பிரிவுக்கு எந்த காரணமும்ம இருக்க வாய்பில்லை என்பதை காண்பிக்க கூறுகிறோம்.

எந்த நிலையிலும் அறிவு இயல்பானதும் உண்மையான தானே ஒளிரும் தன்மை, இயல்பானதுமானவற்றில் பிரிவு காணப்படவில்லை. அது பிரிவற்றது என்பது காணப்படவில்லை. எப்படி அஹங்காரமும், சாக்ஷியும் வேறாக தெரிகிறதோ, தூக்கத்திலும் சாக்ஷி மாத்திரம் இருப்பது ஒப்புக் கொள்ளப்படுகிறதோ அப்படி . – 14

ஏனென்றால் புத்தி அறியாமை என்ற காரணத்தை உடையது. அதனால் அது முடிவாகிறது.

ஆத்மா எப்போதும் அறிவு மயமாக இருப்பதால் எப்போதும் தானே ஒளிர்வதாக இருப்பதாகவும், இரண்டற்றதாகவும் இருக்கிறது. ஆத்மாவுடைய அறிவுமயமான இயல்பினால் புத்தி அறியும் தன்மையை அடைகிறது. தானே அழியக்கூடிய தன்மையுடையது. – 15

இப்பொழுது இங்கு கூறப்படுகிற மாற்றமுடைய அஹங்காரத்துடையதும், ஆத்மாவினுடையதும் ஆன லக்ஷணத்தை (குறிப்பு) கூறுகிறோம்.

ஏதாவது ஒரு சிறப்பை சார்ந்து எது தன்னுடைய இயல்பை காட்டுகின்றதோ அது அறிவு (ஆத்மா) என்ற ப்ரமாணத்தினால் நிரூபிக்கப்படும் அஹங்காரம் ஆகும். உடம்பை போல அழியும் தன்மையுடையது. – 16

நான் என்ற ஊடுருவி வரும் விருத்திகள் (எண்ண அலைகள்) உடையதும், இன்பம், துன்பம் போன்ற விலக்கப்பட்ட விருத்திகள் உள்ள தன் இயல்பினாலேயே எது தனித்து இருக்கிறதோ அந்த மாற்றமற்றதே **கூடஸ்தம்** எனப்படும் ஆத்மா. அது பானையினால் மாற்றமடையாத அதில் இருக்கும் ஆகாயத்தை போல. – 17

ஆத்மாவிற்கும், புத்திக்கும் அறியும் தன்மையையும் தனித்து இருக்கும் தன்மையையும் கூறினோம். அதனுடைய சிறப்பை கூறுகிறோம்.

புத்தியினுடைய தனித்திருக்கும்தன்மை உடம்பு முதலியதை அனுசரித்தே (சார்ந்தே) உள்ளது. ஆனால், ஆத்மாவோ இயல்பாகவே தனித்து இருக்கும் தன்மையானது, எப்படி ஆகாயம் இயல்பாகவே இடம் உள்ளதாக இருக்கிறதோ. – 18

அதுபோலவே , புத்தியினுடைய அறியும் தன்மயும் பொருட்களின் எண்ண அலைகளின் உண்டாகும் காரணத்தினால் ஆத்மாவோ இயல்பாகவே அறிவு மயமானது. சொல்வதை சார்ந்தே இருத்தல் என்பது. ஆனால், மலை இருக்கிறது என்பது எதையும் சார்வது இல்லை. – 19

இந்த ஆத்மாவுக்கும், புத்திக்கும் ஆத்மாவினை அறியாமையே காரணம். அதனுடைய சேர்க்கைக்கு இவை இரண்டிற்கும் வேறு எந்த இயல்பான சம்பந்தமும் இல்லை என்பதை கூறுகிறோம்.

சரியான, சந்தேகமான, பொய்யான அறிவு என்பது முதலான வகைகளினால் புத்தியினுடைய பிரிவு உண்டாகின்றது. அவைகளின் ( சரியான அறிவு முதலியவை) உத்பத்தியும் , அழிவும் ஆகிறது. இவைகள் தவறாக அறிவின்மையால் ஆத்மாவில் ஏற்றிப் பார்க்கப்படுகிறது. – 20

ஆத்மாவில் இருப்பை எப்படி நிச்சயிப்பது என்றால் கூறுகிறோம்.

புத்தியின் எண்ண அலைகளின் அழிவும், அதனுடைய உற்பத்தியும் , அவைகள் உண்டாவது மாத்திரத்தால் ஆவதில்லை. (அறியப்படுவதில்லை) ஆனால், உற்பத்தி, அழிவினால் பாதிக்கப்படாத ஒன்றினால் தான் (ஆத்மா) அது நிச்சயிக்கப்படுகிறது. – 21

இன்னும்

<u>நீ அதுவாக இருக்கிறாய்</u> போன்ற வாக்கியங்கள் நேர்மறையாகவும்,

எதிர்மறையாகவும் அனாத்மாவிலிருந்து ஆத்ம புத்தியை விலக்கி, பிறகு அது நம்முடைய உண்மையான அறியாமையை அழிக்கின்றது . – 22

என்பவைகளை மீண்டும், மீண்டும் கூறுகிறோம். இது வேறு வேறு வகையில் விளக்கப்பட்டால் சரியாகவும், சீக்கிரகமாகவும் புரிந்துக் கொள்ளமுடியும் என்பதே காரணம். இங்கு நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களில் குறிப்பாக கூறப்பட்ட பிரிவற்ற பொருளை நேரடியாக எடுத்துக்கொண்டால் அது பிரிவையும், புலன்களுக்கு பொருளாகததையும் குறிப்பிடுவது போல தெரிகின்றது. இருந்தாலும் வேதத்தினால் அப்படிப்பட்ட பொருளை இங்கு விளக்கப்படவில்லை.

முன்பும் இந்த பொருள் விளக்கப்பட்டதால் இங்கு இதை கூறுகிறோம்.

அது என்ற வார்த்தைக்கு உலகத்தில் பல பொருள் இருந்தாலும், அது புலன்படாத ஒரு பொருளை குறிப்பதாகவே பார்க்கப்படுகிறது. – 23

நீ என்பது பிரிவற்றதான இயல்புடைய புலன்படும் பொருளையே (நேரில் பார்க்கப்படுகின்ற) குறிப்பதாக இருந்தாலும், அது சம்சாரத்தில் குறிக்கப்படும் (உலகத்தில்) பொருளை உடையதாகவே இருகிறது. – 24

வேறு குறிக்கோள் இருப்பதாலும் புலன்படும் துன்பப்டும் சம்சாரம் அங்கு கூறப்படாததாலும் என்பதை கூறுகின்றோம்.

நீ என்ற சொல்லை உத்தேசித்து அது என்பது உபயோகிக்கப்பட்டுள்ளது அதனால் அந்த நீ என்ற சொல் துன்பம் முதலிய பொருள் தரக்கூடியதாக இருக்க முடியாது. ஏனென்றால் எதிர்ப்பார்க்கப்பட்ட அது என்ற சொல்லுடன் உள்ள ஒற்றுமையையே நிலை நிறுத்துகின்றது. – 25

இப்படி இருப்பதினால், நீ அது ஆகிய சொற்களின் சிறப்பு, அது குறிப்பிடத்தக்க ஆகிய சம்பந்தத்தை ஒப்புக்கொள்வதால் பிரிவை குறிக்கும் சொல்லாக இல்லாமல் , அவைகளின் ஒற்றுமையை குறிப்பதாக இருக்கின்றது. என்று முடிக்கிறோம்.

அது என்பது சிறப்பை உணர்த்தும் சொல்லாகவும் நீ என்பது சிறப்பிக்கப்பட்டதாகவும் ஆத்மாவுடன் இவைகள் குறிப்பிடப்பட்ட மாற்றம், குறியுடைய சம்பந்தத்துடன் இருப்பதாலும் (இவை ஒற்றுமையை குறிக்கிறது). - 26

மீண்டும் அஹங்காரம் குறிப்பிடப்பட்டதாகவும் எதிராகவும் (குறிக்கும்), அதனால் நீக்கதக்கதாகவும் இருப்பதால் எப்படி அது ஆத்மாவின் குறிப்பாக முடியும்.

எப்படி கற்பனையான பாம்பு, உண்மையான கயிறுடைய குறிப்பாக ஆகிறதோ, அதுபோல, அஹங்காரம் ஆத்மாவுடைய குறிப்பாகிறது. <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> முதலிய வாக்கியங்களின் பொருளை உணர்வதும் அஹங்காரத்தை துணையாக கொண்டே (அஹங்காரம்) அதனுடைய நீக்கத்தினால் . - 27

அப்படியென்றால், கேட்பவர்கெல்லாம் அதன் பொருள் விளங்காதது ஏன் என்றால் நேர்மறையாகவும் , எதிர்மறையாகவும் விசாரித்து அறிபவர்க்கே ஆகும். ஏனென்றால் .

ஒருவர் உடல் முதலியவைகளை நான் இல்லை (அஹங்காரத்தை ) என்று விட்டு எவ்வளவு தூரம் ஆத்மாவை நெருங்குகிறானோ அவ்வளவு நீ அது ஆகிய சொற்களின் பிரிவற்ற தன்மையை அறிந்து கொள்கிறான். - 28

மீண்டும் என்ன காரணத்தினால் உடல் முதலியவைகளின் அனாத்மதன்மையை நிச்சயித்தாலே ஜீவன் ஆத்மாவை அறிகிறான். அது நிச்சயிக்காமலே ஏன் முடியாது என்றால், கூறுகிறோம். ஆத்மாவை அறியாதன்மை என்பது அதனுடைய இயல்பாக இல்லாததால் அதனுடைய இருத்தலோ புத்தி முதல் உடல் வரை உள்ளவைகளில் நான் என்ற எண்ணமே காரணம். அதில் நான் என்ற எண்ணம் அறியாமையாலேயே உண்டானது. ஆத்மதன்மையை போல அனாத்மதன்மையும் அறியாமலேயே உண்டானது. அதனால்தான் அறியாமை இல்லாத வித்வான் (மெய்ஞானி) ஆத்மாவாகவே

தானாக இருக்கிறார். அதனால் கூறுகிறோம்.

உடல் முதலியவை தடைகளாக இருப்பதால் (அதில் நான் என்ற புத்தி) அது என்பதின் பொருள் தானாகவே இருந்தும் அதை புலப்படாததாகவே அறிகிறான். அது தானே என்பது உடல் முதலியவைகளில் நான் என்ற எண்ணம் அழிந்த பின் அறிவான். - 29

கூறப்பட்ட பொருள் விளக்க வேண்டி ஒரு உதாரணத்தை தருகிறோம்.

எப்படி பித்தத்தினால் உண்டான மஞ்சள் (காமாலை) காரணமாக வெளிவிஷய்ங்களில் மஞ்சள் தெரிகின்றதோ அதுபோல தன் இயல்பான ஆத்மாவை (சைதன்யம்) வெளிவிஷயங்களில் (புத்தி முதலிய) தெரிகின்றது. - 30

இப்படி இருக்கிறதனால் சந்தேகமில்லாமல் இதை அறிய வேண்டும்.

நீ அது ஆகிய சொற்களின் பொருட்களை விசாரித்து பலவாக உலக வழக்கில் அறிந்து, வாக்கியத்தின் உண்மையான பொருளை அறிகின்றனர். - 31

மீண்டும் சொற்களின் சாமான்யமான பொருட்களை குறிக்கும் தன்மையை அதனுடைய சிறப்பான (விசேஷமான) பொருளை குறிக்கும் காரணமாக எப்படி கொள்வது, கூறுவது சரிதான். சொல்கிறோம்.

சாமான்யமான பொருளையே சொற்கள் கூறுகின்றன. விசேஷமான பொருளை உணர்த்துகின்றது வேத வாக்கியங்கள் ஆனாலும் வேதத்தினால் கட்டுபட்டு (வரையறுக்கப்பட்டு) விசேஷமான பொருளையே கூறுவதாக சொற்கள் ஆகின்றன. - 32

நேர்மறை - எதிர்மறையாகிய விசாரத்தினால் அந்த வாக்கியங்களே, ஒரே தலத்தில் குறிக்கப்படும் முறை முதலியவைகளினால் அறியாமை என்னும் திரையை அழிப்பதின் வாயிலாக மோக்ஷத்தில் விருப்பமுள்ளவரை தன்னுடைய உண்மையான இயல்பில் குளிப்பாட்டுகின்றது. அது

விசாரத்தினால் மட்டும் இயலாது என்பதை கூறுகிறோம்.

புத்தி முதலியவை ஆத்மா இல்லை என்பது யுக்திகளாலும் நிலைநிறுத்தப்பட முடியும். ஆனால் அவை எப்பொழுதிற்கும் (முழுமையாக) நீக்கப்பட்டது ஆகாது. அதனால் அது இல்லை போன்ற வாக்கியங்களை நன்றாக சார வேண்டும். - 33

யுக்தியினால் மட்டும் ஒருவர் தான் ஆசைப்பட்ட பொருளை அடைவதில்லை. அதுமட்டுமில்லை, விரும்பாததையும் அடைய நேரிடும் என்பதை கூறுகிறோம்.

அறியாமையால் (அறிவின்மையால்) தவறாக அனுமானம் (யுக்தி) என்ற ஒரே கண்ணுடைய பௌத்தர்கள் வேதத்தை சாராமல் (ப்ரமாணமாக) ஆத்மா இல்லாத (முடிவை) தன்மையை அடைந்தார்கள் ( உண்மை என்று ). - 34

வேதத்தின் வார்த்தைகளை கேட்காமல் இருப்பதற்கு (ஏற்காததற்கும்) எந்த காரணமும் இல்லை. ஏனென்றால், எல்லா இடங்களிலும் அப்படி ஏற்காமல் இருப்பதற்கு காரணம், ஒரு ப்ரமாணத்தினால் நிரூபிக்கப்பட்டதை மற்றோரு ப்ரமாணம் நிரூபித்தல், இல்லை வேறொரு ப்ரமாணத்தினால் எதிராக நிரூபிக்கப்பட்டால், இல்லை சந்தேகத்துடன் ஒரு விஷயத்தை நிரூபித்தல், இல்லையெனில் அது எதையுமே நிரூபிக்கவில்லையென்றாலும் அது ப்ரமாணமாக ஏற்கப்படாது. இதில் எந்தவொரு காரணமும் இல்லை. அதனால் கூறுகிறோம்.

வேறு ஒரு ப்ரமாணத்தினால் கிடைக்கப்பெறாத துன்பத்தினால் தீண்டப்படாத ஆத்மாவை பற்றி கூறும் வேதம் பிரமாணம் இல்லை என்பது என்ன காரணத்தினால் கூறப்படுகின்றது. - 35

வேதம் சந்தேகத்திற்கு இடமளிப்பதாகவுமில்லை. ஏனென்றால் விசாரத்தினால் எல்லா சந்தேகத்திற்கும் காரணமான அஹங்காரம் முதலியவை நிராகரிக்கப்பட்ட ஆத்மாவில் எப்படி சந்தேகம் யுக்திகளால் உண்டான அனுமானத்தினால் உண்டாகும். - 36

அதுமட்டுமில்லாமல்,

எங்கு (எதில் ) சந்தேகம் இருக்கின்றதோ அறிவாளிகளால் அது ஆத்மா இல்லை என்ற ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஏனென்றால் (தானே ஒளிர்கின்ற தன்மையுடையதால்) அங்கு சந்தேகத்திற்கு இடமில்லை. - 37

எதையும் நிரூபிக்கவில்லை என்ற பொருளற்ற தன்மை எப்பொழுதும் நெருங்க முடியாது. ஏனென்றால்,

புரிய வைக்கப்பட்டும் அனுபவம் (ஆத்மாவின்) எந்த வழியிலும் உண்டாகவில்லை என்றால் அந்த மனித பிண்டாத்திற்கு வேதம் எப்படி புரியவைக்கும். - 38

நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் விசாரணை செய்வதின் மூலம் வேதவாக்கியத்தினால் அந்த வாக்கியங்களிலடங்கா பொருளை ஆத்மாவை, வேதம் எப்படி நிரூபிக்கிறது என்பதை நிச்சயிப்பதற்காக வேத உதாரணத்தை கூறுகின்றோம்.

இந்த வாசனையை நான் நுகர்வேன் முதலியவை எவர் அறிகிறாரோ , அவரை (அதை) ஆத்மா அது என்ற சொல்லின் பொருளுக்கு வேற்றறதான பரம் ஜோதி என்று வேதாந்தத்தில் கேட்கப்படுகிற வாக்கியம். - 39

எப்படி (**தத் சத்யம், ஸ ஆத்மா தத்வமஸி** - சா 6-8-711) அது சத்யம் (உண்மை), அது ஆத்மா, அது நீ ஆவாய் என்பதின் மிகுதியாக இருக்கும் நேர்மறை, எதிர்மறை விசாரத்தின் வாக்கியம் (**ய ஏஷோ அக்ஷிணி புருஷோ த்ருஷ்யதே** சா - 8-7-411) இந்த கண்ணில் எந்த புருஷன் (மனிதன்) தேரிகிறாரோ ஆகியது முதல், (**அதயோ வேதேதம் ஜிக்ராணி** - சா 8-2-411) நான் நுகருகிறேன் என்பதை அறிபவரை எவர் அறிகிறாரோ என்பது வரை மேலும் (**அஹம் ப்ரம்மாஸ்மி** - ப்ரு - 1-4-1011) நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்பதில் மிகுதி நான் என்ற சொல்லின் பொருள் ஆத்மாவை குறிகின்றது. எல்லா இது என்ற விஷயத்தையும் நீக்கி, என்பதை (**யோ அயம்**) யார் இந்த முதலிய

வாக்கயிங்களினால் மீண்டும் மீண்டும் வேதம் கூறுகின்றது. - 40

எப்படி அஹங்காரத்தை துணை கொண்டு ஆத்மாவை அறிவதற்கு ஆசை என்பது நிச்சயிக்கப்படுகிறது. ஏனென்றால்

இந்த தானே ஒளிரும் ஆத்மாவானது சூரியன், சந்திரன், நெருப்பு, பேச்சு ஆகியவையெல்லாம் அடங்கிய பின்னும் எண்ண அலைகளை பார்ப்பவராக இருப்பது (சாக்ஷியாக) - 41

முனிவரானவர் கேட்கப்பட்டதற்கு இப்படி முடிவை கூறுகிறார்.

ஆத்மாவில் இருக்கிறது என்று கூறியதை கேட்டு எது யார் அந்த ஆத்மா என்று கேட்கிறார். புத்திக்கு எட்டாத (விஷயமாகாத) இயல்பாகவே முக்தியாக இருப்பதை ஆத்மா என்கிறார் முனிவர் . - 42

எதனால் அஹங்காரத்தின் துணைகொண்டு தன்னுடைய இயல்பான ஆத்மாவை அடைய ஆசையோ, அஹங்கார எண்ண அலை தன்னுடைய ரூபத்தை (தன்மையை) அடக்கி வேதவாக்கியத்தின் பொருளை உணர வழியாக (காரணமாக) இருக்கின்றது என்பதை கூறுகிறோம்.

நான் என்ற எண்ண அலையின் துணைக்கொண்டே ப்ரம்மத்தை அறிகிறாரோ, அதனுடைய இயல்பினை அடக்குவதாலேயே அஹங்காரத்தை அறிய காரணமாகிறது. - 43

அதனால் தான் இதை விளக்குவதாக சூளுரைத்தோம். நான் இந்த்ரியம் முதலியது இல்லை (2-5) முதலியவைகளால், அதை யுக்திகளால் நிரூபித்துவிட்டோம் என்று இந்த பகுதியை முடிக்கிறோம்.

நான் என்றதின் பொருளை விசாரித்து அறிந்து கொண்டால் வாக்கியத்தின் பொருள் ஏன் விளங்காமல் போகும். பிரத்யக்ஷ (நேரடி) ப்ரமாணத்தினால் அது நிராகரிக்கப்படுவதால் என்றால், வாக்கியங்கள் தன்னைப் பற்றியே கூறுவதால் ப்ரத்தியக்ஷத்தினால் எந்த விரோதமும் இல்லை.

- 44

கூறப்பட்ட சுலோகத்தின் பொருளையே மேலும் விளக்க கூறுகிறோம்.

ப்ரத்யக்ஷம் முதலியவை வெளிப்பொருட்களையே விஷயமாக்குகின்றது (அறிகின்றது) ஆத்மாவை இல்லை. நீ அந்த ப்ரம்மமே போன்ற வாக்கியங்கள் தன்னையே விசாரத்தினால் விஷயமாக்குவதால் (எந்த விரோதமுமில்லை). - 45

அதனால், அறிபவர், அறியும் வழி, அறிபடுபொருள் முதலியவைகளில் உணடாவதும். அழிவதுமான தன்மையானதால் நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் முஞ்சம் புல்லில் உள்ள நாறை பிரிப்பது போல, எல்லா புத்தி மாற்றங்களையும் உணரும் சாக்ஷியாக ஆத்மாவை பிரித்து <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> போன்ற வாக்கியங்களால் **அபூர்வம்** முதலிய லக்ஷணத்தை (குறியை) உடைய ஆத்மாவை அறிவீர்களாக. அதை கூறுகிறோம்.

நான் துன்பமடைபவன், இன்பமடைபவன் முதல் அறிபவன் வரை, எல்லா வகையான உண்டாகும், அழியும் தன்மையுடைய எண்ண அலைகள் எதன் காரணமாக அறியப்படுகின்றதோ, அந்த சாக்ஷி (ஆத்மா) நான் என்பது வாக்கியங்களின் பொருள். - 46

வேறு ப்ரமாணங்களை சாராமலே எல்லா வகையான கார்யமாகவும், காரணமாகவும் இருக்கும் இந்த த்வைதமான உலகம் (சம்சாரம்) இல்லாமல் உண்மை – அறிவு - இன்பம் (**சத்யம், ஞானம், அநந்தம்**) இயல்பாக இருக்கும் ஆத்மாவை <u>நீ அதுவாக இருக்கிறாய் , நான் ப்ரம்மமாக இருக்கிறேன்</u> முதலிய வாக்கியங்களால் சந்தேகமான, தவறான அறியாமை ஆகியவைகளை அழிப்பதன் மூலமாக நேராகப்பார்க்கப்படும் (அனுபவமாகும்) உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்குகிறது என்பதை தெளிவாக கூறினோம்.

சிலர் (**ப்ரபாகரர்** - மீமாம்ஸை) கூறுகின்றனர்

<u>நீ அதுவாக இருக்கிறாய்</u> போன்ற பொருளை இருப்பது போல் உரைக்கும் என்பதில் பிடிப்பு உள்ளவர்கள். ஆனால் அவை அப்படி கூறப்பட்ட பொருளை (ஆத்மாவை அடைதல்) தீர்மானிக்க முடியாதவை அவைகள் வெறும் விஷயங்களை தெரிவிக்கும் வாக்கியங்களால் வேறு ப்ரமாணத்தை ஒப்புக்கொள்ளாமல் <u>நதிக்கரையில் ஐந்து பழங்கள் உள்ளன</u> போன்ற வாக்கயிங்கள் ப்ரமாணமாவதில்லை. அதனால் ஒரு கட்டளையிடும் வாக்கியத்தினாலேயே விஷயத்தை தெரிவிக்கும் வாக்கியத்தின் ப்ரமாணத்தன்மை நிச்சயமாகிறது. வேறு ப்ரமாணத்தை கட்டளை வாக்கியங்கள் எதிர்ப்பார்க்காததால்.

இதை நிராகரிக்க வேண்டி ப்ரத்யக்ஷம் முதலானவைகளால் பொருளாக்கப்படுவதை நிராகரிப்பதனாலேயே. இந்திரியங்கள் கடந்தது இங்கு விஷயம் தெரிவிக்கும் வாக்கியத்தால் கூறப்பட்டவை என்பதை நிரூபித்து, தூங்கியவனை விழிக்க வைக்க உபயோகிக்கும் வாக்கியத்தை போல (கட்டளை தேவையில்லாதது ) என்று கூறவேண்டும் என்று இதை ஆரம்பிக்கிறோம்.

எப்பொழுதும் அறிபவராக இருப்பதால் (ஞானமே இயல்பாக) வேறு ப்ரமாணங்களை எதிர்பார்க்காததால் (தன்னுடைய நிரூபணத்திற்கு) சத்தம் முதலிய குணங்கள் இல்லாததால், எப்பொழுதும் சந்தேகத்திற்கு பொருளாக இல்லாததால். - 47

பிரிவற்ற தன்மை உடையதால், தானே தனித்து இருப்பதால் (மற்ற எதனாலும் அனுபவிக்கப்படாததால்) எப்பொழுதும் ப்ரமாணங்களுக்கு விஷயமாகததால், ஆத்மாவானது தாகம் முதலியதற்கு காரியமான ப்ரத்யக்ஷம் முதலியவைகளால் அறியப்படுவதில்லை. - 48

வேதமும் இந்த பொருளையே கூறுகின்றது.

பார்க்கப்படுவதாக, பிரிவற்றதாக, வெளிவிஷயங்களாக மற்றும் உருவம் முதலியவைகளில் சேர்க்கையினால் வேறாகிறது (எதிராகிறது). அதனால் அறிவுமயமான ஆத்மாவை புத்தியின் விஷயமாக ஆக்கமுடிவதில்லை. - 49

அதனால் வேதமும் யுக்திகளால் நிரூபணமாகும் பொருளையே கூறுகின்றது. பார்ப்பவரின் இயல்பை அறியும் ஆத்மாவை எந்த ப்ரமாணத்திற்கும் விஷயமாக ஆக்கமுடியாது என்று (ப்ரு-3-4-211) - 50

அனுமானத்திற்கு விஷயமாகததற்கு மற்றுமொரு காரணம் கூறுகின்றோம்.

ப்ரத்யக்ஷம் வெளிவிஷயங்களை கிரஹிப்பதால் ஆத்மாவுடன் சம்பந்தத்தை (எங்கெல்லாம் புகையோ அங்கெல்லாம் நெருப்பு போன்ற) அது அடைய முடியாததால் (ப்ரத்யக்ஷத்தை சார்ந்த) அனுமானம் இந்த ஆத்மாவை எப்பொழுதும் அனுபவத்திற்கு கொண்டுவர முடியாது. - 51

இப்படி அறிபவர், அறியும் வழி, அறியப்படுவது ஆகியவையெல்லாம் வெளிவிஷயங்களையே அறிய முடியும். உள்ளான ஆத்மாவை விஷயமாக அறிவதற்கு போதியவையாவதில்லை. இப்படியாக இருக்கிறபடியால். இங்கிருந்தே கூறப்பட்ட பொருளை புரிந்து கொள்ள முடியும் என்பதை கூறுகிறோம்.

ப்ரமாணத்தால் அறியப்படுவது எல்லாம் வெளிவிஷயமாகவே இருப்பதால், நன்றாக விசாரித்து பார்த்தும் இதனால் உங்களுடைய (அனாத்ம) விஷயங்களே நிரூபணமாகிறது என்பது விளங்குகிறது. - 52

ஏனென்றால், உலகத்தில் உள்ள ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களினால் நான் ப்ரம்மமாக இருக்கிறேன் போன்ற வாக்கியத்தின் பொருளை அறிய முடியாது. அதனால் .

நேர்மறை - எதிர்மறையாக ப்ராணன் வரை (மூச்சு) எல்லாவற்றையும் நிராகரித்து, சாதுவானவர் நான் யார் என்று பார்ப்பவருக்கு நீ சத்தாக (உண்மை) இருக்கிறாய் என்று வேதம் கூறுகிறது. - 53

கூறப்பட்ட நேர்மறை - எதிர்மறையான விசாரத்தின் பலன் இவ்வளவுதான். எது முடியும் போது வேத வாக்கியத்தில் கூறப்பட்ட நான்

ப்ரம்மமாக இருக்கிறேன் என்பது தெளிவாக அறியப்படுகிறது. வேதம் கூறியதை அனுசரித்து பார்ப்பவர் - பார்க்கப்படுவது, பிறந்தழிவது - சாக்ஷி ஆகிய பிரிவுகளினால் சுருக்கி கூறுகிறோம்.

பார்க்கப்படுவதால் பானையை போலவே உடலும், அந்த உடலை போலவே இந்திரியங்களும் மனதையும் இந்திரியத்தை போலவே என்று அறிய வேண்டும். அப்படிப்பட்ட மனதை போலவே இந்த புத்தியும் (நிச்சயிக்ககூடியது) அநாத்மா என்ற அறிய வேண்டும். - 54

அது போலவே எல்லா காரியங்களுக்கும் காரணமானதின், பிறந்தழியும் - சாக்ஷி இவற்றின் பிரிவினாலும் முன்பு இல்லாதன்மையை உடையதாகிறது. பின்பு அதுவே இருப்பதாகிறது. இருப்பதும் மீண்டும் இல்லாததாகிறது. இதுவே அநாத்மா விஷயங்களின் இயல்பு. இதற்கு மாறாக இருப்பது சாக்ஷி. - 55

இங்கு ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினாலேயே பானை முதலியவைகளின் அநாத்ம தன்மையும், ஆத்மாவின் பார்ப்பவர் என்ற இயல்பு நிச்சயிக்கப்பட்டதும் மற்றவைகளின் தன்மைகள் விளக்கப்படுகின்றது. இந்த பார்க்கப்படும் பொருள்களான பிறந்தழியும் தன்மையுடைய உடல், இந்த்ரியம் , மனம், புத்தி ஆகியவைகளை அநாத்மாவாக நீக்கி, நான் என்ற எண்ணமாகிறதை (அந்தக்கரணம்) பார்க்கப்படும் தன்மையுடையது என்று அநாத்மாவாக நிச்சயிக்கப்படுகிறது. அதை கூறுகின்றோம்.

பானை முதலியவைகள் எப்படி படிப்படியாக அஹங்காரத்தின் குறியாகின்றதோ அப்படியே பார்க்கப்படும் தன்மையுடையதால் அஹங்காரமும் பார்க்கும் ஆத்மாவிற்கு குறியாகிறது. - 56

ஆனால், பார்ப்பவர், பார்ப்பது , பார்க்கப்படுவது ஆகியவைகளின் விழிப்பு, கனவு, தூக்கம் ஆகியவைகளில் பிறந்தழிவது பார்க்கப்படுவதால், எது சாக்ஷியாக இருக்கிறதோ, இந்த பிறந்தழிவதற்கு அந்த ஆத்மா பிறப்பழிவு பிரிவுகள் இல்லாதது எப்படி, எந்த சூரியனால் இந்த உலகத்திற்கு வெளிச்சமும், இருளும் உண்டாகிறதோ, அந்த சூரியனுக்கு அந்த வெளிச்சம் அதன் இன்மை முதலான பிரிவுகள் இல்லை. இது இப்படி இருக்கிறபடியால் வாக்கியத்தினால்

அறிந்து கொள்ளப்படுகின்ற பொருளை , ஆத்மா உதயம், மறைவு இல்லாத அறிவே இயல்பாக இருக்கிறபடியால் யுக்தியினாலேயே அது நிரூபணமாகிறதாகையால் மீண்டும் வாக்கியத்தின் பொருளற்றதன்மை என்ற பிரச்சனையே உண்டாகிறது என்றால், இதில் எந்த தவறும் இல்லை. குறி என்ற பிரிவினாலேயே அதை நிரூபிக்க முடியுமாகையால் (நேரடியாக அறியமுடியாது) ஆனால், நேரடி அனுபவமான அனாத்ம பொருட்களில் இருத்தல் இல்லாமை ஆகியவைகளை கிரகிக்கின்ற சாக்ஷி அதனுடன் நேரடி சேர்க்கையில் இருப்பதால், வாக்கியத்தினால் என்ன அதிசயம் செய்ய முடியும் (நேரடியான சேர்க்கை இருப்பதால் அனுமானத்தினால் நேரடியான ஆத்மாவின் அறிவே உண்டாகும்) என்றால், அப்படி கூறக் கூடாது. அனுமானம் குறியை சார்ந்தே அதனை அண்டியே இருப்பதால் குறியை பிரிவாக கொண்டாதாகவே ஆத்மாவின் அறிவு உண்டாகும். நேரடியான அனுபவமாக அது உண்டாகாது (**யமேவைஷ வ்ருனுதே தே லப்ய** - கட 1-2-23) எவர் இதை இப்படி வேண்டுகின்றாரோ, அவராலேயே இது அறியப்படுகின்றது. என்று வேதமும் கூறுகின்றது அதனால் கூறுகிறோம்.

குறி குறிக்கப்பட்டதின் இருத்தலை காட்டுவதாகவே இருப்பதால் அது வாக்கியத்தின் பொருளை உணர்த்துவதில்லை இருத்தல், இல்லாமை இவை இரண்டையும் தாண்டிய ஆத்மாவின் இயல்பு வாக்கியத்தாலேயே அறியப்படுகிறது. - 57

ஆனால், இருத்தல், இல்லாமை இவைகளை தாண்டியிருக்கும் ஆத்மாவின் அறிவு வாக்கியத்தினால் உண்டாகட்டும். அப்படியும் வாக்கியத்தினில் உள்ள தாகத்தை விட்டே தீர வேண்டும் ஏனென்றால் வாக்கியத்தை கேட்காமலேயே கூட எல்லா வகையான வேற்றுமைகளும் நீங்கிய தூக்கத்தில், மாடு மேய்பவன் முதல் பண்டிதன் வரை எல்லோரும் அனுபவிக்கிறார்கள் அதனால் வாக்கியத்தை கேட்டல் என்பது அவசியமில்லை.

விஷயம் அப்படியில்லை. ஏனென்றால் , எல்லா துன்பங்களுக்கும் காரணமான ஆத்மாவினை கேட்காமல், சிந்திக்காமல், தெளியாமல் நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்று அறிந்தால், எல்லா உயிரினங்களுக்கும் தூக்கம்

இயல்பாகவே வருவதால் எல்லா வகையான துன்பமான சம்சாரமும் நீங்கிவிட்டதாகி விடும் மறுபடி, மோக்ஷத்திலிருந்து எழுவது என்பது சரியானதில்லை. அப்படி இருந்தால் மோக்ஷம் என்பதே இல்லாததாகிவிடும். ஒருவர் தூங்கினால் மற்றொருவர் எழுந்தார் என்றும் கூறுவது முடியாது. நான் தூக்கத்தில் வேறு எதையும் காணவில்லை என்று எழுந்ததும் கூறுவது பார்க்கப்படுவதால், அதனால் தூக்கத்தில் அறியாமை கண்டிப்பாக ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், தூக்கத்தில் அறியாமை இருந்ததென்றால், விழிப்பு, வெறுப்பு, பானை , அறியாமை முதலியவைகளை போல அதுவும் ப்ரத்யக்ஷமாக வேண்டும். எப்படி, உலகத்தில் பானையை நான் அறிந்தவரில்லை என்று அறியாமை ப்ரத்யக்ஷமாகின்றதோ என்றால் இங்கு கூறுகிறோம், அப்படி இல்லை. அறியாமையை அறிய அந்தகரணம் இன்மையால், அது எப்படி என்றால் கேள் கூறுகிறோம்.

எப்படி, வெளிவிஷயங்களை (அனாத்மா) எண்ணங்களாக ஆக்காமல் எப்படி அஹங்காரம் என்பது இல்லையோ அப்படியே . அந்தகரணம் இல்லாமல் அறியாமை சரியாக விளங்குவது இல்லை. – 58

யாரோ ஒருவன் எவ்வளவு தூரம் இங்கு விஷயம் வளர்ந்தது என்பதை மறந்து பார்க்கப்படுவதால் அஹங்காரமும் குறியாகின்றது பார்க்கும் ஆத்மாவிற்கு (3-56) என்ற தவறான யுக்தியை கூறுகின்றான். என்ன காரணத்தினால் தவறு என்றால் அஹங்காரமும் அதை அறியும் சாக்ஷியும் வேறாக ப்ரம்மம் இல்லை. எப்படி இங்கு பானை, தேவதத்தன் என்பது அறியப்படுவது, அறிபவர் என்று தெளிவாக பிரிவு உலகத்தில் உள்ளதோ அப்படி இங்கு அஹங்காரத்திற்கும் அதன் சாக்ஷிக்கு பிரிவு இல்லை. அதனால் கூறுப்பட்டது சரியானது இல்லை. இங்கு கூறுகிறோம்.

எரிவது, எரிப்பது இரண்டையும் எரிகின்ற கட்டையில் ஒரே இடத்தில் எப்படி இருக்கிறதோ, அப்படியே , அறியும் பொருள் அறிபடுவது, அஹங்காரத்திலும் சாக்ஷி ஆத்மாவிலும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உண்டு. – 59

இப்படி, அறியாமையால் உண்டாகின்ற அந்தக்கரணத்தின்

வெளிவிஷய காரணமான இயல்பை பிரித்துக்காட்ட அஹங்காரம் உண்டாகின்றது. அந்த அந்தக்கரணத்துடன் கூடிய ஆத்மாவின் காரணமாக உண்டாகும் அறிவின் தடை இல்லாமலே விஷயமாக ஆகின்றது. அங்கு அறிபவர், அஹங்காரம் இவை இரண்டிற்கும் வெளிச்சப்படுத்துபவர் - வெளிச்சபடும் பொருள் என்ற சம்பாந்தத்தை தவிர வேறு சம்பந்தம் இல்லை. அஹங்காரத்தை ஏற்றிப் பார்ப்பதினால் ஆத்மாவுடன் தானாகவே ஆக்கி (**உபகார்ய- உபகாரக**) உதவி - உதவி செய்பவர் என்ற சம்பந்தத்துடன் இருக்கும் தகுதியோடு வெளிவிஷயங்களை உதவியாக, தடையாகவோ இருந்து தன்னுடன் சம்பந்தத்தை உண்டாக்குகின்றது. அதை கூறுகிறோம்.

இது என்ற அறிவு அந்தக்கரணத்துடன் கூடிய சாக்ஷிக்கு உண்டாகும். என்னுடையது என்ற அறிவு அஹங்காரத்திற்கு அப்போது உண்டாகும். அறியாமையுடன் சேர்க்கையினால் இது என்ற அறிவு உண்டாகின்றது. (உதவி முதலிய சம்பந்தத்தினால்) மாற்றமடையும் அஹங்காரத்திற்கு என்னுடையது என்ற அறிவு உண்டாகிறது. - 60

ஒரே அறிபவருக்கு உள்- வெளி என்ற காரணங்களினால் பிரிவற்றதாக இருக்கும் பொருளிலும் நான் என்னுடையது என்று இரண்டு அறிவு உண்டாகின்றது என்று கூறப்பட்டது. எந்த அஹங்காரத்திற்கு உதவியோ - உதவியின்மையோ உண்டாகிறதோ அதற்கே என்னுடையது என்ற எண்ணம் உண்டாகின்றது. அவை உண்டாகதவைக்கு இது என்ற எண்ணம் உண்டாகின்றது என்று எப்படி தீர்மானம் செய்யப்படுகின்றது என்றால் நேர்மறை - எதிர்மறையான விசாரத்தினால் இது அறியப்படுகிறது. அது எப்படி என்றால், கூறுகிறோம்.

அஹங்காரத்தினால் உதவி செய்யப்பட்டதினால் சாக்ஷி என்னுடையது என்று தீர்மானிக்காது பானை முதலியவை போல உதவி செய்யப்படாதவைகளினால் இது என்ற தவறான அறிவினால் உண்டாகிறது. - 61

அறிவின்மையும், அதனுடைய செயலில் சார்ந்திருப்பதாலும், அந்தகரணத்தில் இது என்னுடையது என்ற அறிவு உண்டாவது

காண்பிக்கப்பட்டது. இப்பொழுது அதற்கு எதிரானதை எதிர்மறையாக காண்பிப்பதற்கு கூறுகிறோம்.

தூக்கத்தில் அந்தகரணத்தினுடைய அறியாமை இல்லாததால் அங்கு இது என்னுடையது என்று அறிவு உண்டாவதில்லை. விழித்தவனுக்கு நான் ஒன்றும் அறியவில்லை என்ற அனுபவத்தினால் இருத்தலின் ஞானம் (அறியாமையின் இன்மை) அறியப்படுகிறது. – 62

ஆத்மா, அனாத்மா இவைகளின் அறிவின் எல்லையை காட்ட கூறுகிறோம்.

வாக்கியத்தினாலும் (நீ என்பதை விளக்கும்) ப்ரத்யக்ஷத்தினாலும் (நேர்மறை – எதிர்மறை விசாரம் ) இவைகளால் இந்த பொருளே விளங்குகிறது. அனாத்மாவிலிருந்து வேறானது ஆத்மா என்று ஆனால் துன்பத்திற்கு காரணமான சம்சாரம் ஆத்மாவை பற்றிய சம்பந்தத்தை கூறும் வேத வாக்கியங்களை (நீ அதுவாக இருக்கிறாய் போன்ற) கேட்பதினாலேயே உண்டாகும். – 63

இரண்டாவது அத்யாயத்தில் நான்கு விதமான சாஸ்திரம் கேட்பவரை பற்றி கூறினோம். அதில் எவர் எல்லா விதமான அனாத்மாவையும் விளக்கியதனால் தன்னுடைய ஆத்மாவில் வேத வாக்கியத்தின் பொருளை நிலைநிறுத்தினாரோ அவருடைய எல்லா தடைகளும் நீங்கிய காரணத்தினால் அவருக்கு கூற வேண்டியது எதுவும் பாக்கியில்லை. எவர் வாக்கியத்தை கேட்பதினாலேயே ஆத்மாவின் அறிவை அடைகிறாரோ அவரும் புலன்களுக்கு எட்டாத நிலையை அடைந்ததால் அவருக்கும் கூற வேண்டியது ஒன்றும் இல்லை. எவர் நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களை கேட்டு பிறகு தானே நேர்மறை – எதிர்மறையாக விசாரித்து முடிவில் வாக்கியத்தின் பொருளை உணர்ந்து கொண்டாரோ அவரும் அறிய வேண்டியதை அறிந்ததால், முன் உள்ளோர் போலவே விட்டு விட வேண்டும். ஆனால் எவர் நேர்மறை எதிர்மறையாக விசாரித்தும் மீண்டும் மீண்டும் வாக்கியத்தை கேட்டும் உண்மையை அறிய வேண்டிய நேர்மறை – எதிர்மறையாக விசாரித்தவருக்கு , எவற்கு வாக்கியத்தினை உறைப்பது

ஆகிறது என்றால் கூறுகிறோம்.

ஒன்பது என்ற எண்ணிக்கையால் மூடப்பட்ட புத்தியை உடையவனுக்கு, பத்தாவது நபரை தவறான அறிவினால் எப்படி நானே பத்தாவது என்று ஒன்பது நபரையும் பார்த்தும் அறியவில்லையோ. – 64

இப்பொழுது உதாரணத்தில் கூறியதை உதாரிக்கப்பட்டதில் நிரூபிக்கிறோம்.

இரண்டற்ற ப்ரம்மமாக தானே இருந்தும் நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களை கேட்காமல் எந்த சம்பந்தமும் இல்லாத ஆத்மாவை அறிவதில்லை. இதற்கு வேறு காரணத்தை தேட வேண்டியதில்லை. – 65

வேறு காரணத்தை தேட வேண்டியது இல்லை என்று கூறப்பட்டது. அது ஏன் என்று கேட்டால் பதில் கூறுகிறோம். ஆத்மாவின் அறியாமை விசாரத்தை தாங்காது என்பதால் அது எப்படி என்று கூறுகிறோம்.

இந்த அறியாமையான தவறான அறிவானது எந்த காரணமும் இல்லாதது. எல்லா யுக்திகளுக்கும் இது எதிரானது. விசாரத்தை இது தாங்காது இருள் சூரிய வெளிச்சத்தை தாங்காதது போல. – 66

அப்படிப்பட்ட இந்த அறியாமையான தவறான அறிவானது, உண்மையான அறிவினாலேயே விலகும்.

இருத்தல் (சத்) இருக்கிறது ஆகிய தீர்மானமான அறிவினால் இந்த தவறான அறிவு விலக்க ஆசைப்படுகிறது. வாக்கியத்தினால் உண்டான தன்னுடைய ஆத்மாவின் அறிவினால் மட்டுமே அது ஆகும். வேறு ப்ரமாணங்களால் இல்லை. – 67

மீண்டும் வாக்கியம் எப்படி நிரூபிக்கின்றது இப்படி என்று என்றால் உதாரணத்தோடு கூறுகிறோம்.

பத்தாவது நபரை அறிய வேண்டி ஆசையுள்ளவருக்கு எப்படி ஒன்பதை தாண்டி நீயே பத்தாவதாக இருக்கிறாய் என்பது அறிவை உண்டு பண்ணுமோ அப்படியே வாக்கியம் செய்கின்றது. - 68

அந்த அறிவு நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியத்தை கேட்பதினாலேயே உண்டாவதினாலேயே தான். அதை விடுத்து இப்படி அல்ல என்று வேறு எண்ண அலைகள் உண்டாகாது. இதை உதாரணத்தில் நிரூபிக்கிறோம்.

நீ பத்தாவதாக இருக்கிறாய் என்ற வாக்கியத்தினால் உண்டான அறிவு அழிவதில்லை. அதற்கு முன்பு, அறியும் போது, அதற்கு பின்னே ஒன்பதாவது நபர் பற்றிய சந்தேகம் எழுவதில்லை. - 69

அது போலவே நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியத்தினால் பிரிவு விலக்கி, ஆத்மாவின் (நீ என்ற பொருள் பற்றிய) சரியான அறிவை அடைந்த பின் அறிவு தீர்மானமாகவே உண்டாகின்றது. - 70

தன்னுடைய ஆத்மாவை பற்றிய சரியான அறிவு உண்டாகின்றது என்று கூறப்பட்டது. அங்கு ஒரு கேள்வி எப்படி பானை முதலிய விஷயங்களில் அறிவு, அறிபவர், அறியும் வழி, அறிபடு பொருள் என்று பிரிவாக உண்டாகிறதோ, அதுபோலவே உண்டாகுமா இல்லை, பாக்கி இல்லாமல் எல்லா பிரிவுகளையும் அழிப்பதின் மூலம் அறிபவர் ஆத்மாவாக உண்டாகிறதா, கூறுகிறோம்.

ஆத்மா தன்னுடைய இயல்பான தன்மையை உடையது செயல், செய்பவர், பலன் இவையாவும் இல்லாது இரண்டற்ற அதனால் பிரகாசிக்கப்பட்ட புத்தியானது ஆத்மாவை போல குறிக்கப்படுகிறது. - 71

ஏனென்றால்

அறிவுள்ளவர்களும் இதனால் அதை தன்னுடைய இயல்பாகவே பார்க்கிறார்கள். தூரத்தில் இருக்கும் புலன்களும் அதனுடைய விஷயங்களிலும்

நான் என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக அழிகின்றது. - 72

அப்படியென்றால், நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களினாலேயே உண்மை எதுவோ அதை அப்படியே அறிய செய்கிறது என்றால் எதனால் அறியாமையால் உண்டான செய்பவர் முதலியவைகளை வேதம் உபதேசிக்கின்றது என்றால், பதில் கூறுகிறோம்.

தவறான புத்தியில் உண்டானதை விளக்குவதற்காக அதை கூறி பின்பு நீக்கும் பொருட்டு இது இப்படி இல்லை என்று உபதேசிக்கின்றது. வேதம் நீ அது போன்ற வாக்கியங்களால் கூறுவது போல. - 73

இந்த பொருள் உதாரணத்துடன் தெரிவிக்கப்படுகின்றது.

தூண் என்று கூறுவதால் அதில் உண்டான மனித புத்தி விலகுவதில்லை. அதுபோல அதுவாக இருக்கிறாய் என்று மட்டும் கூறினால் மனிதனுடைய தவறான அறிவை நீக்குவதில்லை. - 74

எதனால் கேட்பவர் அறிந்த பொருளையே நீ என்ற சொல் குறிக்கிறது. அதனால் அதையே பொருளாக கூற விருப்பமுள்ளதால் துன்பம் முதலிய அதனுடைய சிறப்புகளை கூறவில்லை. கட்டளை இடப்பட்டாலே அது விரோதமாகின்றது. கூறப்பட்ட கட்டளையாகப்படட வார்த்தைகளில் இல்லை. இந்த நியதியும் தன்னுடைய சொற்பொருளை (முக்கியபொருள்) கூறும் இடத்திலேதான் (விரோத நியதி கூறப்பட்ட கட்டளையுடன்) சந்தேகம் இருக்க முடியும், அவைகள் எல்லாமே சாமான்யமான பொருளை குறிப்பவைகளாக உடையவைகளாக இருப்பதால், மற்ற இடங்களில் இல்லை.

தன்னுடைய சொற்பொருளை கூறும் சொல்லாக நீ அது ஆகியவைகளை ஏற்க ஆசையில்லாதவர்களான வாதிகள், அதனுடைய குறிப்பு பொருளை நிரூபிப்பதால், அவை இரண்டும் தங்களுடைய எதிர்பதமான பொருளை ஒன்றை ஒன்று நோக்கி விட்டுவிடும். - 75

சாமான்ய பொருளை கூறுவதாக இல்லை என்பதை நிரூபித்தால்

(அனுவாதம்) வழிமொழியாக அது இருப்பதால், கட்டளையாக கூறப்பட்டதுடன் விரோதமுள்ளதால், துன்பப்படுகின்ற முதலியவையுடன் ப்ரம்மத்திற்கு சேர்க்கை இல்லாமல் இருக்கட்டும். கூறப்பட்ட தோஷம் இல்லாததால், நீ அது ஆகியவைக்கு சேர்க்கை இருக்கட்டும், நீலத்தாமரையில் இருப்பது போல என்றால் இப்படியும் கூட இருக்க முடியாது. ஏனென்றால்.

அது என்பதின் பொருள் இரண்டானது மற்றும் புலன்களுக்கப்பாற்பட்டது இல்லாமல் இருக்கிறது. இரண்டற்ற ப்ரம்மம் தன்னுடைய ஆத்மாவை விட்டு இருக்க முடியாது. ஆத்மாவும் நித்தியமான பார்ப்பவரை (ப்ரம்மத்தை) விட்டு இருக்க முடியாது. – 76

இங்கு கூறப்படுகிறது. எந்த பொருள், இங்கு விட விருப்பப்பட்டது, எந்த பொருள் இங்கு உபதேசிக்கப்பட்டதாக கொள்ளப்பட்டது என்றால் கூறுகிறோம்.

தன்னுடைய ஆத்மாவின் இயல்பை கூறும் சொல்லான நீ என்பது இரண்டு பொருளை குறிக்கிறது. நான் துன்ப்படுபவன் மற்றும் ஆத்மா. அங்கு ஆத்மாவுடன் நான் துன்பப்படுபவன் என்பது போன்ற பொருள்களுடன் சம்பந்தம் தன்னுடைய ஆத்மாவின் இயல்பை பற்றிய அறியாமையே காரணம். அதனால் நான் என்பதின் பொருள் அஹங்காரத்துடன் கூடியிருப்பதாலும் விடப்படவேண்டியது எது, எடுத்துக்கொள்ளவேண்டியது எது என்பது விசாரம் இல்லாமல் புரிவதில்லை. அதனால் இதை கூறுகிறோம்.

புலன்களுக்கு அப்பாற்பட்டது என்ற அது என்பதின் பொருள் விட வேண்டியது. நான் என்பதின் அஹங்காரத்தை போல தன்னுடைய ஆத்மாவில் அஹங்காரத்தின் பிரிவற்ற தன்மை போல புலனுக்கு எட்டாததுடன் ஆத்மாவுக்கு பிரிவற்ற தன்மை தெரிகின்றது. – 77

ஆனால், மீண்டும் எப்படி அது என்பதின் பொருளான இரண்டற்றதான இயல்பை உடையது தன்னுடைய ஆத்மாவில் தெரிகின்ற இரண்டான தன்மை மற்றும் துன்ப்படும் தன்மை ஆகியவைகளை பாக்கி இல்லாமல் அழிக்கின்றது என்றால், கூறுகிறோம்.

நாங்கள் இவை இரண்டிற்கும் அழிப்பது, அழிவது என்ற சம்பந்தத்தை கூறுவதில்லை. பின் எப்படி தன்னுடைய ஆத்மாவில் முன்பு அறியப்படாத இரண்டற்ற தன்மை என்றால் அது என்பதினால் அறியப்படுகின்றது.

அதனால், அறியாமையை நீக்குவதன்மூலம் அதனால் உண்டான நீ என்பதில் இருக்கும் இரண்டான தன்மையும் அது என்பதில் இருக்கும் புலன்களுக்கு அப்பாற்பட்ட தன்மையையும் விளக்குவதினால், வேறுபட்ட தோஷம் என்ற (ஒன்றின் அறியாமை மற்றதின் அறிவு விலக்கட்டும்) என்ற கேள்விக்கே இடமில்லை. அதை கூறுகிறோம்.

அது என்பதின் பொருள் நீ என்பதின் பொருளுடன் சேர்ந்து பலவான தன்மையை நீக்குகிறது. நீ என்பதின் பொருளும் அது என்பதின் பொருளுடன் சேர்ந்து (ஒன்றாகி) புலன்களுக்கு அப்பாற்பட்டது என்பதை நீக்குகிறது. - 78

மீண்டும் எப்படி இரண்டற்ற தன்மையையுடைய அது என்பதினுடைய பொருள் நீ என்பதினுடைய பொருளான ஆத்மாவுடன் பிரிவற்றதாக இருந்தும் அறியாமையினால் உண்டான அறியாமையை அழிக்கின்றது. கூறுகிறோம். விரோத தன்மையினால் , அதை விளக்குகிறோம்.

சம்சாரத்தன்மை இரண்டற்ற தன்மையுடன் விரோதமானது (எதிரானது), புலன்களுக்கு அப்பாறப்பட்டது என்பது ஆத்மாவுடன் (தானாகவே இருக்கும்) என்பதுடன் விரோதமானது. அதனால் ஒருமையை குறிக்கும் நீ அது ஆகிய சொற்களினால் அவைகளின் நீக்கம் ஆகின்றது. - 79

அவைகள் மற்றவைகளை விளக்குவதற்கு வேறு காரணங்கள் கூறுகின்றோம்.

மனிதனால் அறியப்படாத பொருளை உடையதாலும், வேத வாக்கியமானதாலும் தான் என்பதை விடாமல் அது நீ ஆகியவை இதற்கு விரோதமானவைகளை எதிர்கின்றது. - 80

இதனால் கூறப்பட்ட முறையில் ப்ரத்யக்ஷம் முதலிய மற்ற ப்ரமாணங்களுடன் எந்த சிறிய விரோதமும் உண்டாவது இல்லை. மீண்டும் , எவர் எல்லாவகையான முயர்ச்சிகளும் செய்து ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களால் உள்ள விரோதத்தினால் வாக்கியத்தின் பொருள் உண்டாகாது என்கிறார்களோ அவர்கள் வாதத்தில் உள்ள குறையை காண்பிக்கிறோம்.

வேத வாக்கியம் ப்ரத்யக்ஷம் முதலியவைகளிலிருந்து விரோதமாக இருப்பதை கூறினால் பெண்ணை நெருப்பு என்பது போல, அங்கு பெண்ணை அணைக்கும் போது அவள் நெருப்பு என்ற பாவனையை வைக்கக் கூறப்படுவது ஆகும். – 81

ஆனால் <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> போன்ற வாக்கியங்கள் எல்லா வகையிலும் விசாரித்து பார்த்தாலும் அது செயலை குறிப்பதாக சிறிதும் இல்லை. அதனால் , அங்கு உபாசனை (பாவனை) முதலிய செயல்கள் குறிப்பிடப்படவில்லை என்று கூறுகிறோம்.

ஆத்ம வஸ்துவை மட்டும் குறிக்கும் வாக்கியம் என்றால் அது செயலை குறிப்பதாக இருக்க முடியாது. வஸ்து (ஆத்மா) ஒரே ரூபமாக இருப்பதால் அங்கு பலவகை என்பது சாத்தியம் இல்லை. – 82

மற்ற ப்ரமாணங்களின் விஷயத்திலிருந்து வேறாக இருப்பதாலும் அவைகளினால் எந்த விரோதமும் இல்லை. எப்படி என்றால் கூறுகிறோம்.

வேறு ப்ரமாணங்களினால் அடைய முடியாததை (அறிய) தெளிவிப்பதே ப்ரமாணமாகும். அப்படி இல்லையென்றால் அது ப்ரமாணமில்லை. அதனால் விரோதம் இல்லை. பல வகை வஸ்துக்களை கூறும் மற்ற ப்ரமாணங்களுடன் சாஸ்த்ரத்திற்கு . – 83

இருந்தும் மற்ற ப்ரமாணங்களின் வேறு வேறு விஷயங்கள் விரோதத்தை கூறுகின்றவர், இங்கும் விரோதத்தை கூறுவர்.

இது சப்தம் (ஒலி) இல்லை, ஏன் கண்களினால் நான் உருவத்தை

பார்ப்பதினால் என்பதில் எப்படி விரோதமோ அப்படியே இங்கும் அறியவேண்டும் . – 84

ப்ரமாணங்கள் ஒன்றுக்கொன்று எதிரானவை இல்லை. காது முதலியவை போல வேறுவேறு விஷயத்தை உடையதால், எங்கு எவைகளுக்கு அப்படி வேறல்லாத விஷயம் இருக்கிறதோ அங்கு எலியும், கீறியும் போல ஒன்று மற்றொன்றை அழித்துவிடும். அதனால் அதை கூறுகிறோம்.

ப்ரத்யக்ஷம் என்றால் (ப்ரமாணம்) அது சப்தப்ப்ரமாணத்தினால் அறியப்பட முடியாது. விரோதமும் இல்லை. சப்தப்ரமாணமும் அதுபோல் ப்ரத்யக்ஷத்திற்கு ஒன்றை ப்ரமாணமாக ஏற்றால் மற்றது ப்ரமாணாபாசமாக (பொய்ப்ரமாணமாக) தான் இருக்கும். – 85

எப்படி (அனுமானத்திற்கு) **ப்ரதிக்ஞா** (தீர்மானம்), காரணம், உதாரணம் முதலியவையோ அப்படி இங்கு என்று கூற முடியாது. சப்தம் முதலியவை தானே தனித்து நிற்கும் ப்ரமாணமாதலால் அதனை கூறுகிறோம்.

தன்னுடைய பெருமையினாலேயே ப்ரமாணங்கள் உள்ளதை உள்ளபடி காண்பிக்கின்றது. ஒன்று மற்றொன்றை சார்ந்தால் அவை ப்ரமாணத்தன்மை உள்ளவை ஆகாது. – 86

இன்பம், துன்பம் முதலியவைகளின் சம்பந்தத்தை ப்ரத்யக்ஷம் முதலியவை அறியும் என்பது தவறு. எதனால் இந்த விரோதம் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணத்தால் காட்டப்பட்டதோ. எப்படி (அறிவதில்லை) என்றால் கேள்.

துன்பத்தன்மை ஆத்மாவுடன் ஒன்றான தன்மையாக அறியப்படும் என்றால் அது ஆத்மாவை போல அறியப்படாததாகும். செயலில் மட்டுமே அறியப்படும் என்ற தன்மை இருக்க முடியும். அறிபவரில் (செய்பவர்) இல்லை. – 87

அப்படி ஒப்புக்கொண்டாலும் (துன்பம் ப்ரமாணத்தினால்

அறியப்படுவது என்று ) பல கோடி முறை மஹாவாக்கியத்தை கூறினாலும் நீ தோஷத்திலிருந்து தப்ப முடியாது. (மோக்ஷம் என்பது அடையப்பட முடியாது) அதனால் கூறுகிறோம்.

துன்பம் என்பது ப்ரமாணத்தினால் அறியப்படுவது ஆவதால் வேறு உபாயத்தினால் நீக்கம் உண்டு. நெருப்பு நீக்கினால் சுடும் தன்மை நீங்குவது போல என்றால், ஆத்மாவின் நீக்கத்தினால் புத்த மதத்தினை அடைவாய் . (சூன்ய வாதம்). - 88

இப்படி கூறினால்.

மீண்டும், மீண்டும் கேட்பதினால் அது துன்பத்தன்மையை நீக்கும் என்றால் ஒப்புக்கொள்ளும் ப்ரத்யக்ஷம் முதலிய மற்ற ப்ரமாணங்களுக்கு விரோத வாக்கியத்தால் (ஆத்ம வஸ்து) எப்படி கேட்பது ப்ரமாணம் ஆகும். (ப்ரமாணமாக ஏற்கப்படாததால்). --89

ஆனால் **ப்ரசங்க்யானம்** (பலமுறைகேட்பது) என்பது நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களின் பொருளை நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் பலவகை யுக்தியின் விஷயமாக ஆக்கி விசாரிப்பதே அது அந்த விஷயத்தினை விசாரத்தில் வளர்ப்பதின் மூலம் முழுமையான ஆத்ம அனுபவத்தை கொடுக்கும். வெறும் ஒரு நிலையை மட்டும் வளர்ப்பது இல்லை. எப்படி அழுக்கு அடைந்த மூட்டையான பெண்ணின் சரீரத்தில் இவள் காமினி என்ற புத்தி ஒரு மனிதனுக்கு ஒரு பொருளே இல்லாத விஷயத்தில் அந்த எண்ணம் வருகிறதோ, அப்படியே, இப்படி கூறினால் அது தவறு. ஏனென்றால்.

மீண்டும், மீண்டும் விசாரிப்பதால் எந்த ஒரு நிலை (மனதுக்கு கிடைக்கிறதோ) அதுவே பலன். அது இல்லாமல் ஒரு ப்ரமாணத்தை மீண்டும், மீண்டும் ப்ரயோகிப்பதால் அது நமக்கு அதன் விஷயத்தை போதிக்காது. - 90

மீண்டும், மீண்டும் செய்யப்படும் விசாரத்தினால் தீர்மானமான பாவனையினால் துன்பம் நீங்குகின்றது. என்றால், அது ஒரு முழுமையான (இனி மீண்டும் வராத) நீக்கமாக ஆகமுடியாது. பாவனையாலானதால். - 91

அதை மீண்டும் கூறுகிறோம்.

நான் துன்பத்தில் இருக்கிறேன் என்று பல கோடி பிறவிகளினால் உண்டான வாசனை கொஞ்சகால முயற்ச்சியினால் போய் விடும் என்றால், கொஞ்சகால முயற்சியின் (நான் ப்ரம்மம் என்ற) புத்தி நிலைத்திருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம். - 92

ஆனால் சாஸ்த்ரத்தினால் (அவன் மீண்டும் சம்சாரத்தில் வருவதில்லை) அந்த பாவனையை நிலையாக ஏற்றால், அப்படி முடியாது. ஒரு பொருளை இருப்பது, இருப்பது போல் காட்டுவதே (போதிப்பதே) சாஸ்த்ரத்தின் செயலானதால், அது பொருளின் மேல் ஒரு புது சக்தியை புகுத்துவது இல்லை. உலகத்திலும் பொதுவானது (பிரசித்தமானது).

பாவனையால் உண்டான பானையும், கர்மத்தினால் (செயலினால்) உண்டான பலனையும் நிலையானது என்று நினைக்கக் கூடாது. எப்படி திராவிட தேசத்தினருடன் உள்ள நட்போ அப்படி. - 93

ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களினால் துன்பத்தன்மை முதலியவை அறியப்பட்டாலும், நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்களினால் உண்டான எண்ண அலைகளே பலசாலியான ப்ரமாணம் என்பது திண்ணம். ஏனென்றால், அவை தவறான ப்ரமாணத்தன்மையை அடையாத வாக்கியங்களில் உள்ளதால் ஆத்மாவும் துன்பமற்றது என்பது தானே முடிவானதால், ப்ரத்யக்ஷம் முதலியவை தோஷம் உடையதாலும் அது பாவனையினால் உண்டானதாலும் பாவனை ஒரு மனிதனின் கற்பனையிலேயே நிலை பெற்றிருப்பதாலும் அவை வேத வாக்கியத்தினை விட பலம் குன்றியதே.

தானே முடிவான துன்பமற்ற ஆத்மாவை விடுத்து, வெளி விஷயங்களை கிரஹிக்கும் ப்ரத்யக்ஷம் முதலியவைகளினால் முடிவான துன்பத்தன்மையை யார் ஒப்புக்கொள்வார்கள். - 94

வேதத்திலும் இதுவே கூறப்பட்டுள்ளது.

ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களை நிராகரித்து தன்னுடைய ஆத்மாவை பற்றிய அறிவை அடைய வேத வாக்கியம் வெளி விஷயங்களை போதிப்பதிலேயே புலன்கள் ப்ரவ்ருத்திக்கின்றது என்று கூறுகிறது. - 95

ஒப்புக்கொண்டு (ப்ரத்யக்ஷத்தினால் உண்டான துன்பத்தன்மையை, வேத வாக்கியத்தினால் உன்டான துன்பமற்றதன்மை நிராகரிக்கிறது ) கூறப்பட்டது, உண்மையில் ஒரு ப்ரமாணம் இருக்கும் போது மற்றொன்று அதை நிராகரிக்காது என்பது பலமுறை கூறப்பட்டது. எங்கெல்லாம் வேதத்திற்கும், ப்ரத்யக்ஷம் முதலியவைக்கும் விரோதம் தோன்றுகின்றதோ அங்கெல்லாம் அது மனிதனின் தவறால் உண்டானதே, உண்மையில் அது இல்லை. அதனால் கூறுகிறோம்.

சாஸ்த்திரம், ப்ரத்யக்ஷம் முதலியதால் உண்டான அறிவுக்கு விரோதமான அறிவை உண்டாக்கினால் , அங்கு ப்ரத்யக்ஷம் முதலியவை முக்கியமில்லாததாகவும், சாஸ்த்ரத்தை முக்கியமானதாகவும் அறிவுள்ளவர்கள் கூறுவர். - 96

கூறப்பட்ட பொருளினை புரிந்து கொள்ள வேண்டி இந்த உதாரணம்.

இவன் அக்னியை ஒழுங்காக படிக்கிறான் , மேடை சத்தமான சிரித்தது என்று எப்படி கூறப்படுகின்றதோ (அக்னி- அக்னி பாகத்தை படிப்பவனை, மேடை - அதில் இருப்பவரை) அப்படியே நான் என்ற எண்ணம் குறிக்கின்றது. அது ஜடப்பொருளாக இருந்தும். - 97

மீண்டும் ஏன் ஆத்மாவை கூறுவதில்லை. அதை இப்படி கற்பனை செய்வதினால் என்ன ப்ரயோஜனம் என்றால் , கூறுகிறோம்.

நீ, நான் என்ற சொற்களினாலேயே குறிக்கப்படுகின்றது. அதை விடுத்து வேறு வார்த்தை இல்லை ஆத்மாவை குறிக்க. நீ முதலியவைகளும் முக்கியமான பொருளாக இல்லாமலே (கௌணமாக) குறிப்பினால்

குறிக்கப்படுகின்றது. - 98

மீண்டும் என்ன காரணத்தினால் நான் என்பதும் குறிப்பினாலேயே இருக்கிறது, நேரடியாக இல்லாமல் என்றால் , எல்லா வகையான கற்பனை காரணங்கள் இல்லாத இயல்பாக ஆத்மா இருப்பதால் அதனால் கூறுகிறோம்.

எப்படி ஆகாயத்தில் புகை, மேகம் முதலியவைகளை அறிவில்லாதவர்கள் கற்பனை செய்வார்களோ அப்படியே தன்னுடைய ஆத்மாவிலும் சம்சாரத்தை (பிறப்பிறப்பு ப்ரவ்ருத்திகளை) கற்பனை செய்கிறார்கள். - 99

ஆனால், எல்லா வகையான கற்பனைக்கும் இடமில்லாத ஒரு நிலையான ஆத்மாவில் நான் என்ற எண்ணத்திற்கு மட்டும் என்ன விதிவிலக்கு (தனித்தன்மை) எதனால் மற்ற எண்ணங்களை விடுத்து நான் என்ற எண்ணத்தினாலேயே ஆத்மா குறிக்கப்படுகின்றது என்றால் கூறுகிறோம்.

நான் என்ற எண்ணம் ஆத்ம சைதன்யத்தினை போல இருப்பதாலும் மற்ற எல்லா எண்ணங்களையும் அது சாராததினாலும் முன் கூறப்பட்ட காரணங்களினாலும் (2-56) ஆத்மா நான் என்றே விளக்கப்படுகின்றது. - 100

இது என்ற எண்ணத்தினால் ஆத்மாவை நாம் குறிப்பிட்டால் ஆத்மா பானை முதலியது போல அனாத்மாவாக ஆகும். அதனால் ஆத்மாவை பிரிவற்றதாக கூறும் வேதவாக்கியம் பொருள் அற்றதாக ஆகும். - 101

முன் கூறப்பட்டது போல

இப்படி அறிபவராகவும், உடல் முதலியதிலிருந்து வேறான நான் என்ற எண்ணத்தினாலேயே முன்கூறப்பட்ட சிறிய குணத்துடன் கூடி ஆத்மா குறிக்கப்படுகின்றது. வேறு வகையான வார்த்தையினால் நேரடியாக கூற இயலாததால். - 102

வேறு வகையான வார்த்தையினால் நேரடியாக கூற இயலாததால் என்று

கூறியதற்கு என்ன காரணம் என்றால்.

ஒரு சொல்லினால் நேரடியாக கூறுவதற்கு சம்பந்தம், குணம் (தன்மை) , செயல், வகை மற்றும் பிரசித்தி ஆகியவைகளில் ஒன்றாக இருக்க வேண்டும். இவைகளில் ஒன்றாக ஆத்மா இல்லாததால் இவைகளால் (நேரடியாக) கூறப்படவில்லை. – 103

இப்படி சொல்லில் குறிப்பு – குறிக்கப்படும் பொருள் என்ற சம்பந்தத்தை ஆத்மாவில் ஒப்புக் கொள்ளவில்லை என்றால், எப்படி நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்ற சொல்லினால் சரியான அறிவு உண்டாகும் என்றால், கூறுகிறோம்.

நேரடியாக அறிந்து கொள்ள எந்த வழியும் இல்லை என்ற நிலையில் அதை குணங்கள் கொண்டு (தன்மையை) குறியினாலேயே பொய்யான முறைகளை கொண்டு உண்மையை புரிந்து கொள்கிறோம். – 104

எப்படி சொல் தன்னுடைய பொருளுடன் எந்த ஒரு தொடர்பு இல்லாமலேயே அதன் பொருளை குறிக்கும் அறிவை கொடுக்கிறது என்றால். கேள். எப்படி தொடர்பு இல்லாமலேயே பொருளை அறியாமையை விலக்குதலின் மூலம் தெரிவிக்கிறது என்று கூறுகிறோம்.

எப்படி தூக்கத்தில் இருப்பவர் தன்னுடைய பெயரை கேட்டதுமே எழுந்து கொள்வது உலகத்தில் பார்க்கப்படுகின்றதோ , அப்படியே ஆத்மாவிலும் அறிவு உண்டாகிறது. (மஹா வாக்கியத்தை கேட்பதினால்) – 105

பெயருடன் எந்த தொடர்பும் உடலுடன் தூக்கத்திலிருந்து எழுகின்றவனுக்கு இல்லாமலிருந்தும் எப்படி அறிகின்றாரோ, அதை அப்படியே நீ அது முதலிய இடத்திலும் . – 106

இன்னும்

ஆகாயம் நீலம் இல்லை என்ற அறிவும், அறியாமையும் எப்படி அதை

தீண்டுவதில்லையோ, அப்படியே, ஆத்மாவிலும் செயல்புரிபவர், புரிபவர் இல்லை போன்ற எதிரான அறிவும் ஒன்றும் செய்யாது. – 107

பொய்யான முறைகளை கொண்டு உண்மையின் அறிவு உண்டாகின்றது என்பதை கேட்டு பெறும் அதிசயத்தில் ஆழ்ந்த ஒருவர் கேட்கிறார்.

உண்மையான பொருளை நிச்சயிக்க ஒரு பொய்யான வழி என்பது இந்த உலகத்தில் காணப்படுவதில்லை, எப்படி உண்மையான நெருப்பை நீர் ஆவியை கொண்டு அறிவது போன்று. – 108

இப்வாறு எவர் கேள்வி கேட்டாலும் அவருக்கு பானை முதலியவைகளை கொண்டு புரிய வைக்க வேண்டும். உண்மை, பொய் இரண்டும் ஒரே இடத்தில் இருக்க முடியாத நிலையிலும் இவை விஷயமாகின்றது. – 109

இப்படி தவறான கேள்வியை களைந்து, நடந்து கொண்டிருக்கும் விஷயத்தை கூறுகிறோம்.

நடக்கும் விஷயம் என்ன வென்றால் குறிப்பிட பட முடியாத விஷயத்தில் எப்படி குறிக்கும் வேத வாக்கியம் அறியாமையை அழித்து அறிவை உண்டு செய்கிறது என்பது அங்கு வேறு காரணத்தை கூறுகிறோம்.

சக்தியற்றதான அறியாமை வெறும் தோற்றம் மட்டுமே. இதன் நீக்கம் சிறிய நிமித்தத்தினாலேயே உண்டாகும். எப்படி மூக்கின் மேல் இருக்கும் இலந்தை பழமோ. – 110

உண்டாவதும். அழிவதுமான இயல்பு இல்லாத அறிவு மட்டுமே இயல்பான ஆத்மாவில் அறியாமை இருப்பது என்பது இயலாததாகும். என்றால், இல்லை. அறியாமையின் பிரபலமே (அனுபவமே) நிரூபணமாகும். ஆந்தைக்கு இரவு பகலாவது போல் என்ற இதை கூறுகிறோம்.

விநோதம் என்ன வென்றால் அறியாமை மற்ற எல்லாவற்றையும் விட அதிகமான உண்மை போல காட்சி அளிக்கின்றது. ப்ரமாணமான ஆத்மாவை அறியாமையை போல் காட்டி தானே அழிவற்றதாக ஒளிர்கின்றது. – 111

எதனால் அறியாமை ப்ரபலமாக இருப்பதே அதன் உண்மையை அறியும் பொருட்டு விசாரிப்பதில், அது எந்த விதத்திலும் இருப்பது முடியாது. அதனால் கூறுகின்றோம்.

செயல் , செயல்பாடு முதலியவை இல்லாமல் அறிவே எதன் உண்மை இயல்பாக இருக்கிறதோ, அந்த ஆத்மாவில், எந்த காரணத்தினால் அறியாமையின் இருப்பு இருக்க முடியும். – 112

அப்படிப்பட்ட இந்த உண்டாவது, அழிவது இல்லாத இயல்பை உடைய ஆத்மாவாகவே இருந்தும், விசாரமில்லாமல் எல்லோரும் அறியும் அறியாமையினால் மூடப்பட்டதாக இருந்து இல்லாதது போல் காட்சியளிக்கின்றது. எதனாலோ அதனால்.

அனுமானத்தினால் இந்த அறியாமை இருத்தல் என்பது இல்லாமல், இல்லாமையையே சார்ந்து இருப்பது, அதை நீக்கும் பொருட்டு அதன் இயல்பை அறிய விருப்பம் உள்ளவருக்கு வேத வாக்கியத்தினாலேயே உண்டாகும். – 113

இருத்தல் போல (உடம்பு, புலன் முதலிய) இல்லாமையின் (உடல் முதலியதிலிருந்து வேறாக) மூலமும் நீக்கம் (அறியாமையின் ) அனுமானத்தினால் ஏன் ஆகக்கூடாது என்றால், கேள்.

உடல் முதலிய இருத்தல் உள்ளதிலிருந்து வேறான இருத்தல் உள்ள ஆத்மா, எப்படி பிரித்து காணப்பட முடியாததோ அப்படியே இல்லாமையின் அறிவு உண்டாகும். என்றால் அதிலிருந்து நிவ்ருத்தி ஆவதில்லை. – 114

எதனால் அனுமானம் எல்லா வகையான செயல், மற்றும் அதன் பலன்களால் தீண்டப்படாத ஆத்ம ரூபமான மோக்ஷத்தினை தர இயலாதோ

அதனால்

மற்ற ப்ரமாணங்களால் உண்டான தவறான அறிவெனும் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இந்த மனிதனை (ஜீவனை) உடல் மற்றும் புலன்களின் உள்ள இயல்போ அல்லது அது அல்லாத இயல்போ நீ இல்லை என்று கூறும் வேதவாக்கியத்தினாலேயே முழிப்பு உண்டாகிறது. – 115

இங்கு இப்படி கூறப்பட்டது (அறியாமையை பற்றி) உண்டாவதும் அழிவதும் ஆகிய இயல்பாக ஆத்மா இல்லாததால், அதனால் அறியாமை என்பது இருக்க முடியாது என்றால் அப்படி இல்லை. ஏனென்றால் கூறுகிறோம்.

அறியாமையின் இருப்பு எப்படி இருக்க முடியும் என்று கேள்வி அறிவு அடைவதற்கு முன்பு கேட்க முடியாது. காரணம் இல்லாததால் (அறியாமை அனுபவமாகின்றபடியால்) அறிவு அடைந்த பின்பும் கேட்க முடியாது மூன்று காலங்களிலும் அதன் இருப்பு இல்லாததால். – 116

ஏனென்றால் <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> முதலான வாக்கியங்கள் ஆத்மாவின் அறியாமையை முழுமையாக நீக்கிவிடுவதால், அதனால்

நீ அது போன்ற வாக்கியங்களினால் மட்டுமே நிச்சயமாக உண்டாவதால் அதை விட்டு மற்ற ப்ரமாணங்களினால் பலமுறை செய்வதால் அறிய விரும்புபவர் கண்களினால் அவையை அறிய விரும்புவர்கள் ஆவார்கள். – 117

இப்படி சந்தேகமில்லாமல் <u>நான் ப்ரம்மம்</u> என்ற அறிவை <u>நீ அதுவாக இருக்கிறாய்</u> போன்ற வாக்கியங்கள் உண்டாக்கினாலும், அப்படி அது அடைவிப்பதில்லை என்று கூறினால், வேறு எந்த விதத்திலும் தீர்மானமாக முடியாது என்பதை கூறுகின்றோம்.

உண்மை அறிவை நீ அது ஆகிய வாக்கியத்தினால் அடைந்தாலும் அதை உண்மையை உணர்த்துவதாக ஏற்காவிட்டால் மற்ற இடங்களிலும் (வேதத்தின்) நம்பிக்கை உண்டாவது இயலாது. அதுவும் வாக்கியமாக

இருப்பதால் . - 118

நிரூபிக்கப்பட்ட வாக்கியங்களின் பொருளை விடுத்து மற்ற பொருளை அதற்கு கற்பனை செய்வது சரியாக இருக்காது. ஏனென்றால்.

வாக்கியத்தினால் பொருள் விளங்கவில்லை என்றால் அதில் உள்ள சொற்களுக்கு வேறு பொருள் எடுப்பது சரியாகும். ஆனால், ப்ரமாணத்தினால் மற்ற கட்டளை முதலியவை இல்லை என்பது தீர்மானமாக புரிகின்றது. - 119

கூறப்பட்ட பொருள் கூறப்பட்ட யுக்திகளினால் அறியப்படுவதிலலை என்பதில்லை, என்ன யுக்தி அது என்றால் , கூறுகிறோம்.

பெயர் முதலியவைகளை நீக்கி நான் நீ என்று அபிமானம் இல்லாமல் இது அது என்று தெரியும் விஷயங்களில் பற்றற்று **க்ஷமம்** முதலியவைகளை கொண்டு. - 120

அன்னமயம் முதலிய ஐந்து மறைப்புகளையும் நீக்கி <u>நான் ப்ரம்மம்</u> என்று வாக்கியத்தின் பொருளை உணர்ந்தால், உபாசனை முதலியவைகளால் ஒரு பயனும் இல்லை. - 121

இதை இப்படி ஒப்புக்கொள்ளவில்லை என்றால், சரியான அறிவை கொடுக்கும் வாக்கியங்களும் தவறான அறிவை தருவதாக ஆகிவிடும். அதை கூறுகிறோம்.

எந்த பொருளை உணர்த்த வாக்கியம் உரைக்கப்பட்டதோ, அதை கேட்டும் உண்மை அறிவை உண்டாக்கவில்லை என்றால் அந்த வாக்கியம் என்ன காரணத்தினால் ப்ரமாணத்தன்மையை அடையும். - 122

அதனால், இப்படி நினைத்தால்

பலமுறை செய்வதினால் அறிவு உண்டாகும் என்றால் சொற்கள் தன்னுடைய பொருளை உணர்த்துவதாக இருக்க முடியாது. சொல்,

புலன்களுக்கு அப்பாற்பட்டதான பொருளை உணர்த்தும் பலமுறை கேட்பது என்பது அதன் அனுபவத்தை . – 123

யுக்தி மற்றும் சொல் பலமுறை செய்வது (கேட்பது) ஆகிய ப்ரசங்கியானத்தால் எப்படியோ, அப்படியே அதன் பொருள் உணர்த்தும் என்பது சம்பவம் இல்லை. ஏனென்றால்.

யுக்தியினாலும், சொல்லினாலும் முன்பே சரியான அறிவை உண்டு செய்யவில்லையென்றால் மீண்டும், மீண்டும் பலமுறை செய்வது என்ன பலனை உண்டாக்கும் . – 124

இப்படி இருந்தும் உன்னால் பலமுறை செய்வதினை தவிர வேறு எதிலும் ப்ரமாண புத்தியை அடைய முடியவில்லை. என்றால், கேட்பது முதலியவைகளை பலமுறை செய்வது (ப்ரசங்க்யானம்) என்பதில் நாங்கள் சேர்த்து விடுவோம். எப்படி

பலமுறை செய்வது என்ற இந்த செயலை நாம் ஆத்மாவை பற்றி கூறும் இடத்தில் ஏற்போம். கொஞ்சம் கேட்பது, பாதி கேட்பது என்பது பலமுறை கேட்பதால் சரியாக விளங்கும். – 125

ஆனால், பலமுறை செய்வது என்பதனை ஏற்காவிட்டால் பரமஹம்ச சன்யாசிகளும் , பௌத்தம் முதலியவர்களின் வழி நடப்பவர்கள் போல சாஸ்த்ர விரோதி ஆகிவிடுவார்கள்.

அதனால், அவர்கள் அடைய வேண்டிய மோக்ஷத்தை அடையாமல் விழுந்தவர்கள் ஆகிறார்கள். எல்லா கர்மங்களிலிருந்தும் விடுதலை என்பது அடைய முடியாது. என்றால், கூறுகிறோம்.

நீ என்பதின் பொருள் விளங்க விசாரத்தை ஏற்பதால் இங்கு பலமுறை என்ற கட்டளை (ப்ராசங்க்யான கட்டளை) இல்லாமல் எந்த தோஷங்கள் உண்டாகுமோ. அவையும் அணுகாது. எந்த காரணமும் இன்மையால் .– 126

## அத்யாயம் - 4

**ஹரிஹரபுத்ரம் ஷாஸ்தாரம் ஹரிஹரபுத்ரோஹம் நௌமி |**
**யஸ்மாத் த்வம் மம குலதேவம் தஸ்மாததிகாரி ரக்ஷணே ||**

ஹரிஹரனின் புத்திரனான சாஸ்தாவை ஹரிஹரனின் மகனான நான் வணங்குகிறேன். எதனால் நீ என் குலதெய்வமோ, அதனால் என்னை காப்பதில் உனக்கே அதிகாரம்.

முன்பு உள்ள பகுதியில் எந்த விஷயத்தை விரிவாகவும், தெளிவாகவும் கூறினோமோ, அதையே இப்பொழுது சுருக்கமாக சுலபமாக அறிய வேண்டி கூறுகிறோம். --1

சுருக்கமாகவும், விரிவாகவும் கடை மற்றும் முதல் தரமான புத்தியுள்ள அதிகாரிக்கு புரிய வேண்டி விஷயத்தை கூறினால் அது தெளிவாக மனதில் நிற்கும் (ப்ரகாசிக்கும்) --2

ஆத்மா, ஆத்மா அல்லாதது என்று உலகத்தில் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களால் நிரூபிக்கப்படுகின்றது. அதில் ஆத்மா அல்லாதது ஆத்மா மூலமாகவே உண்டாகிறது. --3

(பானை முதலியவைகளில்) ஆத்மா அல்லாதது என்ற அறிவு தானே உண்டாகின்றது. அது போலவே ஆத்மாவும் தானே புலப்படுகின்றது . (உடல் முதலியவைகளில்) இவைகள் சந்தேகத்திற்கு இடமாகிறது. --4

அவற்றின் விஷேசமான தர்மங்களை (தன்மைகளை) அறிந்து கொண்டு ஆத்மா அல்லாததிலிருந்து பிரித்து அறிய வேண்டும். எப்படி புகையைக் கொண்டு நெருப்பை அனுமானத்தினால் அறிகிறோமோ.

இது என்றே வெளிவிஷயங்களில் அறிவு உண்டாகிறது. நான் என்றே அறிபவரிடத்திலும் உடம்பு முதலியவைகளில் இரண்டு வகையாக

தோன்றுவதால் ஒருவன் சந்தேகத்திற்கு உள்ளாகிறான் . --6

வேறு எந்த வகையான ஆத்மாவையும், ஆத்மா அல்லாததையும், குதிரை, எருமை முதலியதை பிரிப்பது போல பிரித்து அறிய முடியும் என்றால் கூறுகிறோம்.

இந்த வகையை நாம் முன்பே கூறியிருப்பது போல (2-11-15, 3-10-43) ஆத்மாவிலிருந்து ஆத்மா அல்லாத இது என்பதை பிரித்து அறிந்து நான் என்று எது ஒளிர்கின்றதோ அதை அறிய வேண்டும். --7

நீ அதுவாக இருக்கிறாய் ஆகிய வாக்கியத்தால் இருத்தல், இல்லாமை இரண்டையும் பார்க்கும் அதை, உள்-புறம் என்ற பிரிவு இல்லாத , தன்னிலிருந்து வேறல்லாத ஆத்மாவை அறிய வேண்டும். --8

அப்படி யென்றால், எந்த கிரமமாக வேத வாக்கியத்தின் பொருளை அறிய வேண்டும் என்று கூறுங்கள் என்றால் கூறுகிறோம். நேர்மறையாக எதிர்மறையாக என்று.

இது என்ற எல்லாவற்றையும் விட்டு விட்டதால் நான் என்பது எதுவும் இல்லை என்று எண்ணுகிறான். ஏனென்றால் நான் அந்த ஆத்மாவை அறியவில்லை. ஆத்மா அல்லாததிலிருந்து பிரித்து பார்த்து. --9

உடல் முதல் புத்தி வரை எல்லாம் ஆத்மா அல்லாதது என்று, அனுமானம் ஆகிய ப்ரமாணத்தினால், தீர்மானம் என்ன என்று அறிய ஆசையுள்ளவர்களின் ஆசை தீரவில்லை என்றால் கேள்.

பிரித்து அறிய ஆசையுள்ளவர் ஆத்மாவை, ஆத்மா அல்லாததிலிருந்து பிரிக்க முடியாமல் சிதறிய மனதுடையவர்களாக (நிலையில்லாத) ஆகிறார்கள். பேய் பிடித்தவர்களின் மனதை போல. --10

பிரிவற்றதான அறிவு மயமான ஆத்மா நம்முடைய இயல்பானதால் எப்பொழுதும் அருகில் இருப்பதால் அதை அறிய ஆசையுள்ளவன் ஏன்

இப்படி அதை அறிவதில்லை என்றால், ஏனென்றால்

எதை (உடல் முதலிய) முன்பு ஆத்மாவென்று பார்த்தார்களோ, பின்பு அதையே ஆத்மா அல்ல என்று எதனால் பார்த்தார்களோ, அந்த கருவிகளாலேயே (அறிவு கருவிகள்) பார்ப்பவரையும் பார்க்க ஆசைப்படுவதால். --11

என்ன காரணத்தால் வெளியில் இருக்கும் (ஆத்மாவிலிருந்து) சப்தம் முதலியவைகளை விஷயமாக அறியும் இந்திரியங்களால் ஆத்மாவையும், ஆத்மா அல்லாததையும் பார்ப்பது போல பார்ப்பதிலலை என்றால், கூறுகிறோம்.

கண்கள் எப்படி அதனுடைய விஷயமில்லாத காரணத்தால் சப்தத்தை பார்ப்பதில்லையோ, அதுபோலவே ஐந்து பூதத்தால் உண்டான அந்தக்கரணமும் ஆத்மாவை பார்ப்பதில்லை. --12

ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களின் இயல்பை அனுசரித்து அதனால் ஆத்மாவை புலன்கள் மூலம் பார்க்க முடியாது என்பது கூறப்பட்டது. இப்பொழுது பார்க்க விரும்பும் விஷயத்தின் இயல்பை மனதில் கொண்டு அதன் இயலாத தன்மையைக் கூறுகிறோம்.

புத்தியின் மாற்றமான உண்டாகி அழியும் தன்மையுடையதற்கு எப்பொழுதும் சாக்ஷியாக இருப்பதால் ஆத்மா அதனினும் உள்ளிருப்பதால் ஆத்மாவை அது அறிவதில்லை. --13

**விவேகஞானம்** என்பது என்ன, அது ஆத்மாவில் உண்டாவதா அல்லது ஆத்மா அல்லாததிலா இல்லை இரண்டிலும் வேறானதிலா, ஆத்மாவில் என்றால் ஆத்மாவின் தன்மை (தன்மையற்ற) அழிவடையும், ஆத்மா அல்லாததினை சார்ந்து இருப்பதால். ஆத்மா அல்லாததில் ஒப்புக்கொண்டால், அதுவும் சைத்தன்யமாக இல்லாததால் அறிவு சம்பந்தம் இல்லாததால் என்றால் கூறுகிறோம். நெருப்பும் - சுடும் தன்மையும் என்று முன்பு கூறிய பரிகாரத்தினால்.

இந்த அறிவும் உண்டாகும் எது வேராக தன்னை நினைத்துக்கொண்டதோ அந்த அறிவு புத்தியை அழிக்கும் எப்படி வாழைமரத்தை அதன் தார்(குலை) அழிக்கின்றதோ. --14

தத்துவமில்லாததால் தத்துவத்தினை பார்க்கும் இது.

அனுமானம் என்ற விளக்கினால் (வெளிச்சத்தில்) எல்லா ஆத்மா அல்லாததையும் விடுத்து சம்சாரத்தினையே சார்ந்து இருக்கும் அதை புத்தியால் அழிக்க விரும்புபவர் (மூடரே). --15

இந்த நேர்- எதிர்மறையான விசாரத்தினால் உண்டான அறிவு, ஆத்மா - ஆத்மா இல்லா இரண்டையும் பிரிக்கும் தன்மையானது, ஆத்மா அல்லாததில் நிலைத்திருப்பது, தூணில் உண்டாகும் சந்தேகத்தை போன்று என்று அறிய வேண்டும். உள்ளபடியே இல்லாத இயல்புடையதால், கானல் நீரை பற்றிய அறிவை போன்றது. அதனால் கூறுகிறோம்.

சம்சாரத்திற்கு காரணமான இந்த அறியாமை, அதனுடைய அறிவால் (அறிவதால்) முக்தியை அடைய ஆசையுள்ளவர், மரணத்தை விலக்க நினைக்கும் முயல், தன் கண்ணை மூடிக்கொள்வது போலவே ஆகும். --76

இந்த பொருளை திடமாக்க வேதத்தின் உதாரணம்

இந்த கருத்தையே முன்கொண்டு வேதமும் அழகாக உதாஹரித்துள்ளது. (**யத் சக்ஷுஷேதி** ) எது கண்ணினால் காண முடியாதோ, (**ந த்ருஷ்டேதி** ) பார்வையினை பார்ப்பவரை பார்க்க முடியாது. என்று தெளிவாக கூறியுள்ளது. --17

இப்படியாக (நேர்மறை - எதிர்மறையாக) புத்தி வரை எவர் நான் இல்லை என்று பார்த்து. நான் யார் என்று அறிய விரும்புகின்றாரோ அவருக்கு வேதம் கூறுகிறது, நீ அதுவாக இருக்கின்றாய் என்று எல்லா ப்ரமாணத்தையும் நீக்கி கூறுகின்றது . --18

இப்படியாக முன் பகுதிகளின் பொருளை சுருக்கமாக கூறினோம். வேதத்தின் பொருளை நிச்சயிக்கும் இந்த யுக்தியும் சாஸ்த்ரம், ஆசாரியர்களின் அருளால் கிடைத்ததாக இருந்தாலும் சாஸ்திர ஆசார்யர்களின் அருளை எதிர்பார்ப்பதில்லை. எதனையும் சாராத தானே ஒளிரும் இயல்புடையதால். சில நம்பிக்கையுள்ளவர்கள் சாஸ்த்ர ஆசார்யர்களின் சம்மதம் இல்லாமல் ஏற்பதில்லை. அவர்களின் நிச்சயித்திற்காக ஒப்புக்கொள்ளும் ப்ரமாணத்தின் உதாரணம்.

எல்லாம் உயிர்களுக்கும் கருணைகாட்டும் **ஸ்ரீ பகவத்பாதரும்** இதையே கூறியுள்ளார். எதை நான் இங்கு விளக்கி கூறினேனோ. --19

உபதேசம் பரமாத்மாவுக்கா, இல்லை பரமாத்மா அல்லாதவருக்கா, இல்லை வேரானவருக்கா, பரமாத்மாவுக்கு என்றால் அவர் உபதேசம் இல்லாமல் முன்பே முக்தி அடைந்தவர் ஆகியதால் உபதேசம் வீணாகிறது. பரமாத்மா அல்லாதவருகளுக்கு என்றால் அவர்களும் தானே சம்சாரமே இயல்பானவர்களாக இருப்பதால் உபதேசம் வீணாகிறது. இப்படி இரண்டு வகையிலும் தோஷம் உள்ளதால் கூறுகின்றோம்.

பிரித்து பார்க்காமல் இருக்கும் அவனுக்கு வேதம் கூறுகிறது என்றால் அந்த அறிவு அடையப்படும் என்று இந்த பக்ஷத்தை கொண்டு மற்ற எதிர்வாதங்களை நீக்குகின்றார். --20

அறியாமையால் பிரிவுற்ற ஜீவனிலிருந்து ஆத்மாவை பிரித்து பார்ப்பவருக்கு வேதம் நீ அதுவாக இருக்கிறாய் என்று உபதேசம் செய்கின்றது. அறியாமையால் தன்னை ஆத்மாவிலிருந்து வேறாக நினைப்பவருக்கே நீ அதுவாக இருக்கிறாய் என்று உபதேசிக்கப்பட்டது.

நீ நான் என்ற சொற்களின் உண்மை பொருளை விசாரித்தரிந்தவருக்கே நீ அதுவாக இருக்கிறாய் என்று உபதேசம் செய்கின்றது. அறியாமையால் தன்னை ஆத்மாவிலிருந்து வேறாக நினைப்பவருக்கே நீ அதுவாக இருக்கிறாய் என்று உபதேசிக்கப்பட்டது.

நீ, நான் என்ற சொற்களின் உண்மை பொருளை விசாரித்தரிந்தவருக்கே நீ அதுவாக இருக்கிறாய் போன்ற வாக்கியங்கள் உதவியாக இருக்கும் அதை அறியாதவருக்கு செவிடன் காதில் சங்கு ஊதியது போலவே ஆகும். --21

அந்த நீ, நான் என் ற பிரிவை தெளிவாக அறிவதற்கு என்ன யுக்தி உதவியாக இருக்கும் என்றால் கேள்.

நேர் - எதிர்மறையான சொல்லையும், அதன் பொருளையும் பற்றி செய்யும் விசாரமே நான் என்பதையும், இது முதலியதிலிருந்து பிரித்தறிய யுக்தி ஆகும். --22

அவை எப்படிப்பட்ட யுக்தி என்றால் கூறுகிறோம்.

தூக்கத்தில் இருந்து விழித்தவன் நான் தூக்கத்தில் என்னை விட வேறாக வேறு எதையும் அனுபவிக்கவில்லை என்று கூறினாலும் அறிபவரை நிராகரிக்கவில்லை ஆனால், அறிபடு பொருள், அறிவு, அறியும் கருவி (வழி) இதையே நிராகரிக்கிறார். --23

இப்படி சொல்லின் பொருளை வேதத்திலும் உலகத்திலும் அறியப்படும் வழிகளில் அறிந்து கொண்ட பிறகு வேதம் நீ அதுவாக இருக்கிறாய் என்று கூறுகின்றது. எல்லா அறியாமையும் விலகவே. --24

வாக்கியத்தில் நீ என்று எந்த பொருளை குறியினால் காட்டப்படுகிறதோ, அதை கூறுகிறோம்.

நான் என்ற சொல்லின் பொருளான தன்னுடைய ப்ரகாசமான ஆத்மாவே நீ என்று கூறுப்பட்டது , எதை உணர்ந்தால் மோக்ஷம் கிடைக்கிறதோ. --25

நேர் - எதிர்மறையாக வேறு ஒரு உதாரணம் எப்படி என்றால்.

வெட்டி துண்டிக்கப்பட்ட கரத்தில் நான் என்ற எந்த பெருமையும் (ஏற்றுதலும்) இருப்பதில்லை. அதுபோலவே மற்ற எல்லா வகையான எற்றப்பட்ட (ஏற்றி பார்க்கப்பட்ட ) பொருட்களுக்கும். --26

ஏற்றிப்பார்க்கப்பட்ட எல்லாமே அழகாக ஒழுங்கு படுத்தப்பட்டது போல் அறியாமையினால் ஏற்றிப்பார்க்கப்பட்டதும், அறியும் ஆத்மாவில் இவை எல்லாம் ஜடமானதே ஆகும். --27

அதனால் துண்டிக்கப்பட்ட கரத்தை போலவே மற்ற எல்லா ஏற்றப்பட்ட பொருளும், எவர் இதை ஆத்மா அல்லாததாக அறிகின்றாரோ அவர் இதிலிருந்து முக்தியை அடைகிறார். --28

அறிபவர் என்றே ஆத்மாவின் இயல்பை நாம் அறிய வேண்டும். மற்ற எல்லாவற்றையும் நீக்கி நான் என்ற அஹங்காரத்தையும் துண்டிக்கப்பட்ட கரத்தை போன்றது என நினைக்க வேண்டும். --29

அஹங்காரம் பார்க்கப்படுவதால் பானை முதலியவை போல நான் ஆக முடியாது. அப்படியே, மற்ற எல்லா எண்ண அலைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். தோஷங்கள் என்று. ஆத்மாவில் எந்த குணமும் இல்லாததால். --30

எல்லா யுக்திகளையும் இங்கு விளக்கி உள்ளோம்.

நான் எப்பொழுதும் ப்ரம்மமாகவே இருக்கிறேன் என்ற அறிவும் வேத வாக்கயித்தினாலேயே உண்டாகும். வேறு வழியினால் அல்ல. வாக்கியத்தின் பொருளும் நீ, நான் என்ற சொற்களின் ஞாபக (நினைவின்) மூலமாக தான் உண்டாகும். --31

நேர்- எதிர்மறையாக விசாரிப்பதின் மூலம் சொல்லின் பொருள் சீக்கிரமாக புரிக்னறது. இப்படியாக துன்பமும், செயலும் இல்லா ஆத்மாவின் அறிவு உண்டாகிறது. --32

நீ அந்த சத் ப்ரம்மமாகவே இருக்கிறாய் என்பதான வாக்கியங்களும், ஆத்மாவை மிகவும் தெளிவான சரியான அறிவை அடையும் கருவியாகின்றது (பிரமா). எப்படி பத்தாவதாக நீ இருக்கிறாய் என்ற வாக்கியத்தினால் (பத்தாவதானவர்) என்ற அறிவு உண்டாகிறதோ. --33

தன்னை தேடும் அவனுக்கு ஒரு உதாரணம்.

நாங்கள் ஒன்பது பேர் என்ற தவறான அறிவாலேயே பத்தாவது தான் என்பது தெரியாமல் அதை அறிய வேண்டி ஆசைப்படுகிறான். எப்படி தன்னை அறிய விரும்பி அதற்கு முயற்சி செய்பவர் போல. --34

அறியாமையால் மூடப்பட்ட கண்களின் காரணத்தினால் ஆசைகளினால் அலைக்கழிக்கப்படும் அறிவானது, பார்க்கும் ஆத்மாவை அனாத்மாவிலிருந்து பிரித்து பார்க்க அறிவதில்லை. எப்படி பத்தாவது மனிதன் தானே என்பதை அறியாததை போல. --35

இப்படி, அறியாமை என்ற திரையால் மூடப்பட்ட கண்களிலிருந்து எப்படி விழிப்பு (திரைவிலகல்) என்றால் கூறுகிறோம்.

எப்படி கனவில் தூக்கத்திலிருந்து விழிப்பு உண்டாகின்றதோ. விழித்தவுடன் செய்பவர், செயல், கருவி ஆகிய பிரிவுகளை அறிவதில்லையோ. --36

அதுபோலவே அறியாமையையுடைய புருஷனும் வேதாந்த வாக்கியத்தினால் உண்டான அறிவினால், குரு, சாஸ்த்ரம் மற்றும் அறியாமையை தன்னிலிருந்து வேறாக பார்ப்பதில்லை. --37

அந்த அறிவானது வாக்கியத்தினால் உண்டான பின்பு தன்னை இந்த உலகத்திலிருந்து வேறாக அறிகின்றானா, இல்லையா என்றால், கூறுகிறோம். ஆத்மாவின் இருப்பு மாத்திரம் இருக்கிறது என்று அறிகிறான் . அதை கூறுகிறோம்.

எப்படி தடியின் உண்மை இயல்பை அறிந்தபின் அதில் ஏற்றிப்பார்க்கப்பட்ட பாம்பு அதுவே என்று தெரிகின்றதோ அப்படியே வாக்கியத்தினால் உண்டான ஞானத்திற்கு பிறகு இந்த உலகும் ப்ரம்மரூபமாகவே இருக்கிறது. --38

அது எப்படி என்றால்

**பஷ்யன்** (ப்ரு 4-3-2311) என்று எதை வேதாந்த வாக்கியம் விலக்கி கூறுகின்றதோ அதை அந்த ஆத்மாதத்துவம் பிரிவற்றதாக, அழிவற்றதாக , முன்-பின் இல்லாததாக நீ என்ற வார்த்தையினால் குறிக்கப்படுகின்றது. --39

நீ அதுவாக இருக்கிறாய் என்பதாகிய வாக்கியத்தினால் உண்டான அறிவினால் மாத்திரமே அறியாமை விலகுகிறது. ஏனென்றால் -

ஆத்மாவிலிருந்து வேறான ஒன்று இல்லை என்று வேதாந்த வாக்கியம் நிரூபிக்கின்றது. அதனால், வேறு வகையாக நாம் புரிந்து கொள்ள வழியில்லாததால் அதுவே (ஆத்மா) விதை போன்ற காரணமாகின்றது. கனவு விழிப்பு போன்ற நிலைகளுக்கு . --40

இந்த பொருளை திடப்படுத்த இந்த உதாரணத்தை கூறுகிறோம்.

**விஷ்வன், தைஜசன்** இருவருக்கும் காரணம் (ஆத்மா) கார்யம் (அனாத்மா) ஆகிய இரண்டும் கிரகணம் ஆகின்றது (அறியப்படுகின்றது). **ப்ராஞ்ஞனுக்கு** ஆத்மா மட்டுமே தெரிகின்றது. இவை **துரியம்** எனப்படும் ஆத்மாவிற்கு இல்லை. --41

ஆத்மாவை தவறாக (வேறாக) அறிபவர் கனவு நிலையிலுள்ளவர் போலவும், அதை முழுவதும் அறியாதவர் தூக்க நிலையிலுள்ளவர் போலவும் உள்ளனர். இப்படிப்பட்ட எதிரான நிலைகளின் அழிவினால் அவர்கள் **துரியம்** எனப்படும் ஆத்மாவை அடைகிறார்கள். --42

இதற்கு **ஸ்ரீ பகவத்பாதரின்** உதாரணம்

தூக்கம், இருள் ஆகியவையான அறியாமையின், தூக்கத்திற்கும், விழிப்பு நிலைக்கும் விதை போன்றது ஆத்மாவின் அறிவு உண்டானதால் அவை எரிந்து போகின்றது. மீண்டும் முளைக்காத வறுக்கப்பட்ட விதைபோல ஆகின்றது . --43

இப்படியாக வணக்கத்திற்குரிய **கௌடபாதரும்**, திராவிட குலத்தவரான **பாஷ்யக்காரரும்** ஆத்மாவே அறியாமை என்ற உடலின் காரணமாக அஹங்காரம் முதலியவைக்கு சாக்ஷியாக இருக்கிறது என்று. --44

அதற்கு வேறாக (தவறாக) எண்ணியதை போல, அதற்கு காரணமான அறியாமை (முழுவதும் அறியாமையும்) அனாத்மாவின் இயல்பே என்று கூறுகிறோம்.

இது அறிவு, நான் அறிபவன், இது அறிபடுபொருள் என்ற மூன்றும் வேறுபாடில்லாமல் எவர் அறிகிறாரோ, அந்த ஆத்மாவிற்கு வேறானதாகவே இருக்கிறது அறியாமை. --45

இது எப்படியோ அதனால், மாற்றம் இல்லாமலே அறியக்கூடிய காரணத்தினால் இந்த உலகத்திற்கு காரணமாக உள்ள அறியாமையே அதனுடன் சம்பந்தப்பட்டுள்ளது. மாற்றமடையாதன்மை இல்லாத ஆத்மாவுடன் இல்லை என்பதை கூற உதாரணம்.

மாற்றமடையும் தன்மையுள்ளது எப்படி உருவம் மற்றும் ஒளியுடன் கூடியிருக்கின்றதோ அப்படியே இன்பம் - துன்பம் முதலியவைகளுக்கும் மாற்றமடையும் தன்மையுடைய சித்தத்துடனேயே இருக்கிறது. --46

இந்த பொருளையே நேர் - எதிர்மறையாக காட்ட கூறுகிறோம்.

தூக்கத்தில் எந்த மாற்றமும் இல்லாத காரணத்தால் சித்தம் அங்கே அடங்கியிருப்பதால் மாற்றமில்லாத பார்ப்பவரான ஆத்மா மட்டுமே இருந்துமே வேறு எதனுடைய சம்பந்தமும் சிறிதும் இல்லை. --47

அந்த உடலில் இருக்கும் ஞானமே உருவான ஆத்மாவே.

எப்படி தூக்கத்தில் உண்டோ அது போலவே கனவு மற்றும் விழிப்பிலும் பார்த்து கொண்டிருப்பவராக இருந்தும் மாற்றமடையதன்மையுடையதானால், இரண்டாவதுடன் எந்த தொடர்பும் கொள்வதில்லை. --48

இப்படி அறிந்து கொண்டவருக்கே நான் எனது என்ற பொய்யான தொடர்பு இருப்பதில்லை. எப்படி, எரிகின்ற விளக்கை கையில் கொண்டவரின் முன்பு எப்படி இருட்டு இருப்பதில்லையோ. --49

இந்த விஷயத்தில் உதாரணம்

ஞானத்திற்கு முன்பு எப்படி துவைதத்தை தவிர வேறு எதுவும் உண்மையாக தெரிவதிலலையோ அப்படியே, ஞானத்திற்கு பிறகு புத்தி முதலியவை ஆத்மாவுடன் உள்ள தொடர்பு பொய்யாகின்றது. --50

இப்படி நிச்சயமான அறிவுடைய ஞானி கொள்ளுதல் , தள்ளுதல் இல்லாத ஆத்மாவை அறிந்து கொண்டே

எல்லாவற்றையும் ஏற்கிறான். எல்லாவற்றையும் எதிர்கிறான். வ்யவஹாரத்தில் உண்டாகும் பிரிவே ஏற்றல், உண்மை நோக்கில் உள்ள இரண்டற்ற தன்மையே எதிர்த்தல் .--51

எல்லாம் கூறப்பட்டதால் முடிக்கிறோம்.

பரமாத்மாவின் விஷயமான எந்த வேதாந்த வாக்கியங்களின் தீர்வோ, புத்தியில் இருக்கும் இருட்டை போக்கும் அறிவான அதையே இங்கு என்னால் கூறப்பட்டது. --52

இதுவரை இங்கு கூறினோம்.

என்னை தவிர ஆத்மாவை அறிபவர் இல்லை. என்னை தவிர ஆத்மாவை அறியாதவர் இல்லை. இதை எவர் தெரியாமல் தெரிந்து கொள்கிறாரோ அவரே மிக சிறந்த ஞானியாவார். --53

இதுபோல் ஆத்மாவை அறிந்தபின் **ப்ரவ்ருத்தியில்** இறங்க வேண்டுமா, இல்லை **நிவ்ருத்தியில்** (செயலில்லாமல்) இறங்க வேண்டுமா, இல்லை மனம் போன போக்கில் எப்படியாவது இருக்க வேண்டுமா என்றால் கூறுகிறோம்

அறிபவரிடம் வேறில்லாமல் இது (ஆத்மா) இருக்கும் காரணத்தினால் அதனை சார்ந்துள்ளது. அதனால் செயலோ செயலற்ற தன்மையோ இது ஓரக்கண்ணாலும் பார்க்காது. --54

எப்படி இது அறிபவரிலிருந்து பிரிவற்றது என்றால்.

ஆத்மாவை பற்றிய அறிவு உண்டாவதற்கு முன்பு வெளிவிஷயங்களை சார்ந்து இது உள்ளது. ஆனால், இந்த உலகம்(சம்சாரம்) முழுவதுமாக நீங்கியபின் ஆத்மாவை மட்டும் சார்ந்திருக்கிறது என்று வேதமும் கூறுகின்றது. --55

இதுபோல் அறியப்பட்ட உண்மைபொருளை ஆத்மாவிற்கு வேறு ஒன்றை சார்ந்து இருப்பதில்லை என்று முன்பே நிராகரிக்கப்பட்டதால் என்பதை கூறுகிறோம்.

எதனால் சம்சாரத்தின் உண்மை தன்மையை அது நீக்குகின்றதோ அதனால் செயலற்ற தன்மையும் செயலை நீக்குவது போல சரியான அறிவு ஆனது நீக்குகிறது. --56

ஒரு தடவை உண்டாவதினாலேயே அறிவானது முழுவதுமாக எல்லா சம்சாரத்தையும் நீக்குகின்றது. அறியாமையை மாத்திரம் நீக்குவதால் அழிகின்றது. வேறு பொய்யான அறிவு இல்லாததால். --57

கால – நேரம் இவைகளுடன் எந்த தொடர்பும் இல்லை. அவை அறியாமையால் உண்டானதால், உண்டாகாத அழியாத என்று அறியாமை அங்கு எள்ளலவும் இல்லை. அவை எல்லாம் அழிவதால். --58

ஆத்மாவின் சரியான அறிவினால் மோகமும் அதன் காரியங்களும் எரிக்கப்பட்டதால், வேறு எந்த காரியமும் பாக்கியிருப்பதில்லை. எல்லாம் ஒரே நேரத்தில் அழிக்கப்பட்டதால். --59

அறியாமையின் உண்மை தன்மை நீக்கத்தாலேயே, அதன் காரியத்துடன் அறியாமை அழிந்து போவதால் வேறு எதுவும் பாக்கி இருப்பதில்லை என்று கூறப்பட்டது. இப்போது பரம்பரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட வேறு வழியையும் கூறுகிறோம்.

கயிறில் பாம்பு தோற்றம் நீக்கப்பட்ட பின்பும் ஒருவனுக்கு நடுக்கம் முதலியவை எப்படி நீங்குவதிலலையோ, அப்படியே ஆத்மாவை அறிந்தவருக்கும் அறியாமையும் அதன் காரியங்களும் நீக்கப்பட்ட பிறகும் (**பிராரப்தத்தினால்**) **விக்ஷேபத்தை** அடைகிறார். --60

ப்ரவ்ருத்தி (செயல்) யின் காரணமானது அழிக்கப்பட்டதால்.

எப்படி வேரானது அழிந்து விட்ட மரம் கருகி நாசமடையுமோ, அப்படியே சரியான அறிவை அடைந்தவருக்கும் உடல் அழிவதாலேயே விடுதலையும் உண்டாகும். --61

இப்போது **அலேபகம்** (பாப – புண்ணியம) இல்லாத காரணத்தால் முக்தன் எதையும் செய்யலாம் என்ற வாதத்தை நீக்கும் பொருட்டு கூறுகிறோம்.

அத்வைத அறிவை அடைந்தவர் எப்படிவேண்டுமானாலும் இருக்கலாம் என்றால் நாயிக்கும் அவருக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும் சரியில்லாத (கெட்ட) உணவை உண்ணுவதில். --62

ஏன் அப்படி ஆகாது என்றால்

பாவத்தினால் உண்டாவது அறியாமை அதனால் கெட்ட செயல்கள் உண்டாகின்றது . புண்ணியத்தால் உண்டான அறிவு இருக்கும் போது பாப காரியம் எங்ஙனம் நடக்கும் . எங்கு புண்ணியம் தள்ளபட்டதோ. --63

எப்படி இருக்கலாம் என்பதை விலக்க (நீக்க) **கிருஷ்ணரும்** கீதையில் செயலில் செயலின்மையை அதனால் கூறுகின்றார் . எவருக்கு எல்லா காரியங்களும் ஆசையோ, வெறுப்போ வைப்பதில்லையோ அவரே ஞானி என்று கூறுகிறார். --64

எல்லா செயலுக்கும் காரணமான அறியாமையை நீக்கும் அறிவை பற்றிய விஷயத்தை விடுவோம். முக்தி அடைய விரும்பும் நிலையிலும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற கொள்கை இருக்க முடியாது என்பதை கூறுகிறோம்.

எவருக்கு எந்த விஷயத்தில் வைராக்யம் உண்டாகிறதோ அவர் அதில் ப்ரவ்ருத்திப்பதில்லை. மோக்ஷம் அடைய விரும்புவருக்கோ மூன்று உலகத்திலும் வைராக்யம் இருப்பதால் அவர் எதை விரும்புவார். --65

அதற்கு உதாரணம்.

பசியின் கொடுமையால் அவதிப்படுபவனும் விஷம் உண்ண விரும்புவதில்லை எனும் போது இனிப்பு பலகாரம் (அல்லது ருசியான) அருந்தி வயிறு நிரம்பியவன், பைத்தியமாக இல்லாது இருந்தால் ஏன் அதை உண்ணுவான். --66

ஆத்மாவின் உண்மைதன்மையை அறிந்தவருக்கு மனம்போன போக்கில் வாழ்வது என்பது சிறிதும் ஒத்துவராது. மோக்ஷம் அடைய விரும்புபவருக்கு அப்படியே என்பது எதனாலோ. அதனால் -

மனதுடைய வ்யவஹாரம் இருக்கும் நிலையில் எவருக்கு ஆசை

உண்டாகின்றதோ, அவருக்கு அறிவு உண்டாகவில்லை என்பதற்கு அது குறி, எப்படி நெருப்பு பற்றி எரியும் மரத்தில் பசுமை காணப்படாதோ அப்படியே. --67

புருஷன் அடைய வேண்டிய எல்லாவற்கும் காரணமான இந்த ஆத்மாவை பற்றிய அறிவு எப்படி உண்டாகின்றது என்றால் கூறுகிறோம்.

எவர் திருடாமை முதலியவைகளும், வெறுப்பு முதலியவைகளும் இல்லாது இருக்கிறாரோ அவருக்கே அறிவு உண்டாகிறது. வெளியில் அலையும் மனதை உள்ளவருக்கு இல்லை. --68

ஆத்மாவின் அறிவு உண்டான பின்பு அறியாமையின் காரியமான செயல்களின் நீக்கம் போல, கலவாமை போன்றவைகளும் நீங்குமா இல்லையா என்றால் நீங்காது என்று கூறுவோம். என்ன காரணத்தினால் என்றால் பரமாத்மாவினும் முக்தரினும் வேறாக நிவ்ருத்தி சாஸ்த்ரம் இல்லாத காரணத்தினால் அவை நீங்குவது இல்லை, ஏதோ ஒரு கட்டளையினால் அல்ல. எப்படி இது என்றால் கேள்.

ஆத்மாவின் அறிவு உண்டானவருக்கு வெறுக்காமை முதலிய தன்மைகள் (குணங்கள்) எந்த முயற்ச்சியும் இல்லாமல் உண்டாகும். அது வேண்டி எந்த முயற்ச்சியும் (சாதனையும்) அவசியமில்லை. --69

ஏனென்றால் இந்த குணங்களின் உதவி வேண்டியிருக்கிறது. அதனால்

இந்த புத்தகத்தை புரிந்து கொள்ள விரும்புகின்றவர் களவாமை முதலிய குணங்களை முயற்ச்சி செய்து கடைபிடிக்க வேண்டும். தவறான வழிகளை முயற்ச்சி செய்து விட வேண்டும். அப்படி செய்தால் அவருக்கு இதில் கூறப்பட்ட பொருள் விளங்கும் . --70

இவருக்கு இந்த புத்தகத்தை கொடுக்கக் கூடாது.

சம்சாரத்தில் வைராக்கியம் இல்லாதவருக்கு எல்லா ஆசைகளிலும்

இருந்து விடுபடாதவருக்கு, **யமம், நியமம்** போன்றவைகளை கடைபிடிக்காதவருக்கு கொடுக்க கூடாது வேதாந்த பொருளை விளக்கும் இந்த புத்தகத்தை . --71

கூறப்பட்ட பொருளை கூறப்பட்டது போல முறையாக புரிந்து கொண்டு பிறகு வேறு ஒன்றும் அறிய வேண்டியது இல்லை . கர்மங்கள் எல்லாவற்றையும் விடாதவருக்கு இந்த அறிவு உண்டாவதில்லை. --72

எல்லா கர்மங்களையும் விட்டவர்கள், ஆத்மாவை அறிய முழு ஈடுபாடு உள்ளவர் , எவருக்கு எந்தவித ஆசையும் இல்லையோ, அப்படிப்பட்ட சாந்தமான துறவிகள் இந்த கூறப்பட்ட பொருளை அறிகின்றனர் (உணர்கின்றனர்). --73

**ஸ்ரீ சங்கராசாரியாரின்** பாதங்களை தொழுததினால் அடையப்பட்டது இந்த அறிவு, பரமஹம்ச துறவிகளின் மன இருளை போக்கும் இது, அதனால் இதில், எந்த சந்தேகமும் இல்லாமல் (பரம்பரை இல்லாதது என்று ), நற்குணமுடைய அறிவாளிகள் இதை விசாரிக்கட்டும். சிறந்தது தவறானது என்பதை நிச்சயம் செய்ய அவர்களே வல்லவர்களானதால். --74

அழகாக உரைக்கப்பட்டதும் நல்ல மனம் இல்லாதவர்கள் புரிந்து கொள்ள முடியாது. எப்படி சூரியனை ஆந்தை காண்பதில்லையோ, அதுபோல, நல்ல மனம் உடையவர்களுக்கு தெளிவாக புரிகின்றது. எப்படி யோகிகளுக்கு புதைத்து வைக்கப்பட்ட (புதையில்) தங்கம் தெரிகின்றதோ. --75

**விஷ்ணுவின்** பாதங்களிலிருந்து உண்டான எல்லா துன்பங்களையும் போக்கவல்ல கங்கையை சிரசில் **சிவன்** தாங்கியது போல **ஸ்ரீ சங்கராசாரியாரிடம்** இருந்து வந்த எல்லா துன்பங்களையும் போக்க வல்ல இந்த வித்யையை நான் கற்றேன். அதை எல்லோரும் பெற பிறப்பிறப்புகளால் துன்ப மடைகின்றவர்களுக்காக நான் கருணையினால் கூறினேன். --76

வேதாந்தத்தினால் உண்டாகும் தானே ஒளிரும், நம்முடைய அறிவின் இருளை போக்க வல்ல அந்த அறிவானது புலன்களுக்கு அப்பாற்பட்டது

என்றாலும் அனுபவ விரோதமில்லாததை நம்முடைய இந்த பிறப்பிறப்பு என்னும் சம்சாரத்தின் விதையை போக்கவல்ல வித்யையை அறிவாளிகளுக்கெல்லாம் குருவான **ஸ்ரீ சங்கராசாரியார்** நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் விளக்கி விளங்க செய்த அவருக்கு என்னுடைய வணக்கம். --77

ஒவ்வொரு சுலோகத்திற்கும் சம்பந்தத்தையும் நானே கூறிவிட்டேன். எவர் இதை புரிந்து கொள்கிறாரோ அவர் **நைஷ்கர்ம்யசித்தி** என்ற இந்த புத்தகத்தினை எளிதாக புரிந்து கொள்வார். --78

**ஸ்ரீ அருணாசலேஸ்வரார்பணமஸ்து.**